# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE.

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்

G. A. VaidyaRaman, B. A. EDITOR.

புஸ்தகம் 4. Vol. 4. | பரீதாபி ஹு சித்திரை மீ, APRIL, 1912. | ஸஞ்சிகை 4. No. 4.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... ... | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompained with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கு வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ஙிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்பிரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 | ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |

**வியாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். எவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக கிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருப சேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பேனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## SPECIAL ARTICLES.
## விசேஷ வியாஸங்கள்.

### CATTLE BREEDING.

By

V. KRISHNAMURTHI.

*Veterinary Assistant.*

கால்நடைகளை வளர்த்தல்.

விவஸாயம் விருத்தியாவதற்கும், நாகரிகம் அதிகரிப்பதற்கும் கால்நடை (ஆடு மாடுகள்) முக்கியமானவை யாதலால் அவை ஜனங்களின் அபிவிருத்திக்கும் செல்வப் பெருக்கிற்கும் மிகவும் அவசியமென்பது எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம். அப்படி யிருந்தும் இந்த தேசத்தில் ஸாதாரணமாய் நல்ல மாடுகளே இல்லாமலிருப்பது அதிசயமாயிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், ஜனங்கள் கால்நடை விருத்திசெய்வதைப் பற்றி பூராவாகவும், ஸரியாகவும் கவனிப்பதில்லை.

உழுது பயிரிடுவதில் அக்கரையுள்ள மிராசுதார்கள் இந்த விஷயத்தைப்பற்றி நன்றாய் கவனிக்க வேண்டியவர்கள். கால்நடை விருத்தி செய்தல், தானியங்களை விதைத்து அறுபடி செய்வதைப்போல் அவ்வளவு லாபகரமாயில்லை யென்று அவர்கள் நினைக்கிறார்கள். உழவுகாலத்தில் தங்களுக்குத் தேவையான மாடுகளை விலைக்கு வாங்கி அவைகள் அவசியம் இல்லாதபோது விற்றுவிடுகிறார்கள். இது முற்றும் ஸரியல்ல; ஏனெனில் கால்நடை விருத்திசெய்தலை ஸரியானபடி நடத்திவந்தால் விவஸாய விஷயத்தில் மிகவும் அனுகூலமாயிருப்பதும் தவிர நாளடவில் லாபகரமாயுமிருக்கும்.

கால்நடை விருத்திசெய்வதின் உபயோகம் வெகு அதிகமாயிருப்பதால் ஸரியானபடி விருத்தி செய்வதற்கு விருத்தி செய்பவன் நிரம்பவும் பொறுமையுள்ளவனாக இருக்க வேண்டும்; நல்ல மேய்ச்சல் தரையும் அவன் கைக்குள் இருத்தல் அவசியம். இவைகளையும் விட மேலாக அவனுக்கு அந்தத் தொழிலில் ஸ்வபாவ புத்தி யிருக்கவேண்டும். விருத்தி செய்கிற விஷயத்தில் ஒரு இடம், அவ்விடத்தின் சிதோஷ்ண ஸ்திதி, நிலத்தின் குணம், ஆகிய இவைகள் முக்கியமான குணா குணங்களை உண்டுபண்ணுகின்றன. ஆகிருதியிலும், மாதிரியிலும் இன்னும் மற்ற விஷயங்களிலும் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாஸமுள்ள பல ஜாதி மாடுகள் இருப்பதற்கு முக்கிய காரணங்கள் இவைகளே. நெல்லூர், மைஸூர் போன்ற சில இடங்களுக்கு குற்றம் குறைவில்லாமல் சில ஜாதிகள் உற்பத்தியாகின்றனவென்கிற சிலாக்கியமான பெயர் வந்திருக்கின்றது. அந்தப் பிரதேசங்கள் ஸாதாரணமாய் நல்ல வடிகால் உள்ளவைகளாயும், மரங்கள் நிறைந்து தழைத்து உள்ளனவைகளாயும் நிரம்ப ஜல ஸௌக்கிய முள்ளவைகளாயும், நல்ல மேய்ச்சல்தரையுள்ளவைகளாயு மிருக்கின்றன. இவ்விடங்களில் புஷ்டியான தீனி வருஷம் முழுமையும் ஏராளமாய்க் கிடைக்கும். பூமி ஈரக்கசிவாயு மிருக்கக்கூடாது. ஏனென்றால் ஈரக்கசிவானவிடங்களில் சுருசுருப்பாயும் திடமாயுமுள்ள மாடுகள் உண்டாவதில்லை, மாடுகளின் தேகத்து எலும்பு வளர்ந்து உறுதியாவதற்கு அவசியமான சுண்ணம்பு உப்புகளும் அந்த பூமியில் குறைவாக இருக்கக்கூடாது.

விருத்தி செய்வதைப்பற்றி கவனிக்கவேண்டியவைகளில் முக்கியமானது ஸரியான ஜாதி மாடுகளைத் தேர்ந்தெடுத்தலாம். இதில் அந்தந்த தேசத்திற்கு உரித்தான ஜாதி மாடுகளுடைய ஸ்வபாவங்களையும் குணங்களையும் நன்றாய் கவனிக்கவேண்டும். மாடுகளின் வர்க்கத்தை முன்னிலும் அதிக சிலாக்கியமாக்க வேண்டுமென்று பிரயத்தனஞ் செய்வதில்,

நல்ல மேய்ச்சலும், தீனியும் ஏராளமாயுள்ள ஒரு தேசத்து எருதை, சிறியதாயும், தாழ்ந்ததாயு மிருக்கிற மாடுகளுள்ளதும், மேய்ச்சல் ஸ்வல்பமாயுமுள்ள மற்றொரு இடத்திற்குக் கொண்டுவருவது பிசகாய் ஏற்படும். எப்படியென்றால் இம்மாதிரி சேர்க்கையின் முடிவு, அந்தவிடத்தில் அகப்படக்கூடியதைவிட அதிக மேய்ச்சல் தேவையுள்ளதும், வேறு தீனி போட்டுக் காப்பாற்றுவது அதிகப் பணச்செலவுமான பெரிய தேகத்தோடுகூடிய மாடுகள் உண்டாகின்றன. மேலும் இந்த இடத்தினுடைய அஸௌக்கியமான நிலைமையினால் மாடுகள் பூர்வ ஸ்திதிக்குத் திரும்பவும் கூடும். இப்பிசகு நேரிடாமற் தவிர்க்க முக்கியமாய்க் கவனித்து மனதில் வைக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது, ஒரு இடத்தில் ஸாதாரணமாய்த் தென்படும் ஜாதியிலேயே முன்னிலும் அதிக பலமுள்ளதாயும், மேன்மையாயு மிருக்கக்கூடிய மாடுகளை உற்பத்தி செய்யவேண்டும். அவைகள் அங்கு அகப்படுகிற தீனியைக்கொண்டு ஜீவிக்கக்கூடியவைகளாயிருக்கவேண்டும். ஆகையால் அந்தந்த ஜாதியிலேயே உத்தமமான மாடுகளைத் தேர்ந்து பொறுக்கி எடுத்துக்கொள்ள வேண்டியதுதான் ஸரியான காரியம்.

விருத்தி செய்கிறவன் தானிருக்கிற பிரதேசத்திற்குத் தகுந்த ஜாதியைத் தேர்ந்தெடுத்த பிறகு அவன் கவனிக்கவேண்டிய விஷயம் "காளை," "பசு," இவைகளைப் பார்த்துப் பொறுக்கிக் கொள்ளவேண்டும். அவைகளிடத்திலிருந்துதான் கன்றுகள் தங்களுடைய ஸரியான உருவம், பலம், ஸ்வபாவம், மற்றுமுள்ள இதர நல்லவை கெட்டவை ஆகிய எல்லா குணங்களையும் அடைகின்றன. கால்நடைகளில் ஒரு ஜாதியை முன்னிலும் அதிகமாய் நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர வேண்டுமானால் அந்த சீர்திருத்தத்தை "காளை"யின் மூலமாய்ச் செய்வதுதான் உத்தமம். எப்படியெனில் ஒரு கெட்ட "பசு" ஒரே ஒரு கெட்ட கன்றைத் தான் ஈனக்கூடும்; ஒரு கெட்ட "எருதோ" வென்றால் அநேக கன்றுகளின் ஸௌக்கியத்தையும் பலத்தையும் கெடுத்துவிடக்கூடும். ஏதாவது ஒரு கெடுதலான விஷயமிருக்கிற ஒரு பசுவை நல்ல விஷயங்கள் பூர்த்தியாய் விருத்தியாயிருக்கிற ஒரு எருதுடன் சேர்ப்பதினால், அந்தக் கெடுதலான விஷயம் கன்றுகளினிடத்தில் தாவாமல் திருத்தலாம். கன்றுகளுக்கு ஒறுத்து வேலைசெய்வதற்கு வேண்டிய தசைபலம், வீரியம், தைரியம் ஆகிய இவ்விஷயங்கள் "எருதி"னிடத்திலிருந்தும், குணம், ஸ்வபாவம், தேக வளர்ச்சிக்கு வேண்டிய அவயவங்கள், ஆகிய இவைகள் "பசு" வினிடத்திலிருந்தும் வருகின்றன. ஆகையால் எருதிற்கு விசேஷதைரியமும் ஊக்கமு மிருக்கவேண்டும். அதன் தலை ரொம்ப பெரியதாகவாவது ரொம்ப சிறியதாகவாவது இருக்கக்கூடாது. நெற்றியும் தாவாய்கட்டைகளும் அகண்டிருக்கவேண்டும். கண்களும், காதுகளும் வெகு சுறுசுறுப்பா யிருக்கவேண்டும். மொத்தமாய் எருது பார்வைக்கு வெகு அழகாகவும் கம்பீரமாகவு மிருக்கவேண்டும். தேகத்திலுள்ள மூட்டுகள் பெரியனவாகவும் கைகால்களின் எலும்புகள் கட்டையாகவு மிருக்கவேண்டும். திருகல் முருகலான கால்களும், விரிகுளம்புகளு மிருக்கக்கூடாது. பசுவைவிட எருது ஒன்று அல்லது இரண்டு பிடி உயரமாயிருத்தல் அவசியம். பசுவோ என்றால் எருது அவ்வளவு பெரியதாயிருக்கக்கூடாது. ஆனால் கர்ப்பத்தில் சினை தாராளமாய் வளருவதற்கு இடையூறு இல்லாதபடி உடம்பு தழைத்திருக்கவேண்டும். கறவை மாடுகள் ஸாதுவா யிருக்கவேண்டியது ரொம்ப அவசியம். பால் தாராளமாயும் இலகுவாயும் கறப்பதற்கு இதைப்போல் முக்கிய காரணம்

வேறொன்றுமில்லே. ஆனல் நன்ருய்ப் பால் கறக்குமென்று தெரிந்து கொள்வதற்கு வேறு சில அடையாளங்களு மிருக்கின்றன. பசுவின் மடிபெரிதாயிருக்கவேண்டும். எவ்வளவு பெரிதோ அவ்வளவு நல்லது. சதைப்பற்று மட்டு மிருக்கக்கூடாது. அப்படி யிருந்தால் கறந்த பிறகு மடியின் பருமன் குறையாது. நல்ல மடியாயிருந்தால் பால் கறந்தவுடன் சுறுங்கின பைபோலப் பருமன் குறைந்துவிடும்.

"எருது," "பசு," இவைகள் பொறுக்குகிற விஷயத்தில் யதிர்ச்சையாய் அகப்படுகிற மாடுகளே, அவைகள் எவ்வகை அழகாயும், நன்ருயு மிருந்தாலும், நிவர்த்திக்கவேண்டும். ஏனென்ருல் அவைகள் தங்களுக்குத் தாய் தகப்பனுயிருந்த மாடுகளின் உருவத்தையும் குணங்களேயும் தங்களிடத்திலிருந்து உண்டாகிற கன்றுகளுக்குக் கொடுக்கக்கூடும். ரத்த ஸம்பந்தம் நெருக்கமாயிருக்கிற ஒரே வர்க்கத்திலுண்டானதான எருதுகளேயும் பசுக்களேயும் சேர்ப்பது யுக்தமல்ல. சிலாக்கியமான அபூர்வ விஷய மொன்றை ஏதாவது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தில் முத்திரையடித்ததுபோல நிரந்தரமாய் அமைத்துக்கொள்ளலா மென்கிற உத்தேசத்தோடு சிலர் இம்மாதிரி செய்கிருர்கள். அது ஒன்று இரண்டு தலேமுறைக்கு நடத்தினுல் பாதகமில்லே. அதற்கு மேற்பட்டால் கன்றுகளின் தேகம் மெலிந்து, வயது காலத்தில் அக்கன்றுகள் மலடாகவும் ஆகிவிடும். அப்படிக்கில்லாமல் நிதானமாய் யோஜித்து அடிக்கடி புதிய ரத்தம் கொஞ்சம் கலக்கும்படி ஏற்பாடு செய்துவந்தால் கன்றுகளின் உருவம் விருத்தியாகி அவைகள் வலுவாகவும் பலமாகவு மிருக்கும்.

பிறகு கவனிக்கவேண்டிய விஷயம், மாடுகளே எந்தவயதில் விருத்திசெய்ய ஆரம்பித்து எப்பொழுது நிறுத்தவேண்டுமென்பது. எருதுகள் விஷயத்தில் வயது அதிகமாவதற்கு முன் பசுக்களே குறைச்சலாகவும், வயது முதிர முதிர அதிக பசுக்களேயும் எருதுகளோடு சேர்ப்பது ரொம்ப ஸாதாரண வழக்கமாயிருக்கிறது. பசுக்களேயும் அதிக பாலியத்திலேயே சினேப்படுத்தி கன்று ஈனும்படி செய்யலாம். ஆனல் பசுக்கள் சினேயாயிருக்கும் போதும் கன்று போட்டபிறகும் அவைகளே விசேஷமான நல்ல நிலமையில் வைத்து ஆதரிக்கமுடியுமானல் தான் அப்படிச் செய்யலாம்.

பசுக்கள் மூன்று வாரத்திற் கொருமுறை பருவகாலமடைந்து மூன்று நாள் அந்நிலேமையிலிருக்கும். அப்பொழுதுதான் அவைகளே எருதுடன் சேர்க்கவேண்டும். இச்சமயம் கடந்தால் பசு சினேப்படுவதற்கு மறு மூன்று வாரகாலம் செல்லவேண்டும். "எத்தனே பசுக்களுக்கு எத்தனே எருது வேண்டும்" என்கிற விஷயத்தில், 40-பசுக்களுள்ள ஒரு மந்தைக்கு ஒரு பொலிகாளே யிருப்பதுதான் உத்தமமான ஏற்பாடு.

மாடு விருத்தி செய்வதில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயங்களில் மாடுகளுக்குத் தீனி போடுதல், கொட்டகை (தொழுவம்) கட்டுவித்தல் இவைகளேப்போல முக்கியமானவை வெறொன்றுமில்லே. இத்தேசங்களில் மாடுகளுக்குப்போடுகிற முக்கியமான தீனி யென்னவென்ருல், வைக்கோல், சோளத் தட்டை, புசும்புல், சிலவிடங்களில் மேய்ச்சல் இவைகளேத்தவிர, தவிடு, பருத்திக்கொட்டை, பிண்ணுக்கு, கொள்ளு, சோளம் முதலியவைகள். இவைகள்தான் நல்ல தீனி; ஆனல் தீனிபோடுவதனுல் எருதுகளின் தேகம் பெருக்காமல், பலமும், வலுவுமுள்ளவைகளாய் ஆவதற்குவேண்டியஜாக்கிரதையெடுத்துக்கொள்ள வேண்டும். கினி தேசத்துப்புல்லும் வளர்க்கலாம். அது கறவைமாடுகளுக்கு நல்ல தீனியாகும். பிண்ணுக்குகளில் அநேகவிதங்கள்

இருக்கின்றன. அவற்றுள் கடலை (மணயில்லாக் கொட்டை) பிண்ணாக்கும், எள்ளுப்பிண்ணாக்கும் மாடுகளுக்கு மிகுந்த புஷ்டியைக் கொடுக்கும்.

மேய்ச்சல் எப்போதும் அகப்படுகிறதில்லை. கோடை காலங்களில் நெற்பயிரிருக்கிற இடங்கள் தவிர வேறு இடங்களில் கிடைக்கவே கிடைக்காது. ஆகையால் புல் அகப்படாத காலங்களில் முதிர்ந்த மாடுகளை ஸௌக்கியமாயும் திடமாயும் வைத்துக்கொள்ள புல் வளர்த்து சேகரம் செய்யவேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. மேய்ச்சல் தரைக்குப்போய் மாடுகள் மேய்வதனாலுண்டாகும் கெடுதல்களில் முக்கியமானது என்னவென்றால், உபயோகமற்ற எருதுகளும், பசுக்களும் தாராளமாய் கலந்து, ஒன்றோடொன்றுசேர்ந்து, அதன்பலனாக கொஞ்சங்கூடப் பிரயோஜனமில்லாத ரொம்பத்தாழ்ந்த இளையவரிசையாகிய கன்றுகள் உண்டாகின்றன. இதை நிவர்த்திப்பதற்கு முக்கியமான மார்க்கம் ஒன்றுஉண்டு. அதாவது இப்படி நறுங்கலாய்க்கெட்டுப்போயிருக்கிற காளைக் கன்றுகள் பிறந்து ஒரு வருஷம் அல்லது 10 மாதத்திற்குள் விதை (காய்) அடிக்க வேண்டியது. அப்படிச்செய்தால் அவைகள் நலமடைந்து முன்னிலும் நல்லஸ்திதிக்கு வரும்.

இதன் பிறகு கவனிக்கவேண்டிய விஷயம் சினைமாடுகளை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்வதெப்படி என்பது. சினைமாட்டுக்கு ஸமீபத்தில் எருதுகள்போகக்கூடாது. சினைப்பட்டு 7, 8-மாதத்தில் கறவை நிறுத்தவேண்டும். லகுவாய் ஜீரணமாகக்கூடியதாயும் மலத்தை (சாணம்) இளக்கக்கூடியதாயுமிருக்கிற தீனியை அதற்குப்போடவேண்டும். எவ்வளவு புஷ்டியான தீனியாயிருந்தாலும் சாணத்தைக்கட்டு கிறகுணம் அதற்கிருந்தால் அந்த ஆகாரத்தை கொடுக்கக்கூடாது. காலை வேளைகளில் பனிபெய்து புல் ஈரமாயிருக்கும்போது சினைமாடுகளை மேயவிடக்கூடாது. குடிதண்ணீர் சுத்தமாயும் யதேஷ்டமாயுமிருக்கவேண்டும். ரொம்பக்குளிர்ச்சியாயிருக்கிற தண்ணீரை ஒருபோதும் குடிக்கலாகாது.

ஈனுதலின் (கன்று போடுதல்) காலம் ஸமீபிப்பதைத்தெரிந்துகொள்ள வழக்கமான சில அடையாளங்கள் உண்டு. அவைகளென்னவென்றால், மடி நன்றாய்ச்சுரந்து பருத்தல், கடை (பசுவின் நீர்தாரை) தளர்தல், மாடு அமைதியில்லாமல் துருதுருப்பாயிருத்தல், வலியினால் வாலை வீசுதல், முதலியன. இவ்வடையாளங்களைக்கண்டவுடன், வைக்கோல்பரப்பிய உலர்ந்ததரையுள்ள வேறு கொட்டகை (தொழுவம்)க்கு மாட்டைக் கொண்டுபோகவேண்டும். மற்ற சினைமாடுகள் அதன் ஸமீபத்தில் இருக்கக்கூடாது.

சினைமாடு ஸ்வபாவமாய் கன்று போடுகிற காலத்தில், கன்றின் தலையும் முன்கால்களும் முதலில்வெளித்தோன்றும். அப்பொழுது ஒத்தாசை யொன்றும் தேவையில்லை. ஈனுதல் ரொம்ப நாழிகைதாமதித்தாலாவது அல்லது கன்று வேறு மாதிரியாய் வெளித்தோன்றினாலாவது தான் ஒத்தாசை வேண்டும். மாடு கன்று போட்டவுடன் தொப்புள்கொடி ஸாதாரணமாய் அறுந்துவிடுகிறது. அப்படி அறுந்து போகாவிட்டால், ரத்தம் பெருகாமலிருக்கும் பொருட்டு தொப்புளிலிருந்து இரண்டு அங்குலம் விட்டுஒருமுடிபோட்டு கொடிமத்தியில் துண்டித்து விடவேண்டும். மாடு அதிகமாய் சோர்ந்து போகாமலிருந்தால், அதை நன்றாய் சுத்தம் செய்து, நல்ல தீனிபோட்டு, படுக்க வைக்கவேண்டும். வேறு ஒன்றும் அதற்குத் தேவையில்லை. வியர்வைவிட்டால் வைக்கோல் திரளை (பிரி) யால் நன்றாய்த் தேய்த்து, குளிர்காலமாயிருந்தால் சூடுள்ள ஒரு போர்வையை அதன்மேல் போடவேண்டும். ஏதாவது ஆகாரம் கொடுக்கிறதாயிருந்தால்

தவிட்டுக்கஞ்சியில் $\frac{1}{2}$ முதல் 1 அவுன்ஸ்வரையில் உப்புப்போட்டுக்கொடுப்பதுதான் உத்தமம். இளங்கொடி கன்றுபோட்டு ஒரு நாள் முதல் இரண்டு நாளைக்குள் ஸாதாரணமாய் விழுந்து விடும். அப்படி விழாமற்போனால் ஒரு பையின்ட் (சுமார் 3-ஆழாக்கு) ஜலத்தில்கொஞ்சம் வெல்லத்தைக் கரைத்துக் கொடுக்கலாம். அல்லது வெளியில் தொங்குகிறபாகத்தில் ஒரு பளுவைக் கட்டினால் அது பாக்கியிருக்கிறதை மெதுவாய் வெளியே இழுத்துக்கொண்டு வந்துவிடும். கன்றுகளைக் காப்பாற்றுவதில், "எருது" "பசு" இவைகளைவிட அதிகமாக கவனியாவிட்டாலும், அவைகளிடத்தில் அவ்வளவு கவனமாவது விருத்திசெய்பவன் செலுத்த வேண்டும். கன்றுபோட்டதும் சீயம்பாலை (முதற்பால்) கன்று குடிக்கவிடாமலிருப்பது இந்த தேசத்தில் வழக்கமாயிருக்கிறது. இது கன்றுகளுக்கு அதிக அஸௌக்கியம். ஏனென்றால் அந்த சீயம் பாலில் கடுமையான மலச்சிக்கலை நீக்கும்படியான குணங்கள் இருக்கின்றன. ஆகையால் கன்றுகள் அதைக்குடிக்கவேண்டியது அவசியம். மேலும் பிறகு வளர்கிற குளம்புகள் உருதியாய் இருக்குமென்று உத்தேசித்து, பிறந்தவுடன் இருக்கிற குளம்புகளைக் கிள்ளி விடுகிறார்கள். இதுவும் கெடுதல் தான்.

கன்றுகளுக்கு பால் நிறையவிடவேண்டும். இந்தகாலத்தில்தான் குறிப்பிட்ட காலங்களில் இவ்வளவு என்று அளந்து கொடுப்பதுபோல் வெகு ஜாக்கிரதையாய் பால் குடிக்கும்படி செய்யவேண்டும். பசுக்களையும் உடம்புக்கு யாதொரு அஸௌக்கியமும் வாராமல் ஜாக்கிரதையாய் கவனித்துவரவேண்டும். ஏனென்றால் தாய் மாடுகளுக்கு ஏதாவது அஸௌக்கியம் வந்தால், கன்றுகள் குடிக்கிற பால் கெட்டுப்போய் கன்றுகளுக்கும் அஸௌக்கியம் உண்டாகும். பிறந்து 3-வாரத்திற்குப் பிறகு கன்றுகளுக்கு இளம்பசும் புல்லும், பிண்ணாக்குத்தூள்களும் கொடுக்கலாம். 8 அல்லது 10-மாதம்ஆனபிறகு மாடுகள் கன்றுகளை பால் குடிக்கவிடுவதில்லை. கன்றுகளுக்கும் போதுமான தீனியும் புல்லும் தின்கிறபடியால் அதில் ஆசையிருக்கிறதில்லை.

கன்றுகளின் ஆகாரம் முதலான ஸுகாதார விஷயங்களை ஸரியாய் கவனிப்பதனால், தாய் மாடுகளைப்போன்ற அவ்வளவு திடமாயும் சுருசுருப்பாயுமுள்ள நிலைமைக்கு அவைகளைக் கொண்டு வரக்கூடும்.

வி. கிருஷ்ண மூர்த்தி.

## THE HINDU GIFTS BILL

BY

K. SRINIVASA AIYANGAR. B.A, B.L.

### ஹிந்துக்கள் தான மசோதா.

நமது தேசத்துத் தலைவர்களில் ஒருவரான ஆனரபிள் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்களால் சென்னை ராஜதானி சட்ட நிர்மாண ஸபையில் சட்டமாக ஏற்படுவதற்காக ஹிந்து கிப்ட்ஸ் பில் அதாவது ஹிந்துக்கள் தான மசோதா என்பதாக ஒரு பில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த பில் சட்டமாகும் பட்சத்தில் தற்காலத்தில் தகுந்த காரணமில்லாமல் ஹிந்துக்கள் உள்பட்டிருக்கிற நிர்ப்பந்தத்திலிருந்து அவர்களுக்கு விமோசனம் ஆகும்.

இப்பொழுது ஹிந்துக்கள் அனுஷ்டிக்க வேண்டிய சட்டம் இருக்கிற நிலைமையில் ஒரு ஹிந்துவானவன் தன்னுடைய ஸொத்தை தன் ஜீவதெசைக்குப் பிறகு ஜெனிக்கக்கூடியவர்களுக்கு இனுமாகக் கொடுக்க அபிப்ராயப் பட்டால் அந்த அபிப்ராயத்தை நிறைவேற்ற சட்டம் இடம் கொடுக்கவில்லை. இது பலவிதத்தில் கிரம விரோதமாய் இருக்கிறது. முதலாவது, ஒரு ஹிந்துவானவன் தற்செயலாகவோ அல்லது விசேஷ பரிசிரமத்தாலோ தகுந்த ஸ்திதிவந்தனாக இருப்பானாகில் தன்னைப்

போல் தன் ஸந்ததியில் உண்டாகிறவர்களும் தன்னிடத்திலிருந்து கிடைக்கும் ஸொத்துக்களை வீணுக. விரயம் செய்யாமல் அவைகளை ஸரியாக பரிபாலனம் செய்துகொண்டு வந்து க்ஷேமமாய் இருக்கவேண்டு மென்றும், தனக்கு அடுத்த ஸந்ததியிலுள்ளவர்கள் அவர்களுடைய முட்டாள் தனத்தினுலும் வீண் செலவினுலும் தங்களுடையவும் தங்களுடைய ஸந்ததிகளுடையவும் க்ஷேமக்குறைவை உண்டாக்காமல் இருக்கவேண்டு மென்றும், ஒரு அக்கரையும் கவலையும் அவனுக்கு உண்டாவது ஸகஜம். தன்னுடைய காலத்துக்குப் பிறகு ஜனிக்கக்கூடிய ஸந்ததிகள் தன்னுடைய ஸொத்துக்களை அடையும்படி யாகவே, தானே நேராக ஏற்பாடு செய்யக்கூடுமானுல் மேற்கண்ட அக்கரையும் கவலையும் தீரக்கூடும். இப்பொழுது, சட்டம் இருக்கிற நிலைமையில் ஹிந்துக்கள் இவ்விதம் செய்ய முடியாது. இரண்டாவது, மேற்சொன்ன தற்கால சட்டமானது நம்முடைய தேசத்து ஹிந்துக்களின் ஆசாரங்களையும் தர்மங்களையும் நிலைநிறுத்தின பிராசீன மகாரிஷிகளின் வசனங்களுக்கும் கொள்கைகளுக்கும் விரோதமாய்இருக்கிறது. ஸொத்துக்கள், ஜனித்திருக்கிறவர்களும், ஜனிக்கப்போகிறவர்களும், கர்ப்பத்திலுள்ளவர்களும், ஜீவிப்பதற்காக ஏற்பட்டிருக்கின்றன. அவர்களின் ஜீவனத்திற்கு ஹானி வரும்படியாய் ஸொத்துக்களை வியர்த்தமாக்குகிறவர்கள் நரகம் புகுவார்கள். அவர்களால் செய்யப்படும் எக்ஞ யாகாதிகள் வியர்த்தம் என்கிறதாக ரிஷி வசனங்கள் இருக்கின்றன. இவ்விதம் ஹிந்துதேச ஆசாரக் கொள்கைகள் இருக்க, நமக்குப் பின் ஜனிப்பவர்களுடைய க்ஷேமத்தைக் கருதி நம்முடைய ஸொத்துக்களை அவர்கள் அடையும்படி நாம் ஏற்பாடு செய்வதை சட்டம் ஏன் தடைசெய்கிறது என்று விசாரிக்கும் காலத்தில், அதற்குக் காரணம் சீமை அப்பீல் கோர்ட்டாரவர்களால் நாற்பது வருஷங்களுக்கு முந்தி பங்காள ராஜதானியிலிருந்து தங்கள் விசாரணைக்கு வந்த ஒரு கேஸில் அவர்கள் செய்த தீர்மானம் என்று ஏற்படுகிறது. அந்தக் கேஸில் அவர்கள் ஒரு ஹிந்துவானவன் தன் காலத்துக்குப் பிறகு ஜனிக்கக்கூடியவர்களுக்கு தன்னுடைய ஸொத்தை இனுமாகக் கொடுப்பதற்கு ஹிந்துக்கள் சட்டத்தில் இடமில்லை யென்று தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானத்தால் இந்தியாவிலுள்ள எல்லா ஹிந்துக்களும் கட்டுப்பட்டிருக்கிறோம். ஷை தீர்மானத்திற்கு ஆதாரமாக பங்காளதேசத்தில் அனுஷ்டித்து வரும் ஹிந்துக்கள் சட்டத்தை நிலை நிறுத்தினவரான ஜிமூதவாகனர் என்பவருடைய வசனத்தைக் கொண்டாடப்படுகிறது. அவருடைய வசனம் இவ்வித அர்த்தத்தைக் கொடுக்கிறதோ என்பது ஸந்தேகம். அவர் சொல்லுகிறதெல்லாம் இனும் என்பது ஒரு சேதனனை உத்தேசித்து செய்யப்படுகிற ஸொத்தினுடைய பரித்தியாகமென்கிறுர். அச்சேதனன் கொடுப்போரின் ஆயுளுக்குள் ஜனித்தவனுய் இருக்கவேண்டுமென்று அவர் சொல்லவில்லை. அவருடைய வசனத்திற்கு அவ்வித அர்த்தம் ஏற்படுத்தக் கூடுமானுலும், அவருடைய கிரந்தம் சென்னை ராஜதானியில் அனுஷ்டான மில்லாததால் அவருடைய வசனம் இந்த ராஜதானியிலுள்ள ஹிந்துக்களைக் கட்டுப்படுத்த யாதொரு நியாயமுமில்லை. இந்த ராஜதானியில் வழங்கிவரும் ஹிந்து சட்ட கிரந்தங்களில் மேற்கண்டபடி வசனமில்லை.

ஏற்கனவே சொல்லி யிருக்கப்பட்ட புராதனமான ரிஷிவசனங்களை கவனிக்கும் அளவில் நமக்குப் பிற்பட்டு லோகத்தில் ஜனிக்கும் ஸந்ததியிலுள்ளவர்கள் நம்முடைய ஸொத்தை அடையும்படி ஏற்பாடு செய்வது ஹிந்துக்களுடைய உத்தம தர்மம் என்பதாகத்

தெரியவருகிறது. இக்காரணங்களை உத்தேசித்து ஆனரபிள் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம் செய்யும் சீர்திருத்தத்தை நாம் அங்கீகரிக்கவேண்டியது நியாயமாயிருக்கிறது. சேஷகிரி அய்யருடைய பில் சட்டமாகும் பட்சத்தில் ஒரு ஹிந்துவினுடைய பிள்ளை துஷ்டனுகவும் வீண் செலவு செய்யக்கூடியவனுகவு மிருக்கும் பட்சத்தில் அந்தப் பிள்ளைக்கு ஸொத்தில் பராதீனம் செய்ய பாத்தியம் கொடுக்காமல் ஆயுள்உள்ள வரையில் அனுபவிக்க பாத்தியம் கொடுத்து, தகப்பன் ஆயுளுக்குப் பிறகு மேற்கண்டபிள்ளைக்குப்பிறக்கக்கூடிய பிள்ளைகளுக்கு ஸர்வ ஸ்வதந்தரத்துடன் ஸொத்தைக் கொடுக்கக்கூடும். தவிர, இச்சட்ட சீர்திருத்தம் ஏற்பட்டால் இந்த தேசத்தில் நவீனமாய் உண்டாயிருக்கும் வர சுல்க்கம் என்கிற துர்வாடிக்கை ஒருக்கால் குறைவுபடலாம். மாப்பிள்ளைகளுக்கு பணத்தைக் கொடுப்பதைக் காட்டிலும் தன்னுடைய பெண்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கு ஸொத்தை இனுமாக கொடுப்பதற்கு தகப்பனுர்கள் தயாராக இருப்பார்கள்.

ஆனுல் பிரஸ்தாபிக்கிற சட்டத்துக்கு ஒரு விதமான ஆக்ஷேபம் செய்யக்கூடும். அச்சட்டம் இடம்கொடுக்கும் ஏற்பாட்டினுல் ஸொத்துக்கள் பராதீனத்துக்கு யோக்கியமில்லாமல் கொஞ்சகாலம் கட்டுப்பட்டிருக்கும். பொதுவாக அப்படிக் கட்டுப்பட்டுப் போவதினுல் தேசத்தினுடைய க்ஷேமத்திற்கும் அபிவிர்த்திக்கும் இடையூறு உண்டாகும். மேலும் நாம் நம்முடைய ஸந்ததியிலுள்ளவர்களுக்கு எது நலமென்று உத்தேசிக்கிறேமோ அதுவே அவர்கள் காலத்தில் அவர்களுக்கு கஷ்டகரமாய் முடியலாம். ஸந்ததிகளைப் பற்றி நாம் கவலைப்படுவதற்கு ஒரு எல்லைவேண்டும். இவ்விதமாய் ஏற்படக்கூடிய ஆக்ஷேபங்களை கவனித்தே பிரஸ்தாப பில் ஏற்பட்டிருக்கிறது. ஷை பில்லினுல் ஸொத்தை சாசுவதமாக பராதீனத்திற்கு யோக்கிய மன்னியில் கட்டுப்படுத்த அதிகாரம்கொடுக்கப்படவில்லை. இந்த பில்லினுல் ஸொத்துக்கள் கட்டுப்படுவதெல்லாம் ஸொத்துக்காரன் ஜீவதெசைக்குள் ஜெனித்தவர்களுடைய தலைமுறைமட்டில் தான். இங்கிலீஷ்க் காரர்களுக்கு ஸொத்துக்களைக் கட்டுப்படுத்துவதே பிடிக்காது. ஆனுல் அவர்களுடைய சட்டத்தில் கூட இதற்குமேல்ப் பட்டு இருபத்தியோர் வருஷங்களுக்கு ஸொத்துக்களைக் கட்டுப்படுத்த இடமிருக்கிறது. ஹிந்துக்கள் சட்டத்திலே ஸொத்துக்களை கட்டுப்படுத்தக்கூடாது என்று யாதொரு நியாயமு மில்லை, இந்தியாவிலுள்ள ஹிந்துக்களைத்தவிர இதரஜாதிகளுக்கும் ஹிந்துக்களுக்கு இப்போது உத்தேசிக்கிறபடி ஸொத்துக்களை கட்டுப்படுத்திவைக்க சட்டமிடங் கொடுக்கிறது. பிரஸ்தாப பில்லினுல் ஹிந்துக்களும் இந்தியாவிலுள்ள மற்றஜாதிகளும் ஒரே நிலைமையில் வைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறதே தவிர வேறில்லை. ஆகையால் ஆனரபிள் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற பில் சட்டமாகும் பட்சத்தில் எல்லா விதத்திலும் ஹிந்துக்களுக்கு நலமாயிருக்கும்.

கே. ஸ்ரீநிவாஸய்யங்கார்,

## CHOLAM SMUT

BY

V. ANANTHARAMAN.

## சோளப்பயிரில் தோன்றும் பூஞ்சணம் அல்லது கரி நோவு.

சோளப்பயிர் இந்த தேசத்தில் பெரும்பாலும் எவ்விடத்திலேயும் பயிரிடப்படுகின்றது. சில ஜில்லாக்களில் சோளப்பயிரில் ஸ்மட் அதாவது பூஞ்சணம் அல்லது கரி நோவு என்று சொல்லப்படுகிற ஒருவித நோய் தோன்றி, பயிரிடுவோர்களுக்கு ஏராளமான நஷ்டத்தை உண்டுபண்ணுகிறது. கதிர் காண்பதற்கு முன் வளர்ந்துகொண்டிருக்கும் பயிரில் நோயினால் பீடிக்கப்பட்ட செடிகளுக்கும், நோய் தாக்கப்படாத செடிகளுக்கும் வித்தியாஸம் தோன்றுவதில்லை. பூ வெளிப்படும் ஸமயத்தில் மாத்திரம் இந்த வியாதி நன்றாய்த் தெரியும். அப்போது கதிரிலுள்ள ஒவ்வொரு தான்யமும் முற்றி சோளவிதைபாக ஆகவேண்டியிருக்க, அப்படிக்காகாமல் ஒவ்வொரு தான்யமும் ஒருவித கருமை பஸ்மம்போன்ற தூள்களினால் நிரப்பப்பட்டிருக்கிறது. நோயினால் பீடிக்கப்பட்ட தான்யங்கள், நோயற்ற மற்ற தான்யங்களைவிட பெரிதாய்த்தோற்றும். தவிர, அளவுக்குத் தகுந்தபடி சோளப்பயிரில் தோன்றும் இருவகைப் பூஞ்சணத்தையும் வெகுவாய் அறிந்து கொள்ளலாம். அவைகளில் நீளப்பூஞ்சணம் என்ற ஒரு வகை நோயினால் பீடிக்கப்பட்ட தான்யங்கள் வெகு பெரியனவாகின்றன. மற்றோர் தினுஸை குட்டைப் பூஞ்சணம் என்று சொல்வார்கள். நோயினால் பீடிக்கப்பட்ட தான்யங்களின் மேல்புறம் சாம்பல் நிறமும் அதற்குள் கறுப்புத்தூளும் நிறைந்திருக்கும்.

ஒவ்வொரு கதிரிலும் பூஞ்சணம்பூத்த தான்யத்தின் எண்ணிக்கை அதிக வித்தியாஸமாக காணப்படும். சில கதிர்களில் ஒன்று அல்லது இரண்டு விதைகள் மாத்திரம் நோய் தாக்கப்பட்டனவாகவும், மற்ற சில கதிர்களில் பேர்பாதி விதைகளுக்குமேல் பூஞ்சணம் பூத்தனவாகவும், சில கதிர்களிலோ கதிரிலுள்ள தான்யமுழுவதும் நோய் தாக்கப்பட்டதாகவும்தெரியும். மேற்சொன்ன இருவகைப்பூஞ்சணத்தில் குட்டைப்பூஞ்சணமே மற்றவகையைவிட அதிக நஷ்டத்தை உண்டுபண்ணுகிறது. பூஞ்சணம் பூத்த தான்யங்கள் முற்றும்போது அவைகளின் மேல்தோல் தனியாய் உடைந்து அல்லது காற்றினால் பிக்கப்பட்டு அவைகளிலுள்ள கறுப்பு பஸ்மம் சிதறப்படுகிறது. தான்யத்தை கதிரிலிருந்து வேறுபடுத்த களத்தில் ஒப்படி செய்யும்போது, மேலே சொன்ன கறுப்புத்தூள் சிதறப்பட்டு களத்திலுள்ள ஒவ்வொரு தான்யத்துடனும் நன்றாய்க்கலந்துவிடுகிறது. கறுப்பு பஸ்மத்திலுள்ள ஒவ்வொரு துளியும் நோயற்ற விதைகளின் மேல்புறங்களில் ஒட்டிக்கொள்ளுகிறது. அவ்விதைகளை அடுத்த வருஷத்தில் விதைக்கும்போது, அவ்விதைகளிலிருந்து உண்டாகும் பயிரும், பூஞ்சணத்தால் பீடிக்கப்படும்.

சோளப்பயிரில் தோன்றும் பூஞ்சணத்திற்கு அச்செடிகளின் உள்ளே பயிராகும் காளானைப்போன்ற ஒருவகைச் செடிகளே காரணம். நோயினால் பீடிக்கப்பட்ட செடிகளில் உற்பத்தியாகும் தான்யத்தில் கறுப்புத்தூள்கள் தோன்றுகிறவரையில், இந்த காளான் வெறும் கண்ணுக்குப்புலப்படக் கூடாதபடி அவ்வளவு சிறிதாயிருக்கிறது. இந்தக் கறுப்புப் பஸ்மமானது வெகு நெருக்கமாய் அடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான சிறு உருண்டைகளாக இருக்கிறது. அந்தக் காளானைப்போன்ற செடிகள் முளைப்பதற்கு இந்த கறுப்புபஸ்மமே விதைகளாக ஏற்பட்டிருக்கின்றன. இந்த கறுப்புத்தூள்கள் ஒட்டிக்கொண்டிருக்க மற்ற சோள விதைகளை, ஒரு புலத்தில் விதைத்து விட்டால், இந்தக் கறுப்புத்தூளாகிய காளான் விதைக

ளும் சோளவிதையோடு முளைக்க ஆரம்பிக்கின்றன. இப்படி முளைக்கும் கறுப்புத்தூள்களினின்றும் நூல்போன்ற மெல்லிய நிறமற்ற காளான்தண்டு கண்டுகள் வெளிப்புறப்பட்டு இளம் சோளச்செடியின் உள்புகுந்து கொள்ளுகின்றன. இந்த மெல்லிய காளான்தண்டுகள் சோளச்செடியின் உள்புகுந்ததுமுதல் அச்செடியின் உள்ளேயே வளர்ந்துகொண்டு போகும். ஆனால் சோளப்பயிர் கதிராகிறவரையில் அப்பயிருக்கு யாதொரு இடைஞ்சல் பண்ணுவதில்லை. பிறகு கதிர் தோன்றினவுடன், அக்காளான் பால்பிடிக்கும் சோள தான்யங்களுக்குள் புகுந்து, சோளச்செடிகளால் தான்யம்முற்றுவதற்காக சேகரிக்கப்பட்டிருக்கிற பயிருணவைக்கொண்டு, தன்னுடைய நிறமற்ற மெல்லிய நூல்போன்ற தண்டுகளை வளுக்கச்செய்கிறது. இந்தத் தண்டுகள் அந்த நோயை உண்டுபண்ணக்கூடிய விதைகளாகிய கறுப்புத்தூள்களால் தான்யம் சற்றேறக்குறைய நிறையும் வரையில், அவ்விதைகளை உண்டுபண்ண சக்தியுள்ளவைகளா யிருக்கின்றன.

இவ்விதமான நோயை வராமல் தடுப்பதற்கு ஒரு வழிஉண்டு. துருசு அல்லது மயில்துத்தம் என்ற வஸ்துவை கரைக்கப்பட்ட தண்ணீரில் சோளவிதையை விதைப்பதற்குமுன் ஸுமார் கால்மணி நேரம் ஊறவைத்தால், மேலே சொன்ன பூஞ்சணத்தை சோளப்பயிருக்கு வர வொட்டாமல் தடுக்கலாம். ஸுமார் ஒருபைன்ட் (3-ஆழாக்கு)அளவுள்ள ஒரு சீசாதண்ணீருக்கு ஒரு தோலா (ஒரு ரூபாயிடை) நிறையுள்ள மயில்துத்தத்தைக் கரைக்கவேண்டும். ஜாஸ்தி அளவு மயில்துத்தம் கரைக்கப்பட்ட தண்ணீர் தேவையானால் மேலே சொன்னபடி ஒவ்வொரு பைன்ட் தண்ணீருக்கும், ஒவ்வொரு தோலா நிறையுள்ள மயில்துத்தம் கரைக்கவேண்டும். கரைத்தபிறகு அந்தத் தண்ணீரை ஒரு மரத் தொட்டியிலாவது, மண் பாண்டத்திலாவது வைக்கவேண்டும். இரும்பால் செய்தபாத்திரத்தில் வைத்தால் அந்தத் தண்ணீர் கெட்டு போவதுமன்றி, பாத்திரத்தின் உள்புறத்தையும் தின்னுவிடும். கரைக்கப்படவேண்டிய பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி, பாத்திரத்தின் குறுக்கே ஒரு கோலைப்போட்டு, பொடியாக்கப்பட்ட மயில்துத்தத்தை ஒரு பையில் கட்டி, தண்ணீரில் அமிழ்ந்துபோகும்படி கழியிலிருந்து தொங்கவிட்டால், அது சீக்கிரமாகக்கரைந்துபோகும். மயில்துத்தத்தை கட்டிகளாக தண்ணீரில் போட்டால், அதை கரையும்படிசெய்ய அதிகமாய் கிளரவேண்டும். சோளவிதையை கோணிப்பைகளில் கட்டி, அந்தப் பைகளோடு மயில்துத்தம் கரைக்கபப்பட்ட ஜலத்தில் நனைக்கலாம், அல்லது விதையை கரைக்கப்பட்ட ஜலத்திலேயே கொட்டிவிடலாம். மேலே சொன்ன இருவகையில் எப்படிச செய்தபோதிலும், ஒவ்வொரு விதையும் துத்தம் கரைக்கப்பட்ட ஜலத்தில் நன்றாய் நனையும்படி ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டும். விதைகள் மயில்துத்தம் கரைக்கப்பட்ட தண்ணீரில் கால் மணிநேரம் இருந்தபின், அவைகளை எடுத்து சுத்தமான தரையிலாவது, கோணிச்சாக்கின்மேலாவது லேசாய்ப்பரப்பி, வெயிலில் காயவைக்கவேண்டும். கைவிதைப்பாய் விதைக்கவேண்டியபோது, விதைகள் சற்றேறக்குறைய காய்ந்தவுடன் விதைத்துவிடலாம். மயில்துத்தம் கரைக்கப்பட்ட ஜலத்தில் போட்டுக் காயவைத்த விதைகளை, முன்னமே குறிக்கப்பட்ட கறுப்பு பஸ்மத்துடன் ஸம்பந்தப்படாமலிருக்கும்படி ஜாக்கிரதையாக பாதுகாக்கவேண்டும். விதையை தரையின்மேல் காயப்போட வேண்டியிருந்தால், தரையை முதலில் மயில்துத்தம் கரைத்த தண்ணீரால் கழுவவேண்டும். மயில்துத்தம் கரைத்தஜலத்தில் போடப்பட்ட விதைகளை வைக்க வேண்டிய கோணிப்பைகளையும், விதைப்பு

நடத்தும்பொழுது உபயோகிக்கும் பைகளை யும் வாய் அகன்ற ஒரு பாத்திரத்தில் கொதிக் கும் தண்ணீரில் அமிழ்த்தி வெகுவாய் சுத்தப் படுத்தலாம். பொதுவாக, விதைப்பதற்கு சற்று முன் விதைகளை துத்தம் கரைத்த ஜலத்தில் நனையவைப்பதே ரொம்ப சௌகரியமாயிருக் கும். இம்மாதிரி செய்வதினல் இந்த நோவுக்கு ஆதாரமான வஸ்து போய்விடுகிறது. மயில் துத்தம் கரைக்கப்பட்ட தண்ணீரில் போட்டு காயவைத்த விதைகளினின்று உண்டாகும் பயிர்கள் இந்த நோயினல் பீடிக்கப்பட மாட்டா.

ஸாதாரணமாக ஒரு ஏக்கர் விதைக்க 6 முதல் 9ராத்தல் சோளவிதை செல்லும். இந்த அளவு விதையை நனைக்க 5அல்லது 7 பைண்ட் மயில்துத்தம் கரைத்த தண்ணீர் செல்லும். ஆகையால் ஒரு ஏக்கர் விதைக்கக்கூடிய விதை யை நனைக்க, 5 முதல் 7 தோலா நிறையுள்ள மயில்துத்தம் வேண்டியிருக்கும். ஒரு ஏக்கர் விதைக்கவேண்டிய விதைக்கு அரையணு முதல் ஒரு அணு வரையில் செல்லும். முன்னே குறிக்கப்பட்ட அளவுக்குக் குறைந்த மயில் துத்தம் கரைக்கப்பட்ட தண்ணீரை உபயோ கப்படுத்தக்கூடாது. திருஷ்டாந்தமாக பத்து ஏக்கர் விதைக்கவேண்டிய விதையை தயார் செய்யவேண்டியிருந்தால், அப்பொழுது ஒரு ஏக்கர் விதைக்குவேண்டிய மயில்துத்தம் கரை க்கப்பட்ட தண்ணீரை தயார்செய்துகொண்டு 10ஏக்கர் விதை முழுவதையும் ஒவ்வொரு தடைவையாக 10 தடவை அந்த ஒரு ஏக்கருக் குத் தயார்செய்யப்பட்ட தண்ணீரில் நனைத்து எடுப்பது போதாது. ஒரு ஏக்கருக்கு எவ்வ ளவு மயில்துத்தம் கரைக்கப்பட்ட தண்ணீர் வேண்டுமோ அதைப்போல் 10 மடங்கு மயில் துத்தம் கரைக்கப்பட்ட தண்ணீர் 10 ஏக்கர் விதைக்கு வேண்டும். இப்படி ஒரு ஏக்கரா வுக்கு ஒரு அணு செலவழித்தால் இந்த நோ யினல் உண்டாகும் நஷ்டம் ஏற்படாது. ஆகை யால் ஒரு அணு செலவழித்தால் ஏராளமான லாபத்தை அடையலாம். சோளம் பயிரிடும் கனவான்கள் இந்த நோய்வராமல் தடுப்பதற்கு மேலே சொன்ன விதத்தை அனுஸரித்து, தங் களுடைய தான்யத்திலிருந்து இந்த நோயை நீக்கி, ஏராளமான லாபத்தை அடைவார்கள் என்று நம்புகிறேன்

வி. அநந்தராமன்.

## SOME BOYS' DON'TS

BY

S. R. ANANTANARAYANA AIYAR,

### மாணவ ரொழுக்கம்.

அமெரிக்காவில் சில பள்ளிக்கூடங்களில் பின்வரும் விதி விலக்குகள் ப்ரசுரிக்கப்பட்டு வழங்கிவருகின்றன. மாணுக்கர்கள் எந்த தே சத்திலும் ஒரே ஸ்வபாவ முள்ளவர்களாத லால், அமெரிக்காவில் மாணுக்கர்கள் அனு ஸரித்துவரும் முறைகளை நமது தேசத்து மாணுக்கர்களும் அனுஸரித்து வந்தால் பயன் பெறுவார்களென்ற உத்தேசத்துடன் அந்த விதிவிலக்குகளை கீழே தமிழில் மொழிபெயர்த் திருக்கிறோம்.

1. க்ரூர ஸ்வபாவ முள்ளவரென்று உன் மனதில்படுகிற உபாத்யாயர் உனக்கு இம்பொ ஸிஷன் அதாவது பிழையீடாக நூறுவரி "காபி" எழுதும்படி விதித்தால், "ஏன்?" என்று மறுத்துக்கேளாதே.

2. உன்னுடைய மைக்கூண்டில் சுருட்டின "ப்ளாட்டிங் பேபர்", செத்துப்போன ஈ, இவைகளைப் போன்ற குப்பைகளைப்போட்டு நிரப்பாதே. அப்படிச்செய்தால் அனாதரம் விளையும்.

3. உபாத்யாயர் சொல்வது உனக்குக் கே ளாவிட்டால் காது கேட்கவில்லை என்று சொல் லாதே.

4. பள்ளிக்கூடத்திற்கு நீ நேரஞ்சென்று வந்து விட்டால் "கடியாரம் நின்று விட்டது" என்று சாக்குச் சொல்லாதே.

5. உபாத்யாயர் ஒரு புஸ்தகத்தில் சொல்லி யிருக்கும் ஸங்கதி "தப்பு" என்று சொன்னால் அவர் சொல்வதை நம்பிகிறவன்போல் பாவனை பண்ணு. ஆனால் அவர்கொடுத்த ஒரு கணக்கை நீ ஸரியாய்ப்போடாவிட்டால் "புஸ்தகத்தில் கொடுத்திருக்கும் விடை தப்பு" என்று சொல்லாதே. அப்படி யிருப்பது வெகு அபூர்வம்.

6. பள்ளிக்கூடத்திலாவது வெளியிலாவது உபாத்யாயர் சொல்லும் ஸங்கதிகளை ஆக்ஷேபித்துப்பேசாதே.

7. உபாத்யாயர் சொல்லும் ஸங்கதிகள் வாஸ்தவமாகவே தப்பாயிருந்தாலும் தங்களுடைய மாணுக்கர்கள் அவைகளைக்குறித்துப் பேசுவது அவர்களுக்கு இஷ்டமிராது. அவர்கள் சொல்லுவது வாஸ்தவமாயிருந்து விட்டாலோ, அவர்களைத் திருத்த முயன்ற உங்களுக்குப் பிடித்தது சனியன்.

8. உபாத்யாயர் தன்னுடைய ஸொந்த வேலைகள் ஏதாவது செய்யும்படி உன்னை நியமித்தால் "அந்தவேலைசெய்ய எனக்குநேரமில்லை" என்று சொல்லாதே.

9. பள்ளிக்கூடத்திலிருக்கையில் உனக்குப் பின்னுல் இருக்கும் பையன் உன்னைக்குத்தினுல் அவனை நீ திரும்பிக்குத்தாதே. பள்ளிக்கூடம் கலையும்வரை பொறுமையாயிரு.

10. காகிதங்களைச்சிறு சுருள்களாகச் சுருட்டி பள்ளிக்கூடத்தில் அங்கு மிங்கும் எறியாதே. அவைகளை உபாத்யாயரே பார்க்கக்கூடும். அல்லது அவைகள் கீழே விழும்பொழுது உண்டாகும் சப்தத்தை அவர் கேட்கக்கூடும். எறிந்த சுருள் உபாத்யாயர்மேல் விழுந்து விட்டாலோ பின் நேரும் அனர்த்தத்திற்கு அளவில்லை.

11. உபாத்யாயர் உன்னுடைய கணக்கு, காபி முதலியவைகளை பரிசோதித்துக் கொண்டிருக்கும்போது அவருக்குப் பின்புறமாக நீ நின்று கொண்டிருக்க நேரிட்டால், மற்றப் பிள்ளைகளுக்கு களிப்புண்டாக்கும்படி அவருடைய தலைமயிரைப்பிடித்து இழுப்பதாக சமிக்கை பண்ணுதே. தங்களுக்கு பின்புறம் நடக்கும் ஸங்கதிகளை அறிவதில் உபாத்யாயர்கள் வெகு ஸமர்த்தர்கள். இந்த ஸாமர்த்தியம் கண்ணுடிபோடும் உபாத்யாயர்களுக்கு மற்றவர்களைவிட அதிகமாயுண்டு. நீ சமிக்கை பண்ணிக் கொண்டிருக்கையில் உபாத்யாயருடைய தலைமயிர் ஒன்ருே, இரண்டோ, உன் கையில் அகப்பட்டு விட்டால் பின்வரும் நடவடிக்கைகள் இன்னவையென்று உனக்கே தெரியும்.

12. உபாத்யாயர் ஏதாவது கேலிசெய்தால் அதேகேலி முன்பு பல தடவைகளில் செய்யப்பட்டிருந்தாலும், அவர் செய்யும்போதெல்லாம் நீ அவருடன் சிரி. ஆனால் ஒரு ஸங்கதி மாத்ரம் ஜாக்ரதை! அவர் வாஸ்தவமாய்க் கேலி பண்ணுகிருரா என்று நிச்சயமாய்த்தெரிந்துகொள்.

13. உபாத்யாயர் போர்டுபலகையில் கணக்குப் போடும்பொழுது, தவறி விட்டால் அவரைப் பார்த்து அதுகாரணமாய்ச் சிரிக்காதே.

14. ஒரு விஷயத்தைக் கற்பித்த பிற்பாடு உபாத்யாயர் "இது உனக்கு விளங்கிற்ரு" என்று கேட்டால் "ஆம்" அல்லது "இல்லை" என்று உடனே பதில் சொல்லிவிடு. சிறிது யோசனை செய்தபிற்பாடு "தெரிந்தாற்போலிருக்கிறது" என்று சொல்லாதே.

15. உனக்குப் பக்கத்திலிருக்கும் பையன் கணக்கு காபி முதலியவேலைகள் ஏதாவது செய்து கொண்டிருந்தால் அவனை உன்னுடைய பேனு, பென்ஸில்களின் முனையினுல்

குத்தியாவது, அவனதுகால் விரலை மிதித்தாவது கிச்சுப்படுத்தியாவது உபத்ரவப்படுத்தாதே. உன் உபத்ரவத்தை எல்லாப்பிள்ளைகளுமே ஸஹிக்கமாட்டார்கள். நீ தண்டனைக்குத் தப்பவேண்டுமே யென்று அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்.

16. உபாத்யாயர் பேசும் பொழுதெல்லாம் அவர் சொல்வதை வெகு கவனமாய்க்கேள். அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, ஜன்னலிலோ, அல்லது கூரையிலோ இருக்கும் எட்டுக்கால் பூச்சியின் நடவடிக்கைகளை கவனியாதே.

17 நீ உபாத்யாயர் கொடுத்த வேலையைச் செய்யாமல் வேடிக்கைபார்த்துக் கொண்டிருப்பதை அவர் கண்டுவிட்டால் அப்போது வெகு சுறுசுறுப்பாய் வேலை செய்பவன்போல் பாவனை செய்யாதே.

18. உபாத்யாயர்களும் ஒரு காலத்தில் மாணாக்கர்களா யிருந்தவர்கள் தானென்றும் அவர்களுக்கு மாணாக்கர்களது திருட்டுத்தனமெல்லாம் நன்றாய்த் தெரியுமென்றும் திட்டமாய் ஞாபகத்தில் வை.

எல். ஆர். அநந்த நாராயண அய்யர்

---

## GREEN GINGER, DRIED GINGER, BLACK PEPPER AND LONG PEPPER

BY

PANDIT S. MUTHUSWAMI PILLAI.

## இஞ்சி, சுக்கு, மிளகு, திற்பிலி.

இஞ்சி, சுக்கு, மிளகு, திற்பிலி முதலிய மருந்துச்சரக்குகளின் குணங்களை சிறிதளவாவது அறியாதவர் ஒருவருமில்லை. ஆனால் அவற்றின் குணங்களை நன்றாய் ஆராய்ந்து அறிந்திருந்தால் அநேகம் நோய்களைப் போக்கமுடியும்.

1. இஞ்சி, ஜுரம், வயிற்றுவலி, முதலிய நோய்களுக்கு தனிமையாகவும் வேறு மருந்துகளோடு அனுபானமாகச் சேர்ந்தும் பலவகையாய் உபயோகப்படும். தகனக்கேட்டினால் உண்டாகும் வயிறுவலிக்கு இஞ்சியை மேல்தோல் நீக்கி, உப்போடாவது சீனியோடாவது சேர்த்து மென்று விழுங்கினால் உடனே சொஸ்தமுண்டாகும். சிறு குழந்தைகளுக்கு உண்டாகிற தடுமல், ஜுரம், வயிற்றுவலி இவைகளுக்கு இஞ்சிச்சாற்றில் சிறிது சீனி சேர்த்துக்கொடுத்தால் அநேகமாய்க் குணமுண்டாகும். வயிற்றுவலிக்கு வெள்ளுள்ளி காயம் இவைகளையும் சேர்த்து இடித்து சாறெடுத்துக் கொடுப்பது முண்டு.

2. பித்தமேலிட்டிருப்பதினால் உண்டாகும் தலைநோய், தலைச்சுற்று முதலியவைகளுக்கு இஞ்சியைத் தனிமையாகவாவது வெள்ளுள்ளியோடு சேர்த்து இடித்தாவது சாறெடுத்து சிறிது அனலில் வெதுப்பி உச்சி மண்டைப்பொருத்துக்கள் முதலிய இடங்களில் நன்றாய்த் தேய்த்தால் சிறிது நிமிஷத்துக்குள் ஸுகமுண்டாகும்.

3. இஞ்சியை மேல்தோல் நீக்கி சிறு துண்டுகளாக அரிந்து ஒரு ஜாடியில் போட்டு அதோடு கொட்டைபோக்கின நெல்லிக்காயை சிறிய துண்டுகளாயரிந்து கலந்து, இஞ்சியும் நெல்லிக்காயும் மூங்குமளவு எலுமிச்சஞ்சாறைவிட்டு சிறிது உப்புங்கலந்து வைக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் வெயிலில் வைத்து எலுமிச்சஞ்சாறு பாதி வற்றியபின் எடுத்து கவனமாய் வைத்துக்கொள்ளவேண்டும். வாயு, பித்த அரோசிகம், முதலிய நோயுள்ளவர்கள் உண்ணும்போது ஊறுகாய்க்கு பதிலாக அதை உபயோகித்து வந்தால் நோய் பூராவாக சொஸ்த மாகாவிட்டாலும் சில்லரைத் தொந்தரவுகள் நீங்கும், ஆகாரமும் செல்லும்.

### சுக்கு.

உலர்ந்த இஞ்சியே சுக்கெனப்படும். இது

அநேக நோய்களைக் கண்டிக்கும் நிகரற்ற மருந்து. எண்ணெய் ஸ்நாநஞ் செய்தவுடன் ஒரு துண்டு சுக்கை வெந்நீர்விட்டு வெண்ணெய்போலரைத்து கொஞ்சம் வெந்நீரில் கலக்கிப் பதிவாய்க் குடித்துவந்தால் ஜீரண சக்தி யதிகப்பட்டு ஆகாரம் ஸரியாய்ச் செல்லும். உடம்புக்கு ஒருபொழுதும் அசதியே யிராது. எனக்கு இது அநுபவமானது. என் உபதேசப்படி பலர் அநுஷ்டித்துப் பலன் கண்டிருக்கிறார்கள்.

2. மழையில் எக்காரணத்தினாலாவது அதிகமாய் நனைய நேர்ந்து குளிரினால் மிக வருந்தினால் பத்துப் பன்னிரண்டு துண்டு சுக்கை ஸமம் கருப்புக்கட்டியோடு சேர்த்து இடித்து மெழுகுபோலாக்கி ஒரு முறைக்கு இரண்டு நெல்லிக்காய் பிரமாணமாக இரண்டு மூன்று முறை விழுங்கினால் உடனே குளிர் நீங்கும். அதோடு நல்ல மிளகையும் சேர்த்துக்கொள்ளலாம்.

3. வாயு, வயிற்றுவலி, வாந்தி, குடல்வலி, ஜுரமின்றிவரும் மற்றவலிகள் இவைகளுக்கெல்லாம் கொஞ்சம் சுக்கை நன்றாய் சதைத்து அரைப்புட்டி கொதிக்கிற தண்ணீரில் போட்டுவைத்து ஆறுவதற்குமுன் அதில் இரண்டு அவுன்ஸ் வீதம் அரை அல்லது ஒருமணி நேரத்துக்கு ஒருதரம் கொடுக்கலாம். உடனே ஸுகம் உண்டாகும். நாட்சென்ற வாதநோயாளிகளுக்கு மேற்படி சுக்குக் குடிநீரை இரவில் படுக்குமுன் கொடுத்து கம்பளியால் தேகத்தை மூடி வேர்வையுண்டாக்கினால் மிகுந்த குணமுண்டாகும்.

4. தலையிடிக்கும் முகவலிக்கும் சுக்கை தனிமையாகவாவது வெள்ளுள்ளியோடு சேர்த்தாவது வெந்நீர்விட்டு வெண்ணெய்போல் அரைத்து ஒருதுணியில் புரட்டி வலியுள்ள இடத்தில் பற்றவைத்தால் கொஞ்சநேரத்தில் குணமுண்டாகும்.

5. வாந்திபேதிக்கு கொஞ்சம் சுக்கைத் தனிமையாகவாவது நல்ல மிளகோடு சேர்த்தாவது சதைத்து கொதிக்கிற தண்ணீரில் போட்டு வைத்து தாகிக்கிற பொழுதெல்லாம் கொடுக்கலாம்.

6. பல்வலி, திமிர்நாக்கு, வேறுவாயிலுண்டாகும் வலிகள் இவைகளுக்கெல்லாம் ஒரு துண்டு சுக்கை வாயிலிட்டு மென்று ஒதுக்கிக் கொண்டால் உமிழ்நீர் மிகுதியாய்ப்போய் வலிமாறும்.

நல்லமிளகு.

இது சுக்கைக் காட்டினும் அநேக நோய்களுக்குச் சிறந்த ஔஷதம்.

1. காசநோயாளிகளுக்குக் கொஞ்சம் நல்ல மிளகை ஒருபுட்டி தண்ணீரில் சதைத்துப் போட்டுக் கஷாயம்வைத்து ஒருமணிக்கு ஒரு அவுன்ஸ் வீதம் கிரமமாய் நாள்தோறும் கொடுத்து வந்தால் நொய்க்கு அதிக சாந்தமுண்டாகும்.

2. குளிர்ஜுரம் அல்லது முறைக்காய்ச்சலுக்கு நல்லமிளகு 40-க்ரேயின், கர்ப்பூரம் 20-க்ரேயின், கழற்சிப்பருப்பு 100-க்ரேயின் இவைகளைத் தேன்விட்டு ஒன்றாய்ச் சேர்த்து இடித்து 30-மாத்திரை செய்து ஜுரம் விட்டிருக்கும்போது நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்றுதரம் 2-மாத்திரைவீதம் கொடுக்கவும். பிராயமானவர்களுக்கு இந்தப் பிரமாணமும் குழந்தைகளுக்கு இதில் பாதியும் கொடுக்க வேண்டும். இந்த மாத்திரைகளைக் கொடுக்குமுன் எப்பொழுதும் வயிற்றை ஆமணக்கெண்ணெயாவது வேறுபேதி ஔஷதமாவது கொடுத்து சுத்திபண்ணிக்கொள்ள வேண்டும்.

3 படர்தாமரைக்கு கொஞ்சம் நல்ல மிளகுதூளை பசுவின் நெய்விட்டு நன்றாயரைத்து படர்தாமரையின்மேல் நன்றாய்த் தேய்க்கவும். சிலநாளில் சொஸ்தப்படும்.

4. வாந்திபேதிக்கு நல்லமிளகு, காயம், அபின் இவைகளை வகைக்கு 20-க்ரேயின்வீதம் சேர்த்து ஒன்ருய்ச் சேரும்படி இடித்து அரை அல்லது ஒருமணி நேரத்துக்கு ஒருதரம் ஒரு மாத்திரை வீதம் வியாதி ஸௌகப்படுமளவும் கொடுக்கவும். ரோகி தேவையான மட்டும் தண்ணீராவது கஞ்சித்தண்ணீராவது குடிக்கலாம். வாலிபருக்கு மேல்சொன்ன மாத்திரையில் பாதி கொடுக்கவேண்டும்.

5. பிடரி, கழுத்து முதலிய இடங்களில் நெல்லிக்காய்ப் பிரமாணமாய் உண்டாகும் நீர்க்கட்டுக்கும், கண்ணெரிவு, தலைமயக்கம், கண்மறைவு முதலிய நோய்களுக்கும், ஒருபிடி நல்லமிளகை குழிஅம்மியில் போட்டு நல்லெண்ணெய் விட்டு இரண்டு மணிநேரம் இடைவிடாமல் அரைத்துக் குழம்பாக்கி காலையில் சிரசில் தப்பளமிட்டு மாலையில் அவரவர் வழக்கப்படி வெந்நீரிலாவது தண்ணீரிலாவது ஸ்நானஞ் செய்யவும். ஸ்நானஞ்செய்த பிறகு புளிப்பான வஸ்துக்களை உண்ணலாகாது. இப்படியே இரண்டு மூன்று முறை செய்தால் மேல் சொன்ன நோய்கள் திண்ணமாய் நீங்கும். இது அநுபவமான முறை.

திற்பிலி.

1. சுக்கு, மிளகு, திற்பிலி, இவைகளை ஸமமாயெடுத்து வெயிலில் உலர்த்திப் பொடிசெய்து வடிகட்டி திரிகடிப்பிரமாணம் சீனியோடு சாப்பிட்டால் வாத பித்த சிலேஷ்மமாகிய முத்தோஷங்களும் நீங்கும். சிறுகுழந்தைகளுக்குண்டாகிற அநேக நோய்களுக்கு இது பலவிதமாய் உபயோகப்படுகிறது.

2. குத்திருமலுக்கு, ஒருசட்டியை அடுப்பில் காயவைத்து நன்ருய்ச் சூடேறினபிறகு ஒரு கோழிமுட்டையை உடைத்து வெள்ளை மஞ்கள் இரண்டு கருக்களையும் விட்டு அகப்பைக்கணையால் கிண்டி நீர் வற்றி வரும்போது ஒரு தேக்கரண்டி திற்பிலிப் பொடியும் போட்டுக்கிண்டி யிறக்கி அவ்வளவையும் ஒரே முறையில் கொடுக்கவும். இப்படியாக ஏழெட்டு நேரம் காலை மாலை கொடுத்தால் நாட்பட்ட குத்திருமலுங்கூட குணமாகும். கைகண்ட மருந்து.

எஸ். முத்துஸ்வாமிப் பிள்ளை.

## CO-OPERATIVE CREDIT SOCIETIES AND STORES

BY

N. APATH SAHAYA AIYAR.

### ஐக்கிய நாணயச் சங்கங்களும் ஸ்டோர்களும்.

சென்னை ராஜதானியில் இதுவரையில் 1904௵த்திய இந்தியா 10-வது ஆக்ட்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ஐக்கிய நாணயச் சங்கங்கள் 904. இவைகளில் ஸ்டோர்கள் ஸுமார் 10-க்கு மேலில்லை. இந்த சங்கங்கள் ஏற்பட்டதினுல் விவஸாயிகளுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் ஏராளமான ஸௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஜனங்களுக்குள் ஒற்றுமையும், பரஸ்பர நம்பிக்கையும், தேசாபிமானமும் உண்டாகிறது. அதீத வட்டி வாங்கிக்கொண்டிருந்த ஸாவ்கார்கள் இனி பகற்கொள்ளையடிக்க முடியாதென்று அறிந்து வருகிருர்கள். இதுவரையில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் கொடுக்கல் வாங்கல் என்று சொல்லப்படுகிற பாங்கி வேலையை மட்டும் செய்து வருகின்றன. இப்போது புதிதாய் திருத்தப்பட்ட ஆக்ட்டுபடி ஸாமான்களை உற்பத்திசெய்வதற்கும் உற்பத்திசெய்த ஸாமான்களை விற்பனை செய்வதற்கும் சங்கங்கள் ஸ்தாபிக்கலாம். இந்த சங்கங்கள்தான் அதி முக்கியமானவை. இவைகளை நிர்வகிப்பது கொஞ்சம் கஷ்டந்தான். பாங்கின் வேலையைப்போல் எளிதல்ல. ஆனல் தேசம் முன்னுக்கு வருவதற்கு அத்தியாவசியமானவை. தேசாபிமானிகள் ஒவ்வொருவரும் கைத்தொழிலாளர்கள் அதிகமாயுள்ள இடங்களில் இம்மாதிரி சங்கங்கள் ஏற்படுத்த முன்னுக்கு வரவேண்டும். ஸ்டோர்களும் பாங்கிகளும் ஒன்ருயிருக்கக் கூடாதென்று கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிருர்கள். மதராஸ் போன்ற பெரிய பட்டணங்களில் மாத்திரம் ஒரு ஸமயம் இம்மாதிரி செய்வது ஸாத்தியமே ஒழிய கிராமங்களிலா

வது சிறு பட்டணங்களிலாவது இது ஸாத்திய மல்ல. கிராமங்களில் ஸ்டோர்கள் நடத்த முடியாதென்று சிலர் நினைக்கிறார்கள். இது சுத்தப் பிசகு. உண்மை அபிமானிகளாயும் தொழில் முறை தெரிந்தவர்களாயு மிருப்பவர்கள் பிரயாஸை எடுத்துக்கொண்டால் நடக்காத காரியமுண்டோ? பட்டணங்களுக்கு ஒரு ஸமயம் ஸ்டோர்கள் வேண்டியதில்லை என்று நினைத்தாலும் நினைக்கலாமே ஒழிய கிராமங்களில் அப்படி நினைக்கக்கூடாது. ஏனென்றால், பட்டணங்களில் ஏராளமான கடைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்றில் அதிக விலை சொன்னால் வேறுகடையில் ஸாமானை வாங்கிவிடுவார்கள். ஸாமான்களும் அடிக்கடி அதிகமாய்ச் செலவாகும். அதிக லாபம் வைக்க நியாயமிராது. கிராக்கிகளிருப்பதினால் வியாபாரிகளும் நல்ல ஸாமான்களைத் தருவிப்பார்கள் கிராமாந்தரங்களிலோ வென்றால் அநேகமாய் கிராமத்திற்கு ஒரு கடைதானிருக்கும். அவனுக்கு வியாபாரமும் கொஞ்சமாய்த்தான் நடக்கும். தன் குடும்பத்திற்கு அதிலிருந்தே ஸம்பாதிக்கவேண்டும். ஆகையால் தான் "ஒரு காசுக்கு ஒருகாசுதான்" லாபம் என்று சொல்லி ஒன்றுக்கு இரண்டாய் விற்று வருகிறார்கள். கிராமத்திற்கு ஸ்டோர்கள் தனியாய் வைப்பது ஸாத்தியமல்ல பாங்கியில் மெம்பரா யிருப்பவர்தான் ஸ்டோரிலும் மெம்பராவார். பாங்கியில் பஞ்சாயத்தராயிருப்பவர்கள்தான் ஸ்டோரிலும் பஞ்சாயத்தராயிருக்க வேண்டியிருக்கும். ஒரே மனிதன் இவ்விரண்டு காரியங்களையும் தனித்தனியாய்ப் பார்ப்பதைவிட சேர்த்துப் பார்ப்பது மிகவும் ஸௌகரியமாயும் தொந்தரவுக் குறைவாயுமிருக்கும். பிரதி பிரயோஜனமில்லாமல் பரோபகாரமாய் வேலை செயபவர்களுக்கு அதிக தொந்தரவு கொடுக்கக்கூடாது. ஆகையால் காருண்ணிய கெவர்ன்மெண்டார் இவ்விஷயத்தை புனராலோசனைசெய்து சங்கமும் ஸ்டோர்களும ஒன்றாய் வேலை செய்யலாமென்று உத்தரவளிப்பார்களென்று நம்புகிறோம்

என். ஆபத்ஸஹாய அய்யர்.

## TAMARIND SEED.

## புளியம் விதை.

புளியமரம் எல்லா இடங்களிலும் வளரும் என்று தெரிகிறது. பத்து வருஷங்களுக்கு மேல் பலன்விடும் தன்மையுள்ளது. புளியம் பழத்தை எடுத்துக்கொண்டு அதிலுள்ள விதைகளை வீசி எறிவது நமது தேசத்தில் வாடிக்கையாகும். கோலார் டிஸ்டிரிக்ட் அக்ரிகல்சரல் அஸோஸியேஷனில் ஆனரெரி டிரெஷராயிருக்கும் மிஸ்டர் கிரிமாஜிராவ் புளியம் விதையைப்பற்றி எழுதியிருப்பதைப் படிப்போம்.

புளியம் விதையின் பிரயோஜனம் தெரிந்தால் ஜனங்கள் அதை வெகு பத்திரமாய்க் காப்பாற்றுவார்கள். சிலர் இந்த விதைகளைப் புலன்களில் எருவாய்ப் போடுவதுண்டு. வயல்களிலுள்ள உப்பைப் போக்கி நேர்த்தியான விளைச்சலைத்தரும். வர்ணக்காரர்கள் நிறங்களுக்கு இந்த விதையை உபயோகிப்பதும், பட்டிக்காட்டார் இதை வறுத்துத் தின்பதும் வயிற்றுக்கில்லாத ஏழைகள் விதைகளை வேகவைத்துண்பதும் வாடிக்கை.

கோலார் டிஸ்டிரிக்டில் 7 வருஷங்களாய் மாடுகளுக்கு மேய்ச்சல் கிடைக்கவில்லை. கோக்கள் உபவாஸமாய் மடிவதைக்கண்டு புளியம் விதைகளை ஆகாரமாய்க் கொடுத்தார்கள். கொள்ளைத்தின்பதுபோல் ஆவலோடு உண்டன. வயிற்றுப்பசி தணிந்து ஜீர்ணசக்தியுடன் அதிக சுறுசுறுப்பாய் வேலைசெய்யத் தொடங்கின. வியாதியும் கிடையாது. இதன்மேலுள்ள கருந்தோலைப் போக்க சட்டியில் வறுத்து தோல் சென்றதும் வெள்ளை விதைகளை அடுப்பில் ஜலத்துடன் வேகவைத்து அதை மாடுகளுக்குக் கொடுக்கவேண்டும். இதைப் படிப்பவர்கள் புளியம் விதைகளின் பிரயோஜனத்தை மறவாமல் நினைவில் வைத்துக்கொள்ளவும்

# SELECTIONS.
# விசேஷத்திரட்டு.

## FAMINES IN INDIA.
## இந்தியாவில் உண்டாகும் பஞ்சங்கள்.

இந்தியாவில் இப்போது பஞ்சம் சகஜமாய்ப் போய்விட்டது. ஒரு ஜோஸியன் ஒருவனைப் பார்த்து ஐயா உமக்கு 20 வருஷம் வரையில் கஷ்டமிருக்கும் என்றான். அதற்கவன் "பிறகு" என்று கேட்டான்- அதற்கு ஜோஸ்யன் பிறகு அந்தக்கஷ்டமே உமக்கு சகஜமாய்ப் போய் விடும். இதன் பளுவு உமக்குத் தோற்றாமல் பழக்கத்தினால் சாதாரணமாகிவிடு மென்றான். அதுபோல இந்தியாவில் ஆரம்பத்தில் பஞ்சம் வந்தபோது அதைப்பற்றி அதிக விசாரிப்புகளும் பிரஸ்தாபங்களும் இருந்தன. இப்போதோ அது சகஜமாகி விட்டது. இந்தக்காலத்தில் எல்லோரும் உத்தியோகக் கல்வியையே நாடுவதால் படிப்பு முடிந்த தற்கப்பால் பிழைக்க வழி தேடலாமென்று தவிக்கிறார்கள். வெகு பேர்களுக்குத் தருணங்கள் ஏற்படாமலே, எளிய நிலையிலிருந்து அன்ன வஸ்திரத்துக்கு வழியின்றி அங்கலாயத்து அந்த ஏக்கமே அவர்களின் ஆவியைக் கொள்ளை கொள்ளுகின்றது. முன் ஒரு காலத்தில் கிளார்க்காக ஆரம்பத்தில் அமர்ந்த ஒருவர் டிப்டி கலெக்டராக ஆனார் என்று கேள்விப்பட்டு பத்து ரூபாய்ச் சம்பாத்தியமாயிருந்த போதிலும் தங்களின் உயர்தரப்படிப்பை யெல்லாம் கிளர்க் உத்தியோகத்தில் செலவழிப்போர் அநேகர்.

இவ்வாறாகப் பலவிதமான பஞ்சங்கள் நம் நாட்டில் உலாவி வருகின்றன. பொதுவாக இந்தியாவில் பஞ்சமுண்டாகக் காரண மென்ன வென்றால், ஸர் டப்ள்யூ, டப்ள்யூ ஹண்டர் மழை பெய்யவில்லை. ஆதலின் பஞ்சமுண்டாயிற்றென்பார். ஆங்கிலோ இந்தியர்களும் கவர்ன்மெண்டு மெம்பர்களுமான சனவான்கள் அந்தக் காரணமே காரணமென்று சாதிப்பார். ஸ்ரீ தாதாபாய் நவரோஜீயைக் கேட்டால், அவர் ஹிந்துக்களின் பணமெல்லாம் அந்நிய தேசத்து வியாபாரிகளின் கையிலேறுகிறது ஆகவே நாளுக்கு நாள் இந்தியா வறுமையடைந்து பஞ்சமுண்டாகிறதென்பார். ஸ்ரீரோமேஷ் சந்திரதத் என்பவரைப் பஞ்சத்துக்கு என்ன காரணமெனில் அவர் வங்காளத்தில் செய்துள்ள சாஸ்வத செட்டில்மெண்டைப்போல் சென்னை பம்பாய் முதலிய எல்லா இடங்களிலும் செய்யாமல் முப்பது வருஷத்துக் கொருமுறை செட்டில்மெண்ட் செய்து தாங்கமுடியாத வரியை உயர்த்துவதால் குடிகள் க்ஷாமகாலத்தில் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவகையின்றித் துன்புறுகின்றனர் இதுதான் பஞ்சத்துக்குரிய காரண மென்பர். சிலபிரபுக்கள் ஹிந்துக்கள் கலியாணத்துக்கும் வேறுசடங்குகளுக்கும் இஷ்டமானபடி கடன்வாங்கிப் பணத்தை செலவழித்து ஏழைகளாகின்றனர். அதனால் பஞ்சம் நேரிடுகிறதென்பர். மற்றும் சிலர் ஹிந்துக்கள் சிறுவயதிலேயே கலியாணம்செய்து பிரஜா விருத்தியையுண்டாக்கி வறுமையால் துன்புறுகிறார்கள். நாள்தோறும் பிள்ளைகளும் பெண்களும் விருத்தியானால் வருஷமொருபிள்ளை பெறுவதாயிருந்தால் அவைகளின் ஜீவனத்துக்கு வழிவேண்டுமே? இந்தியா தேசம் விசாலப்படாதபோது அதன் பிரஜைகள் மாத்திரம் பெருகி வருவது பஞ்சத்துக்குக் காரணமென்பர். வேறு சிலர் சவுக்கார்களிடம் அதிக வட்டிக்குக் கடன்வாங்கி அதைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் நிலங்களைப் பறிகொடுத்து ஏழைகளாகின்றனர் என்பர். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணம் சொல்லுவது நியாயந்தான். ஒவ்வொன்றிலும் உண்மை உண்டுதான், ஆனால் இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து பஞ்சநிவர்த்திக்குத்தகுந்த பரிகாரம்யாது என்று தீர்மானிப்பதுதான் பெரியகாரியமாகும். இதைச்செய்வதற்குத்தான் ஒருவரையுங்காணோம், பேசுவதற்கு மட்டும் வெகுபேர் காத்திருக்கிறார்கள்.—"திராவிடாபிமானி"

## THE CONJEEVERAM PARISHAD.
## காஞ்சீபுரம் பண்டித பரிஷத்.

சென்ற வெள்ளிக்கிழமைப் பத்திரிகையிலும் அதற்கு முந்தின பத்திரிகையிலும் "காஞ்சீபுரம் பரிஷத்" தைப்பற்றி எழுதியிருப்பதில் சில பிழைகள் இருப்பதால் அவைகளைத் திருத்தி வாஸ்தவ்யமாய் நடந்த விருத்தாந்தங்களை யெழுத அவகாசம் கொடுக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

2. இந்தப் பண்டித சபை பட்டினத்திலுள்ள கன தனவான்களும், பட்டினத்திலும் காஞ்சீபுரத்திலும் உள்ள சில பண்டிதர்களும் ஆசார்ய புருஷர்களும் ஒரு கமிட்டியாகக்கூடி சமுத்திர யாத்திரை, பிரௌடா விவாகம் முதலிய விஷயங்களில் ஆசாரச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று பணம் செலவு செய்து கூட்டின சபை. ஷெ௸ எப்ரல் மாதம் 5-ந்தேதி ஆரம்பித்தபோது கீழ்க் குறிப்பிட்டபடி 72-பண்டிதர் பெயர்கள் ரிஜிஸ்தரில் தாக்கலாயிருந்தன. காஞ்சீபுரத்திலிருந்து எடுக்கப்பட்ட 9-பெயர்களையும் சேர்ந்து மொத்தம் 81:—

| | |
|---|---|
| மைசூர்க் கவர்ன்மெண்டார் அனுப்பியது | 19 |
| மைசூர் பிரைவேட்டு | 9 |
| பட்டினம் | 6 |
| செங்கல்பட்டு ஜில்லா | 10 |
| தஞ்சாவூர் ஜில்லா | 9 |
| விசாகபட்டினம் ஜில்லா | 4 |
| சிதம்பரம் | 2 |
| இதர இடங்கள் | 13 |
| ஆக | 72 |
| காஞ்சீபுரம் | 9 |
| மொத்தம். | 81 |

3. தர்ம சாஸ்திரம் நன்ருய்த் தெரிந்தவர்கள்தான் ஆசாரச் சீர்திருத்தம்செய்ய அதிகாரமுள்ளவர்களென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம். அப்படி தர்ம சாஸ்திரம் தெரிந்தவர்கள் மிகவும் ஸ்வல்பம். சாஸ்திரிகள் பண்டிதர்கள் என்று பெயர்பெற்றவர்களில் பலர் ஸம்ஸ்கிருத பாஷாக்கியானம் பூர்த்தியா யிருந்தபோதிலும் தர்ம சாஸ்திரத்தில் விசேஷப் பரிச்சயமில்லாதவர்களா யிருக்கிறார்கள். இவர்கள் இப்பொழுது இருக்கும் ஆசாரத்தையே பிரமாணமாகக் கொண்டு அதற்கு அனுகுணமான சில ஸ்மிருதி வசனங்களைத் தவிர பூரா சாஸ்திர சர்ச்சை செய்யாதவர்கள். இதை உத்தேசித்தே கமிட்டியார் பரிஷத்துக்கு ஒரு வாரம் முன்னலேயே உபசபை ஏற்படுத்தி அதில் கிருஹ்ய சூத்திரங்கள், ஸ்மிருதிகள் நிபந்தனைகள் முதலிய தர்ம சாஸ்திரங்களைச் சர்ச்சை செய்வித்தது. இந்த ஏற்பாட்டின்படி பெண்களுக்கு விவாக வயசு விஷயமான கிரந்தங்கள் அனைத்தும் உபசபையில் நன்ருய் ஆராய்ச்சி செய்யப்பட்டன. (2) இது தவிர முக்கிய சபையில் வாதம் செய்வதற்கு எல்லாப் பண்டிதர்களுக்கும் அதிகாரம் இருந்தபோதிலும் முடிவில் தீர்மானம் செய்து வோட் கொடுப்பதற்கு 36 பேருக்கு மேல்படாமல் ஒரு "பரிஷத்" நியமிக்கவேண்டு மென்பது மதராஸ் கமிட்டியாருடைய அபிப்பிராயம்.

4. எப்ரல் 5-ந்தேதி சாயங்காலம் மேற்சொன்ன அபிப்பிராயத்துக்கு ஏற்க 41 பெயருள்ள ஒரு "பரிஷத்" ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சேராத பண்டிதர்களுக்கு அதிருப்தி யுண்டாய் "தனிப்பரிஷத்தே வேண்டாம், 81 பண்டிதர்களும் சேர்ந்து அபிப்பிராயம் கொடுக்கவேண்டு" மென்று வாதிக்க ஆரம்பித்தார்கள். அன்றிரவு காஞ்சீபுர வாசிகளாகிய சிலர் அதிருப்தி யடைந்தமேற்படி பண்டிதர்களைக் கொண்டு ஒரு தனி மீட்டிங்கு கூடி பரிஷத்து ஏற்பாடு செய்தால் தாங்கள் சபைக்கு வருவதில்லையென்றும் நடக்கவேண்டிய விவாதம் உபந்நியாச ரூபமாயில்லாமல் வாக்கியார்த்த ரூபமாயிருந்தால்தான் வருவதாகவும் ஏற்பாடு செய்துகொண்டார்கள். இது விஷயத்தைப் பிரசிடெண்டு ரங்காசாரியாரவர்கள் ஒப்புக்கொள்ளாவிடினும் 6–ந்தேதியில் சமுத்திரயானத்தைப் பற்றிய சர்ச்சை வாக்கியார்த்தரூபமாகவே நடந்தது. இப்படி நடந்ததைப்பற்றித் தூரதேசத்திலிருந்து வந்த அனேக பண்டிதர்கள் அதிருப்தி அடைந்திருனும், வாக்கியார்த்தரூபமாய்க் குறித்த விஷயங்கள் எல்லாம் மிகுந்த மூன்று நாளில் முடிவு பெருதென்று தோன்றினபடியினுலும், 7-ந்தேதி காலையில் பிரசிடெண்டு அவர்கள் வாக்கியார்த்தத்தை நிறுத்தி விட்டு உபந்நியாச ரூபமாய் சர்ச்சை செய்ய வேண்டுமென்று சபையாருக்குத் தெரிவித்தார்கள். இதைக் கேட்டவுடன் மைசூரிலிருந்து வந்த சில பண்டிதர்கள் பிரசிடெண்டை அவமரியாதையாய்ப் பேசி, சபையைப் பார்க்க வந்திருந்த ஆனரெபில் கோவிந்தராகவய்யர், கருப்பூர் ஸ்ரீநிவாஸராவ், முதலிய கனதனவான்கள் மத்தியஸ்தம் பேசியும் கேளாமல் கலகஞ்செய்து சபையைக் கலக்கும்படி செய்துவிட்டார்கள். உடனே வந்திருந்த பண்டிதர்களில் பெரும்பான்மையோரும் மறுபடி ஒன்றுகூடி 7-ந்தேதிமுதல் 10–ந்தேதிவரை அதேஇடத்தில் அதே பந்தலில் உபந்நியாஸ ரூபமாய் சர்ச்சை நடந்தது. இந்த சபையின்சங்கியை 61. பாக்கியுள்ளவர்கள் தங்களுக்குள் கட்டுப்பாடு செய்துகொ

ண்டு சபைக்கு வரவில்லை. இப்படி வராதவர்கள் காஞ்சீபுர வாசிகள் 6, பக்கத்தூரார் 3, மைசூரார் 11 ஆக 20, இந்தப் புதுச்சபையில் சமுத்திரயாத்திரை, பிரௌடா விவாகம், வேறுமதம் சேர்ந்தவர்களைத் திரும்பி ஸ்வீகரித்தல் என்ற மூன்று விஷயங்களைப் பற்றிப் பூர்த்தியாய் வாதம் செய்யப்பட்டது. கலைந்து போன சபையில் ஸம்ஸ்கிருத பாஷாபிவிருத்தி என்கிற விஷயத்தைத் தவிர வேறு ஒரு விஷயத்திலும் பரிசீலனை செய்யப்படவில்லை. ஏற்பட்ட சபை இரண்டாய்ப்பிரிந்து போய்விட்ட தென்பதும் இந்த இரண்டு சபையும் பரஸ்பர விரோதமான அபிப்பிராயம் கொடுத்தார்க ளென்பதும் பொய் ரிபோர்ட்டு. புதுச் சபையில் "பரிஷத்" என்கிற உள்சபை நியமிக்கப்படவில்லை.

5. இந்தப் புதுச் சபையில் குறித்த விஷயங்களைப் பற்றிப் பல மாதங்களாக ஆராய்ச்சி செய்து தூர தேசங்களிலிருந்து வந்த மகா வித்வான்கள் பலர் தங்களுடைய அபிப்பிராயத்தை உபந்யாச ரூபமாய் வெளியிட்டிருக்கிறார்கள். பிராமணப்பெண்களுக்கு ருதுகாலத்துக்கு முன்னாலேயே தான் விவாகமாக வேண்டுமென்றும், கலியாணமாகாத பெண் ருதுமதியானால் அந்தப் பெண்ணை ஆற்றிலே குளத்திலே தள்ளிவிட்டுத் தாய் தகப்பன்மாரும் பிராணத்தியாகம் செய்து கொள்ளவேண்டுமென்று சாஸ்திர மிருக்கிறதாக அனேக ஜனங்கள் இப்போது எண்ணியிருக்கிறார்கள். இந்த எண்ணத்துக்குக் கொஞ்சம் கூட சாஸ்திரத்தில் ஆதாரமில்லையென்பது இந்தச் சபையினால் நன்றாய் விசிதமாயிற்று. மிகவும் புராதனமான கிருஹ்ய சூத்திரங்களையும் விவாஹ மந்திரங்களையும் பரிசீலனை செய்து பார்த்தால் பூர்வத்தில் பிரௌடையான பிறகுதான் பெண்களுக்குக் கலியாணமாகி வந்ததாக ஒரு கட்சி ஏற்படுகிறது. சுரௌதலிங்கங்கள் என்று சொல்லப்பட்ட சுருதியின் குறிகளும் ஸ்மார்த்த விதியைப் பார்க்கிலும் பலமுள்ளதென்ற ந்யாயத்தை அனுசரித்து ருதுமதீ விவாகந்தான் சாஸ்திரீயமான விவாகமென்று மகாமகோபாத்தியாயர் சந்திரசேகர சாஸ்திரிகள், மைலாப்பூர் காலேஜ் பிரம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள், அடையாறு லைப்ரரி பிரம்மஸ்ரீ பத்மநாபசாஸ்திரிகள் முதலியோர் வாதிக்கிறார்கள். இந்த வாதத்தை எல்லாரும் அங்கீகரிக்காத போதிலும் பெண்கள் ருதுவாய் 3 வருஷம் வரையிலும் கலியாணத்தை நிறுத்திவைக்கலாம் என்பதற்கு ஆட்சேபனையில்லை யென்பது இவர்களுடைய சித்தாந்தம். லட்சுமீபுரம் பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரிக்கும் இதே அபிப்பிராயம். மகா மகோபாத்தியாய தாத சுப்பராய சாஸ்திரிகள், மைலாப்பூர் காலேஜ் பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் இவ்விருவரும் தகுந்த வரன் அகப்படாத பட்சத்தில் ருதுவாய் மூன்று வருஷம் வரையில் கலியாணத்திற்கு காலம் உண்டென்று அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். திருமழிசை பிரம்மஸ்ரீ வரதாச்சாரியாரவர்கள் நிர்ணய சிந்துவில் சொல்லியிருக்கிற பிரயாச்சித்தத்தைச் செய்துவிட்டால் ருது மதீவிவாகம் சாஸ்திரீய மென்றே அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார். மேற்கூறியவர்களெல்லாரும் பிரபலமாய்ப் பேற்பெற்ற வித்வான்கள். சிஷ்யாசாரந் தவராதவர்கள். இவர்கள் இப்படி அபிப்பிராயப்பட்டிருப்பது பெண்களுக்குத் தகுந்த வரன் அகப்படாமல் தவித்துக்கொண்டிருக்கும் ஆஸ்தீக ஜனங்களுக்கு மிகவும் ஆறுதலாக இருக்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை. சபைக்குவந்த பெரும்பான்மையோரும் மேற்கூறியவாறே அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

6. சீமைக்குப்போய் வந்தவர்களைப் பிராயச்சித்தம் செய்வித்து, சாதியில் சேர்த்துக்கொள்ளலாமென்றும் அனேகர் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்களாம்.

7. இந்தப் பண்டித சபைக்கு முதலில் கொஞ்சம் கலவரம் ஏற்பட்டபோதிலும் பிற்பாடு சரிவர நடந்தது எல்லாருக்கும் சந்தோஷமே. மதிராஸ் கமிட்டியாரில் பலர் இந்தச் சபையை மறுபடியும் அடுத்த டிசம்பர் மாதத்தில் சேர்க்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அங்கு நடந்த சபையின் வரலாற்றையும் அதில் நடந்த உபந்யாசங்களையும் தீர்மானங்களையும் அவ்விடம் எழுதி வாசிக்கப்பட்ட பத்திரிகைகளையும் ஒருங்கு சேர்த்து ரிபோர்ட்டாகப் பிரசுரம் செய்யப்படும். அந்த ரிபோர்ட்டையும் அதில் கண்ட பிரமாணங்களையும் பரிசீலனைசெய்து டிசம்பர் மாதத்தில் நடக்கும் சபையில் ஒரு விதமான முடிவு ஏற்பட வேண்டுமென்பது என்னுடைய பிரார்த்தனை.

ஆர். ஸ்வாமிநாதய்யர்.

17-4-12 பரிஷித் ஸெக்ரிடேரி.

## STREET DUST.

### தெருப்புழுதி.

ஸ்ரீமான் டி. எஸ்.

வேங்கிடராமண ஐய்யர். பி.ஏ., எல். டி.

"விளக்கு உடைந்து அவிந்தால் (அதன்மூலமாய்) அணுக்களில் காணும் ஜோதி மறைந்து விடுகிறது; (அதுபோலவே) மேகம் சிதறுண்டால் வானவில்லின் மகிமையும் மங்கிப்போகிறது."—(இங்கிலீஷ் கவி) ஷெல்லி.

தமிழருக்குள் ஏதேனு மொன்றை இகழ்ந்து பேசவேண்டி வந்தால் அதை 'மண்ணுங்கட்டி' யென்றும் 'தெருப்புழுதி' யென்றும் சொல்லுவது வழக்கம். மண்ணுங்கட்டியும் அது உடைந்தாகிய தெருப்புழுதியும் நாம் எங்குங்காணும் வஸ்துக்கள். தெருப்புழுதியால் நமக்குண்டாகும் உபத்திரவங்களை மட்டும் நம்மில் எல்லோரு மறிவார்கள். அந்த உபத்திரவம் ஒருவகைப்பட்டதல்ல. கண், காது, மூக்கு, வாய், உடம்பு ஆகிய இந்த ஐந்தில் ஒன்றும் இதனால் உபத்திரவப்படாமலிருப்பதில்லை. பெரிய பட்டணத்துத் தெருக்களில் ஒரு முறை வெளியே போய் வந்தால் உடம்பெங்கும் நீறுபூசியதுபோல தெருப்புழுதி ஒட்டிக்கொள்ளுகிறது. அல்லது மூக்கிலும், காதிலும், கண்ணிலும் வாயிலும் வேண்டிய மட்டில் வந்தடைந்து கொள்ளுகிறது. இப்படியே நாளடைவில் நடந்துவருமானால் கண் முதலிய அவயவங்களுக்கு ஏதாகிலும் விசேஷ வியாதிகளுமுண்டாகி விடுகின்றன. சென்னை, திருச்சி முதலிய பிரபல பட்டணங்களில் இருப்பவர்களெல்லோரும் இதற்கு வேண்டிய சாக்ஷியம் சொல்லுவார்கள். அவ்விடங்களில் ஜனக்கூட்டத்தினாலும், மோடார், குதிரை, வண்டி முதலிய வாகனங்களாலும் கிளம்பிவரும் புழுதி மனிதருக்கு இவ்வளவு உபத்திரவஞ் செய்கிறதென்று சொல்லிமுடியாது. இது போதாமல் ரெயில்வே கம்பெனியாரின் தீவண்டிகள் கார்மேகம்போல் கிளப்பிவிடும் நிலக்கரிப் புகையும் புழுதியுடன் சேர்ந்து ஜனங்களை இம்சிக்கின்றன. ஆனால் தெய்வாதீனம் சூரிய வெளிச்சமும், உஷ்ணமும், காற்று, மழை முதலிய சாதனங்களும் நமக்கு உபகாரமாக விருப்பதால் ஏதோ ஒருவாறு நாம் ஜீவித்து வருகிறோம். இல்லாவிட்டால், இப்பெரும் பட்டணங்கள் வெகு நாளுக்கு முந்தியே பாழடைந்துபோயிருக்கும்.

இதுவரை சொல்லிவந்ததில் தெருப்புழுதி மனிதருக்கு ஒருவகையானும் பிரயோஜனமில்லையென்றே தான் காணும். என்றாலும், அது தப்பென்பது வெகு சீக்கிரத்தில் விளங்கும். ஈசுவர சிருஷ்டியில் பிரயோஜனமற்றதாக ஒரு பொருளுங் கிடையாதென்பது நிச்சயம். ஆதலால் தெருப்புழுதிக்கும் ஏதாகிலும் பிரயோஜன மிருக்கத்தான் வேண்டும். சாமான்னியமாய் நம்மில் யாருக்கும் அதன் பிரயோஜனம் தெரியாமலிருக்கக்கூடும். அது கொண்டே அதற்குப் பிரயோஜன மில்லையென்று தீர்மானிப்பது மதியீனம். தெருப்புழுதியால் உண்டாகக்கூடிய உபத்திரவங்களனைத்தும் பிரத்தியக்ஷம். நமது கண்களும், வாயும், மூக்கும் இதற்கு உறைப்பாகச் சாக்ஷியம் சொல்லி வருகின்றன. ஆனால் இம்மாதிரி உபத்திரவங்கள் நாம் மேற்கூறியபடி தரைக்குச் சமீபத்தில் ஐந்தாறு அடிக்குள் நாம் கண்ணுற் பார்க்கக்கூடிய பெரிய அணுக்கூட்டங்களினால் மட்டுமே உண்டாவதாம். இவைகள் அப்போதைக்கப்போது மழை பெய்வதாலும் முனிசிபாலிடிகள் தெருக்களுக்கு ஜலம் தெளிப்பதாலும் அடங்கிப் போய்விடுகின்றன வென்றே வைத்துக்கொள்வோம். ஆனால் நமது கண்களுக்குச் சுளுவில் புலப்படாதனவாய் ஆகாயத்தில் சுமார் 10, 12 மைல் உயரம் வரையிலும் எங்கும் வியாபித்து, காற்றோடு காற்றாய் எக்காலத்திலும் புழுதிக் கூட்டங்கள் பறந்து கொண்டே யிருக்கின்றன. அவையும் தெருப்புழுதியின் அம்சமே. இவைகளை யில்லாமற் றொலைத்துவிடுவது நம்முள் யாருக்கும் சாத்தியமேயன்று. ஒரு சமயம் அது சாத்தியமாகி நாமும் அதைத் தொலைத்து விடும் பக்ஷத்தில், நாம் வசிக்கும் இவ்வுலகத்தின் இயற்கையமைப்பின் அழகும், நமது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத சில சௌகரியங்களும் வெகுசாய் இல்லாமற் போய்விடு மென்பது நிச்சயம்! இதென்ன ஆச்சரியம்! இதைச் சற்று விசாரிப்போம். முதலாவது நம்மைச் சுற்றிலுமிருக்கும் ஆகாயம், ஜலம் ஆகிய இவ்விரண்டின் குணாதிசயங்களைச் சற்று கவனித்துப் பார்ப்போம்.

நிர்மலமா யிருக்கும்பொழுதும் ஆகாயம் நீல

மாய்க் காண்கிறது. ஏன்? ஏதோ ஒரு நியாயத்தை யனுசரித்தேதான். இவ்வாறே ஆகாயம் நீலநிறமா யிருப்பதோடுகூட, அப்போதைக்கப்போது ஆகாயத்திற் காணப்படும் அறைவட்ட வடிவமான 'இந்திரதனுசு' என்று வழங்கிவரும், "மழை வில்"லில் தோன்றும் சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் முதலிய பல நிறங்களினால் அலங்கரிக்கப் பட்டுள்ள மேக ஜாலங்களின் காக்ஷிகளுக்கும், விடியற்காலத்தில் சூரியோதயத்திற்குச் சற்று முந்திக் கிழக்கிலும், ஆகாயத்தின் மேல்புறத்திலும் காணப்படும் அருணோதயத்திற்கும், இவை போன்ற இன்னும் பல காக்ஷிகளுக்கும் ஏதாகிலும் நியாய மிருக்கத்தான்வேண்டும். இதைக் கண்டுபிடிக்க முயன்றதில், நாம் மேற்சொன்னவாறு எங்கும் வியாபித்துள்ள பெரிதும் சிறிதுமான அணுக்கூட்டங்களே இவ்வகையான அற்புதங்களுக்கெல்லாம் காரணமென்று விவேகிகள் கண்டறிந்திருக்கிறார்கள்.

இது எப்படியென்று சற்று ஜாக்கிரதையாய் ஆலோசித்துப் பார்ப்போம். சுமாராக இருட்டுள்ள ஒரு அறைக்குள் கூரையில் ஒரு துவார வழியாய் சூரிய வெளிச்சம் பிரவேசித்தால், அந்த வெளிச்சத்தில் பெரிதும் சிறிதுமாக அணுக்கள் எங்கும் மிதந்து குதித்துக் காணுவதை நீங்கள் எல்லோரும் பார்த்திருக்கிறீர்கள். அந்த அறைக்குள் கொஞ்சம் புகைந்து எரியும் தீ ஒரு மூலையில் இருக்குமாகில் இன்னும் விசேஷம். அவ் வறையில் சூரிய வெளிச்சத்தின் பாதையைச் சற்று உற்றுப் பார்த்துக்கொண்டே யிருந்தால் இரண்டொரு ரகசியங்கள் தெரியவரும். அவை யாவன; எங்கெங் கெல்லாம் அணுக்கூட்டங்கள் பெரியனவாயும் ஏராளமாயு மிருக்கின்றனவோ அங்கங்கெல்லாம் ஆகாயம் அதிக பிரகாசமாயும், எவ்வெவ்விடங்களில் தூசிகள் குறைந்தும், சிறுத்தும் இருக்கின்றனவோ அவ் விடங்களில் பிரகாசம் சற்று குறைந்தும், ஏதாவது ஒரிடத்தில் சூரிய வெளிச்சத்தினால் பிரகாசிக்கும் தூசிகளே கண்ணுக்குக் காணுவிடில் அவ்விடம் நாம் வெளியிற் பார்க்கும் ஆகாசத்தைப் போலவே கொஞ்சம் நீல நிறமாயிருப்பதும் அதிக பிரகாசமில்லாமல் விளங்கும். அணுக்கள் கொஞ்சமேனு மில்லாவிடில், சூரிய வெளிச்சம் பாய்வது நமக்குப் புலப்படாது. அதாவது, தூசியணுக்களைக் கொண்டு தான் நாம் சூரிய கிரணங்களைப் பார்க்கலாமே தவிர நேராக அவைகளைப் பார்க்க முடியாது.

வேண்டுபவர்கள் இதைப் பரீக்ஷித்துப் பார்த்தறிந்துகொள்ளலாம். ஆனால் அதற்குக் கொஞ்சம் யந்திர சகாயம் வேண்டும். ஏதாகிலும் ஒரு பெட்டிக்கு நாலு புறத்திலும் மரப்பலகைக்குப் பதிலாகக் கண்ணாடி போட்டு அதை ஒரு இருட்டறைக்குள் எடுத்துப்போவோம். பிறகு அதை ஒரு மேஜைமேல் வைத்துப் பலகணி வழியாய்ச் சூரியகிரணம் ஒன்றை ஒரு பக்கத்திலிருந்து மற்றொருபுறம் பாய்ச்சுவோம். அப்பொழுது பெட்டி யுள்ளெல்லாம் நமக்கு நன்றாக புலப்படுகிறது. பிறகு அப்பெட்டியிலுள்ள வாயுவை யந்திர சகாயத்தால் வெளியே இழுத்துவிடுவோம். அனேகமாய் வாயுவனைத்தும் வெளிவந்தபின் மறுபடி முன்போலவே ஒரு கிரணத்தைப் பாய்ச்சினால் பெட்டிக்குள்ளிருப்பது முன் நமக்குக் கண்டதுபோல விசிதமாவதில்லை யென்பது விளங்கும் என்று மட்டுமல்ல. பெட்டிக்குள் வாயுவென்பதை முற்று மில்லாமலாக்கிவிட்டால் சூரிய கிரணம் எவ்வளவு பாய்ச்சினாலும் அது முற்றும் இருண்டேதான் காணும். மறுபடி சிறிது சிறிதாக வாயுவைப் பெட்டிக்குட் புகுத்துவோம். அப்பொழுது முற்றும் இருண்டிருந்தது சிறிது சிறிதாக நீங்கிக் கதிரவனுடைய கிரணம் படிப்படியாகப் பலன் கொடுத்துவரும். கடைசியில் பெட்டிக்குள் இருக்க வேண்டிய வாயு வந்து சேர்ந்ததும் சூரிய வெளிச்சம் பெட்டிக்கு வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் ஒரேஜோதியாகப் பிரகாசிக்கும்.

இது போலவே பெட்டிக்குள்ளிருக்கும் வாயுவை நாம் பூராவாக நீக்கிவிட்டுப் பிறகுவெளி வாயுவிலிருந்து அதிற் பறந்துகொண்டிருக்கும் அணுக்கள், பரமாணுக்கள் முதலிய யாவற்றையும் நன்றாக "வடிகட்டி" விட்டு, வாயுவைமட்டும் சிறிது சிறிதாகப் பெட்டிக்குள் செலுத்துவோம். இந்த நிர்மல வாயுவைப் பெட்டிக்குள் எவ்வளவு செலுத்தினாலும், அதனால் ஒரு பிரயோஜனமும் நாம் காணுவதில்லை. அதாவது பெட்டியின் உட்புறம் இருண்டது இருண்டபடியே தானிருக்கிறது.

இந்தப் பரீக்ஷையினால் நமக்கு விளங்குவதியாது?

பெட்டியில் சாமான்னிய வாயு விருக்கும்பொழுது சாமான்னிய வெளிச்சமுங் காணுகிறது. அது குறையக்குறைய வெளிச்சமுங் குறைகிறது. வாயு வென்பது சுத்தமாக இல்லாவிட்டால் வெளிச்சமும் அப்படியே. மறுபடி வாயுவிலுள்ள அணுக்களைப் புறம்பாக்கி, நிர்மலவாயுவைப் பெட்டிக்குள் செலுத்தினல் எவ்வளவிற்கு நாமதைப் பெட்டிக்குள்ளடைத்தாலும் இருண்ட பெட்டி இருண்டேதான் காணுகிறது. ஆதலால் நாம் தெரிந்துகொள்வது இது. இப்பிரபஞ்சத்தில் நமது கண்களைக்கொண்டு எதைப் பார்க்கவேண்டுமானாலும் அதற்குத் தெய்வம் சகாயிப்பதோடு (கண்கள் நேராயிருப்பதோடு கூட) தெருப்புழுதியும் சகாயிக்கவேண்டும். அதாவது, தெருப்புழுதியின் உதவியால் சூரிய கிரணங்கள் பிரதிபலித்து நமது கண்ணிற்பட்டு வஸ்துக்களைப் பகுத்தறியச் சௌகரியமுண்டாக்கவேண்டும்!

நம்மைச் சுற்றிலும் தரை முதல் 10, 12-மைல் உயரம் வரையிலும் புழுதியணுக்கள் பெரிதுஞ் சிறிதுமாக இருந்துகொண் டிருப்பதாக மேலே சொன்னோ மல்லவா? இவ்வணுக்களில் அதிக கனமானவைகள் தான் நம் கண்ணுக்கெதிரில் மேலுங் கீழுமாகக் குதித்துக்கொண்டிருப்பவை. ஆகாயத்தில் உயரப்போகப்போக இவை அதிக நுட்பமாகிக் கண்ணுக்குத் தெரியாமல், எப்பொழுதும் ஆகாயத்திலேயே பறந்துகொண்டு, ஆகாச வெளியெங்கும் வியாபித்துக்கொண் டிருக்கின்றன.

இப்படி யிருப்பதனல் தான் வர்ண வித்தியாசம் ஏற்பட்டு நமது கண்களுக்கு 'இந்திர தனுசு' முதலிய மகிமைகள் வெளியாகின்றன. சாமான்னியமாய் சூரிய 'கிரணங்களை வெள்ளிக் கம்பிகள்' என்று நாம் வருணிப்பதுண்டு. ஆனல் இந்த வெள்ளிக் கம்பியைப் பகுத்துப் பார்த்தால் பல வர்ணங்கள் கூட்டி வெள்ளியாகி யிருப்பது பிரத்தியக்ஷமாகும். ஆகவே தரைக்குச் சமீபத்தில் தெருப்புழுதி அணுக்கள் மயமாகியும், மேலே போகப்போகப் பரமாணுக்கள் மயமாகியும் இருப்பதால், சூரியனுடைய வெள்ளிக் கம்பிகள் இவைகள் வழியாய்ப் பாய்ந்து வரும்பொழுது அவற்றை அணுக்கள் ஒரு வகையாகவும் பரமாணுக்கள் மற்றொரு வகையாகவும் பிரதிபலித்து விடுகின்றன. அதாவது அணுக்கள் அவ்வெள்ளிக்கம்பியிலுள்ள ஏறக்குறைய எல்லா வர்ணங்களையும் பிரதிபலித்தும், பரமாணுக்கள் நீலம், ஊதா ஆகிய இரண்டொன்றை மட்டும் பிரதி பலித்தும் விடுகின்றன.

ஆகவே ஆகாயம் இன்ன வர்ணந்தானென்று யாருஞ் சொல்லுவதற்காகாது. பரமாணுக்களே மிகுந்து அணுத்திரள் குறைந்திருக்கும் சமயத்தில் அது நீலமாகக் காணும். இதைக் காரணமாகக் கொண்டுதான் ஆகாயத்தில் மேகம்முதலிய இடையூறுகளற்று நிர்மலமா யிருக்கும்பொழுதும் அது எல்லார் கண்ணுக்கும் நீலக்குடை விரித்தாற்போல் காணுவது. இதைவிட்டு அணுக்கள் அதிகமாகிப் பலவகையாகக் கூத்தாடிவரும் பொழுது வர்ணபேதங்களேற்பட்டு, சில சமயங்களில் சிவப்பாகவும், வேறு சமயங்களில் மஞ்சளாகவும் இன்னும் பல தினுசுகளாகவும் காணுகிறோம். ஆதலால் ஆகாயத்தில் வர்ணம் வித்தியாசப்பட்டுக் காணுவதற்குக் காரணம் ஒன்றேதான். அதாவது, அணுக்களும்பரமாணுக்களும் பலவகையாகக்கூடிப் பிரதிபலித்து நமது கண்களுக்குக் கொடுக்கும் வெளிச்சத்தை அனுசரித்துக் காணுவதாம்.

இப்படியன்றி சூரியகிரணம் பாய்ந்து வருவதினுலேயே ஆகாயம் நீலமாகிக் காணுகிறதென்று வைத்துக் கொண்டால் பூமிக்கருகில் நாலைந்து மைல் உயரத்திற் காணும் பொருள்களும் நீலமாகவே தோற்ற வேண்டும். ஆனல் பிரத்தியக்ஷத்தில் அவை அவ்வாறு காணுவதில்லை. இமயமலையை நாலைந்துமைல் உயரம் வரைப் பார்த்தவர்கள் அது வெள்ளையாயிருப்பதாக வருணித்திருக்கிறார்களல்லது நீலமா யிருப்பதாகச் சொல்லவில்லை. இதனலும் இது போன்ற வேறு திருஷ்டாந்தங்களாலும் நாம் ஆகாயத்திற் காணும் வர்ண பேதங்கள், அணுக்கள் முதலியவற்றாலாவதல்லது ஆகாயத்தின் கண்ணே உள்ள சுபாவ குணமென்று சொல்லுவதற்கில்லை.

இதற்குப் பின்னும் சாக்ஷியம் வேண்டுவோர் சூரியன் உதிக்கும்பொழுதும் அஸ்தமிக்கும்பொழுதும் கவனமாகப் பார்த்தறியவேண்டும். சூரியன் உதயமாகும்பொழுது செந்தணல்போல் கண்ணுக்குக் காணுவதும், கிரணங்கள் பரவாமலிருப்பதும் பிரத்தியக்ஷம். மேலே கிளம்பி வர வர சூரிய பிம்பத்தின் வர்ணமும் மாறி ஒளியும் அதிகரித்து வருகிறதல்லவா? இதற்குக் காரணம் நாம் மேலே சொல்லியதைக் கவனித்தால் விளங்கும். காலையில் எழுந்து நாம் சூரியனைப் பார்த்தால் நமக்கும் சூரியனுக்கும் நடுவிலுள்ள ஆகாயப் பிரதேசத்தில் அணுக்களும்

பரமாணுக்களும் அதிகமாக அடர்ந்து, அணுக்கள் மிருந்து கூத்தாடுவதனால் சூரியனுடைய ஒளி அனேகமாய் எல்லாம் பிரதிபலிக்கப்பட்டு நமது கண்ணுக்கெட்டாமல் அதிலுள்ள சிவப்பொன்று தவிர மற்றெல்லா வர்ணங்களும் நமக்கு நஷ்டமாகிவிடுகின்றன. சூரியன் உயரப் போகப் போக அதன் பிம்பத்திற்கும் நமக்கும் மத்தியிலுள்ளவாயுவெளி சனங் குறைந்து போகிறது. போகவே அணு ஜாலமும் குறைந்து பரமாணுக்கள் வழியாகவே கிரணங்கள் பாய்வதினால் நமக்கு வெளிச்சமு மதிகரித்து, வர்ணமும் மாறுகிறது.

இவ்வாறே அந்திப்பொழுதில் செவ்வான மிட்டு நமது கவிகள் பலவகையாக் வருணிக்கும் சந்தியாதேவியின் காக்ஷியும் என்றறியலாம். சூரியோதயத்திற்கு முன்னும், சூரியன் அஸ்தமித்த பிறகும், வானத்தில் மேக சஞ்சாரமும், அதிற் காணும் பல வர்ணங்களும் அணு ஜாலங்களுடைய செய்கையினல் சூரிய வெளிச்சம் படிப்படியாகப் பேதித்துக் காணுபவை. ஆதலால் "தெருப்புழுதி" இல்லாவிட்டால் நமது கவிகளுக்கு இம்மட்டில் பிழைப்புப் போய்விடுமென்பதும், ஆகாசத்தை வருணிப்பதற்கில்லாமல் வாயில் மண் விழுந்து விடு மென்பதும் தெளிவாகியதல்லவா? ஆதலால், ஒ கவிகளே! தெருப்புழுதியை நீங்கள் நிந்தியாதேயுங்கள்! ஸ்ரீகிருஷ்ணபகவான் தொண்டரடிப்பொடியைப் பெட்டியில் வைத்துப் பூஜை செய்ததாகப் பாகவதர்கள் கதை சொல்லுவதற்கு இப்பொழுது பொருள் விளங்குகிறதா? தொண்டரடிப் பொடியை மட்டும் வைத்துப் பூஜை செய்வது பாகவதர்களுக்கு வெகுநாளாய் வந்திருக்கும் தருமம். கவிகளாகிய உங்களுக்கோ பிரபஞ்சத்திலுள்ள புழுதியனைத்தும் எம்பெருமான் ஸ்ரீபாதப் பொடியென்று அறியுங்கள்.

இப்பொழுது நாம் இப்பூமியைச் சூழ்ந்திருக்கும் கடலிலுங்கூட இவ்வணுத்திரள் மகிமையால் தான் அநேக விசித்திரங்களைக் காண்பது சாத்தியமாகிறதென்று எளிதில் விளக்கலாம். சமுத்திரத்தையும், பெரிய நதிகள், ஏரிகள் முதலியவற்றையும் பல விடங்களிற் பரிசோதித்தவர்கள் அவை யனைத்தும் ஒரே வகையான நீல மல்லவென்றும், அந்நீலம், ஒரிடத்தில் கூடியும் மற்றோரிடத்தில் குறைந்துங் காணுகிறதென்றும் சொல்லுகிறார்கள். இது வாஸ்தவமாதலால் இதற்கென்ன காரணமென்பது இப்பொழுது நமக்குத்தெரியும். நீரில் கலந்துள்ள அணு ஜாலங்கள் தங்கள் மேற்படும் சூரிய கிரணத்தை நமக்கு மடக்கிக் காட்டுவதினால் அவ்வளவிற்குத்தான் நீலம் முதலிய வர்ணங்களும் சோபிக்கின்றன.

ஆதலால் இதுவரை சொல்லி வந்ததைப் பிண்டித்துப் பேசுமிடத்து இந்த சங்கதிகள் நமக்கு வெளியாகின்றன.

1. ஆகாயத்தில் அணு ஜாலங்களில்லாவிட்டால் வானமுகடு நடுப்பகலிலுங் கூட நிசிராத்திரியிற் காணுவதுபோல் பயங்கரமாய் இருண்டு காணும்.

2. அவ்வாறே சமுத்திர ஜல முதலியவற்றிலும் புழுதியில்லா விட்டால் அந்த ஜலமும் கோரமாக இருண்டுதான் காணும்.

3. செவ்வானம், சூரியனுடைய உதயாஸ்தமனங்கள், துருவப் பிரதேசத்தில் பல மாதங்கள் விடாமல் கண்டு வரும் ஜோதி மகிமைகள் முதலியயாவும், கவிகள் வர்ணித்திருக்குமாறு காணுவது சாத்தியமேயில்லை.

4. என்று மட்டுமல்ல. சாமான்னியமாய் நாம் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுவதும், நமக்கு வேண்டிய பதார்த்தங்களை வைத்த விடங்களில் சுகமாய்ப்போய் எடுத்தாளுவதும், இதுபோன்ற நித்திய விதிகளுக்கு இப்பொழுதிருக்கும் சவுகரியங்களும் எல்லாம் கஷ்ட சாத்தியமாகிப்போய், நமக்குக் கண்ணிருந்தும் பிரயோஜனமில்லாமல், உலகம் முழுதும் குருட்டுத்தனம் நிறைந்து திண்டாட வேண்டி யிருக்கும்.

5. ஆதலால் இத்தியாதி நியாயங்களை நாம் கவனித்துத் தெருப் புழுதியைப்பற்றி இனியாகிலும் வாய்ச்சுளுவாகப் பேசக்கூடாது. நமது நாக்கிலும் மூக்கிலும் கண்ணிலுங் காதிலும் உடலிலும் புழுதிபடியும் போது நமக்கு ஆக்கிரக முண்டாவது சகஜமென்றாலும், அம்மாதிரி நம்மை உபத்திரவிப்பவைகளை நீர் முதலிய உபாயங்களால் அடக்குவதுகிரமந்தா னென்றாலும், தெருப்புழுதி யென்று ஒரே பேச்சில் நமது கண்ணுக்குக் காணாத அணுக்கள் பரமாணுக்கள் முதலியவற்றையும் இகழ்ந் துபேசுவது பெரிய பிசகு.

இதுவரை சொல்லிவந்த மகிமைகள் புழுதியினால் நமக்குக் கிடைக்கும் ராமணீயத்தை மட்டும் விசேஷித்து விளக்கி வந்ததாகக் கொள்ளலாம். இப்பொ

மூது சொல்லப்போவது நம்முடைய லௌகிக வியாபாரங்களில் அதன் மூலமாக நமக்குக் கிடைக்கும் பெரும் பிரயோஜனங்களைப் பற்றியது.

"கண்ணுக்கு ஆகாயம் நீலமாகக் கண்டாலும் காணவிட்டாலும், சந்தியா காலங்களில் செவ்வானமிட்டாலும் இடாவிட்டாலும், அவைகளைக் கொண்டு நமக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. வயிறுமட்டும் நிறைந்தால் சரி. உண்டு, உடுத்துத் தூங்கிச் சவுக்கியமா யிருப்பதற்கு ராமணீயத்தைக் கொண்டு ஆகவேண்டியதென்ன? ஆதலால் தெருப்புழுதியைப் பற்றிய பேச்செல்லாம் பதர்ப் பேச்சுதான்" என்று யாராவது வயிறு வளர்ப்பவர்கள் ஆக்ஷேபிக்கலாம். "ஓ வயிறு வளர்க்கும் நண்பர்களே! தெருப்புழுதியைத் திரஸ்கரித்து விட்டு நீங்கள் நெடுநாள் வயிறு வளர்ப்பது முடியாதென்று நிச்சயமாய் நம்புங்கள். தெருப்புழுதி யில்லாவிட்டால், ஐயோ பாவம், உங்களுடைய வயிறு இரண்டுநாளில் வாடிப் போகுமே! மண்ணைத் தின்று வயிறு வளர்ப்பது சாத்தியமானு லொழிய, உங்கள் பிழைப்பு அம்பலந் தான்!"

இதென்ன விபரீதம்! தெருப்புழுதியில்லாவிட்டால் நாம் வயிறு வளர்க்க முடியாதென்பது விதண்டாவாதமாகக் காணும். என்றாலும் அது வாஸ்தவம். நாம் மேற்சொன்னபடி ஆகாயத்தில் பரமாணுக்கள் உயரப் பறந்து சுற்றி வருவதினாற்றான் மப்பு, மந்தாரம், மேகம், (ஸ்தாவர ஜங்கம வஸ்துக்களாகிய எல்லாவற்றையும் செழிக்கச் செய்யும்) மழை முதலிய யாவும் நமக்கு வேண்டியபடி யுதவி நம்மையும் இவ்வுலகத்தையும் உய்விக்கின்றன!

இதன் ரகசியம் அடியில் விவரிக்கும் பரீக்ஷையினால் நன்கு விளங்கும். ஒரு கண்ணாடிச் சட்டியைக் கவிழ்த்துவைத்து அதிலுள்ள வாயு, அணுக்கள் முதலிய யாவற்றையும் யந்திர சகாயத்தால் அப்புறப்படுத்தி, ஜலத்தை ஆவியாக்கிச் சட்டிக்குள் செலுத்திவிடுவோம். பிறகு அந்தச் சட்டியை எவ்வளவு மட்டுங் குளிர வைத்தாலும் உள்ளிருக்கும் நீராவி ஆவியாகவே இருப்பதொழிய இறுகி நீர்த்திவலைகளாக மாறுவதில்லை! இச்சமயத்தில் சட்டிக்குள் சாமான்னிய வாயுவை அதாவது, அணுக்கள் கூடிய வாயுவைக் கொஞ்சம் உட்செலுத்துவோம். அதேக்ஷணத்தில் இதுவரை முரட்டுத்தனம் செய்துவந்த ஆவியானது ரூபமாறிச் சட்டிக்குள் மந்தாரம்போற் கண்டு ஒரு நிமிஷத்தில் அதன் நாலா பக்கத்திலும் கண்ணீரைப்போல் வடிந்து விடுகிறது. இதனால் நாம் அறிவது இது. ஆகாயத்திலுள்ள அணுக்கள் பரமாணுக்களைச் சுற்றிலும் ஆவிரூபமான நீர் சாமான்னியமாய்க் கண்ணுக்குத் தெரியாம லலைந்துகொண்டிருக்கிறது. ஏதாவது காரணம் பற்றி சில பிரதேசங்களில் குளிர் அதிகரிக்குமாகில் உடனே இவற்றைச் சுற்றிலுமுள்ள ஆவிநீர் அவ்வணுக்களை யொட்டி இறுகிச் சிறு மழையாகவும் பெருமழையாகவும் பொழிகின்றது.

இப்படி யில்லாமல் வாயுவில் எங்கும் அணுக்களென்பது இல்லையென்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது நம்முடைய பிழைப்பும், மலைத்தாழ்வரைகள், அவற்றில் வளர்ந்திருக்கும் மரச்செடி, கொடி முதலியவைகள் ஆகிய இவற்றின் பிழைப்பும் ஒரு காசு பெறாமற் போய்விடும். ஏனெனில் அப்பொருள்களும் நாமும் நம்மைச் சுற்றியிருக்கும் நீராவிக்கு லக்காகி, அது நம்மையொட்டி இறுகிப் பயங்கரமான விதமாய் யுகாந்த பெருவாரிபோல் வெள்ளமட்டும் நிமிஷத்தில் பெருகி, அதனாலுண்டாகக் கூடிய பல அனர்த்தங்களுக்கும் இடங்கொடுக்கு மல்லது, "ஆகாசத்திலுள்ள மேகங்களை இந்திரன் பசுவைக் கறப்பதுபோல் கறந்து நமக்கு ஆனந்தத்தையும் ஐசுவரியத்தையுங் கொடுக்கின்றான்" என்பது போன்ற கவிவர்ணனைகளுக்கும், மழை நின்று நிதானமாய்ப் பெய்வதினால் நாமடையும் பிரயோஜன மொன்றிற்கும் இடமிராது. தவிரப் பெய்யு மழையெல்லாம் மேற்குறித்தவாறு மலைத்தாழ்வரைகளுக்கும் கானல்களுக்கும் மட்டுமே விசேஷமாக உபகரிப்பதோ அபகரிப்பதோ ஆவதன்றி, பூமியில் மற்றுமுள்ள பிரதேசங்களெல்லாம் பாழாகிப் பாலைவனமாய்த் தீர்ந்துவிடும். இதைவிட மகாப்பிரளயம் நமக்குக் கிடைப்பதரிது.

ஆதலால் தெருப்புழுதியைக் குறித்து இதுவரை விசாரம் செய்ததில் இரண்டுவிஷயங்கள் தெளிவாகின்றன. அவையாவன: (1) மேற்குறித்தபடி தெருப்புழுதி யென்று சாமான்னியமாய் நாம் சொல்லுவது நமக்கு வெகுசாய் உபத்திரவத்தையே விளைவிப்பதுதான், அதையடக்க நமது முனிசிபல் விவேகிகள் முதலியோர் விடாமல் முயன்றுவருவதும் நியாயந்தான். (2) ஆனால், இப்புழுதியானது அணுரூபமாகவும் பரமாணுரூபமாகவும், வாயு, நீர் இவற்றுடன் கலந்து ஆகாசவெளியில் எங்கும் வியாபித்து மகா சூத்திரதாரணாகிய சர்வேசுவரனுடைய சந்தோஷத்தை யனுசரித்து உழலாவிட்டால் நாம் வசிக்கும் இப் பூமியானது நமக்குவேண்டிய பல விடங்களில் இருள் சூழ்ந்தும் வேறுபல விடங்களில் யுகப்பிரளயம் தினமுமுண்டாகியும், இவ்வுலகம் வெகு சீக்கிரத்தில் நமக்கு வாசயோக்கிய மற்றுப்போய்விடும். இப்படியாகாமல் புழுதி மூலமாய் நமக்கு "வான்சிறப்பு" முதலிய வைபவங்களைக் கொடுத்தருளிய பகவானுடைய கருணையை வியந்து, இனி நாம் தெருப்புழுதியைப் பற்றிப் பேசும் பொழுதெல்லாம் வாய்ச்சளுவாகப் பேசாமல், அதன் அபார மகிமையையும், அம்மூலமாய் நிறைவேறும் ஈசுவர சங்கற்பத்தையும் நினைத்து நன்றியுடன் வாழ்வோமாக.—**வித்யா விஹாரிணி,**

## DEPARTMENTAL NOTES.

## பகுதிக் குறிப்புகள்.

### AGRICULTURE

### விவஸாயம்.

**Water-cess.**

தண்ணீர்த்தீர்வை.—புன்செய் நிலம் பாசனத்தை விட உயரமாயிருந்து அதனால் ஸர்க்கார்த் தண்ணீரை உபயோகப்படுத்த முடியாமலிருந்தால் அதற்காகத் தண்ணீர்த் தீர்வை செலுத்தவேண்டியதில்லை.

**Experiments in Sugarcane.**

கரும்புப்பரீட்சை.—கவர்ன்மெண்டார் கோயம்புத்தூர் விவஸாயப்பண்ணையைச் சேர்ந்த நன்செய் நிலத்தைச் சேர்ந்தாற்போல 10 முதல் 50 ஏக்ரா பரியந்தம் நிலங்களை வாங்கி, அவற்றில் உலகத்திலுள்ள கரும்பு வகைகளையெல்லாம் பயிரிட்டுப்பார்க்க யோசித்திருக்கிறார்கள்.

**Rinderpest.**

கால்நடை நோய்.—கால் நடைகளுக்கு ரிண்டர் பெஸ்ட் அதாவது ரத்தக்கழிச்சல் என்ற நோய் வருவது வெகு ஸாதாரணமா யிருப்பதால் கவர்ன்மெண்டார் அந்நோய் கால் நடைகளுக்குக் கண்டிருக்கும் ஊர்களுக்குச்சென்று அந்நோய்க்குச் சிகிச்சை செய்வதற்கென்றே 6 வெடிரினரி அஸிஸ்டண்ட்களை நியமித்து அவர்களை ஒரு இன்ஸ்பெக்டர் அல்லது டிப்படி ஸூபரின்டெண்டின் கீழ்வைக்க உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அச்சிப்பந்திகள் அடுத்த ஜூலை மாதம் முதல் வேலைசெய்ய ஆரம்பிப்பார்கள். அவர்களுக்கு சென்னை ஹெட்குவாட்டர் ஸ்தானமாகும்.

**Weevil.**

அந்து.—நெல், பயறு, உளுந்து, துவரை முதலான பலவித தானியங்களை அந்துப்பூச்சி அரித்துப் பழுதுபடுத்துவது ஸாதாரண ஸம்பவமேயாம். வேப்பிலை, கடலையிலை, மரச்சாம்பல், எலுமிச்சையிலை, காய்ந்தமிளகாய், ஆகியவைகளிலொன்றை விதை தானியத்தோடு கலந்துவைப்பதினால் அந்துப்பூச்சியினாற்பழுதடையாமல் காத்துக்கொள்ளலாமெனச் சில விவஸாயிகள் சொல்லுகிறார்கள். இன்னுஞ் சிலர் ஒரு நண்டைக்கொன்று விதைத்தானியக் குவியலின் மேல்தொங்கவிடுவதினால் அப்பூச்சி விதைத்தானியத்தில் விழமாட்டாதெனவுஞ் சொல்லுகிறார்கள். ஆனால் "நப்தலீன்" என்னும் பூச்சிமருந்து மலிவாய்ச் சேகரித்துக் கொள்ளக்கூடியதும் தானியத்திலே பூச்சிகள் அணுகாதவாறு காத்துக்கொள்ளத் தக்கதுமென்பது நமது அனுபவமேயாம். க-வி-ம்.

**English Ploughs.**

இங்கிலீஷ்க்கலப்பைகள்.— இங்கிலாந்திலுள்ள ரான்ஸம்ஸ் ஸிம்ஸ்அண்ட் ஜெப்ரிஸ் என்று சொல்லப்படும் பேர்போன விவஸாயக் கருவி செய்யும் இஞ்சினீர்களின் ஏஜெண்டு ஒருவர் ஸமீபத்தில் கோயம்புத்தூர் ஸர்க்கார்ப் பண்ணையிலுள்ள வெவ்வேறு மண் தினுசுகளிலும் தாம் சீமையிலிருந்து கொண்டுவந்திருந்த கலப்பைகளை வேலை செய்து காண்பித்தாராம். 4 வித கலப்பைகள் கொண்டுவந்திருந்தார். எல்லாம் பலமான மாடுகள் கொண்டு வேலை செய்ய வேண்டிய கலப்பைகள். அவைகளின் விலை ரூ. 7, 28, 45, என்று சொன்னார். கலப்பைகளை இந்தியாவின் வெவ்வேறு பண்ணைகளிலும் பரீட்சை செய்துவிட்டு இங்கு கடைசியாய் வந்தார். இவர் இந்தக் கலப்பைகளில் தற்காலம் இருக்கும் கொஞ்சம் குற்றம் குறைகளை சீமைக்குத் திரும்பிப்போனபின் சீர்திருத்தி அப்பால்தான் அவைகளை வெளியில் விற்பனைக்கு அனுப்பப்போவதாய்ச் சொன்னார். சீமையிலிருக்கும் கலப்பை செய்யும் இன்ஜினீர்கள் வெகு தூரத்திலிருக்கும் இந்தியா முழுமையும்போய் சுற்றிப்பார்த்து அந்தந்த மண் நேர்த்திக்குத் தகுந்த கலப்பைகளை அமைக்கும் பொருட்டு பணச் செலவு செய்து அவரவர்கள் ஏஜெண்டை அனுப்பிக் கொண்டிருக்க நமது நாட்டிலிருக்கும் இன்ஜினீர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் போலும். எப்போது நம்மவர்களுக்கு ஊக்கம் வருமோ தெரியவில்லை என்று கிருஷிகன் பத்திரிகை பரிதாபப்பட்டு எழுதுகிறது.

**Orange Cultivation.**

கிச்சிலிப்பயிர்.—புதிதாக உண்டாக்கப்படுந் தென்னந்தோட்டங்களிலே தென்னம்பிள்ளைகளை 28 அடி தூரத்துக்கொவ்வொன்றாக நாட்டி, அவை நாட்டப்பட்ட அக்காலத்திலேயே நன்றாய் தென்னம்பிள்ளைகளுக்குச் சரி மத்தியிலே கிச்சிலிக்கன்று அல்லது எலுமிச்சங்கன்று ஒவ்வொன்று நாட்டப்படலாமென்றும், தென்னம்பிள்ளைகள் பருத்து வேர் பரவி காய்க்கத்தொடங்குங் காலம்மட்டும் கிச்சிலியும் எலுமிச்சை

யும் நல்லாய் வளர்ந்து காய்க்குமென்றும் அனுபவத் திற்சிறந்த தென்னந்தோட்டக்காரர் சொல்ல அறிகிறோம். பழவர்க்கங்கள் அதிகமாகி அவை விலையில் மெத்தக் குறைவாய்ப்போனகாலமில்லை. ஆகையால், புதிதுபுதிதாக நிலம்வாங்கித் தென்னந்தோட்டமாக்கு பவர்கள் தென்னம்பிள்ளைகள் காய்க்கத்தொடங்கு மட்டும் அவைகளுக்கிடையேயுள்ள நிலம் பிரயோஜனமற்றுக்கிடக்கவிடாது கிச்சிலியோ எலுமிச்சையோ நிலக்கடலையோ அவரவர்களுடைய நிலத்துக்கேற்ற பயிரையுண்டாக்கி லாபம் அடையலாம். தனிமையாகக் கிச்சிலியை மாத்திரம் உண்டாக்குகிறதானால் 15 அடிதூரத்துக் கொவ்வொன்றாய் ஏக்கரொன்றுக்கு 193 கன்றுகள் வைக்சலாமென்று ஒரு விவஸாயி புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

**Sowing Pure Combodia Cotton Seed.**

கலப்பில்லாத கம்போடியாப்பருத்தி விதை விதைத்தல்.—இந்த விஷயமாக திருச்சினுப்பள்ளி விவஸாய டிப்டி டைரெக்டர் எச். ஸதரென் எழுது கிறதாவது:—சில வருஷங்களாக திருநெல்வேலி ஜில்லாவிலும் தற்காலம் தென்னிந்தியா முழுவதிலும் தோட்டப்பயிராக ஒழுங்காய்ப் பயிரிடப்பட்டு வருகிற கம்போடியாப் பருத்தியானது இப்படி விசேஷமாய் பயிரிடப்பட்டு வருவற்கு அதில் அடங்கிய அதிக அளவான பஞ்சே முக்கிய காரணமாம். ஆகையினால் தான் வியாபாரிகள் நாட்டுப் பருத்தியைவிட கம்போடியாப் பருத்திக்கு 250 பவுன்கொண்டதான ஒரு பொதிக்கு ரூ. 5 ஜாஸ்த்திகொடுத்து வாங்குகிறார்கள். என்றாலும், வியாபாரிகள் இந்த மாதிரிஜாஸ்தி விலை கொடுத்து எப்போதும் வாங்குவார்களோ என்ற பயம் இப்போது உண்டாயிருக்கிறது.

கம்போடியாப்பருத்தி என்று வாங்கப்பட்ட பஞ்சுப் பொதிகளில் நாட்டுப் பருத்திப்பஞ்சும் கலந்திருப்பதாக வியாபாரிகள் கண்டு பிடித்து, கம்போடியாப் பருத்தி பொதி ஒன்றுக்கு ரூ 37க்குப் பதிலாக நாட்டுப் பருத்தி பொதிவிலைக்கு சற்றுமேலாக ரூ. 32 கொடுத்து வருகிறார்கள். தற்சாலத்தில் இப்படிச் செய்வதால் சமுசாரிகள் சம்போடியாப் பருத்திப்பயிர் செய்யும் ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூ. 25 வீதம் நஷ்டம் அடைகிறார்கள் ; இப்படிக்கொத்த நஷ்ட மடையாதபடிக்கும் கலப்பில்லாத சம்போடியாப் பருத்திப் பஞ்சு வியாபாரிகளுக்கு விற்கும்படிக்கும் கலப்பில்லாத கம்போடியாப் பருத்தி விதைகளைத் தோட்டங்களில் விதைக்கவேண்டும்.

கம்போடியாப் பருத்தி விதைகள் நாட்டுப்பருத்தி விதைகளைவிட இரண்டுமடங்கு பருமனுள்ளவைகளாகையால், பார்த்தவுடனே அவைகள் அசல் விதையா, கலப்பு விதையா என்று கண்டுகொள்ளலாம். கலப்பாயின் அவைகளைப் பிரித்தெடுக்க பின்வரும் முறையைக் கையாடலாம்.

கொஞ்சம் பருத்திவிதையை எடுத்து ஒரு சல்லடைக் கட்டிவின்மேல் போட்டு, (இம்மாதிரி சல்லடைக்கட்டில் திருநெல்வேலி நாடெங்கும் பருத்தி விதைகளைச் சுத்தப்படுத்துவதற்காக உபயோகிக்கப்படுகிறது.) கையினால் முன்னும் பின்னுமாக கட்டிவின்மேல் தேய்க்க நாட்டுப்பருத்தி விதையிலுள்ள அழுக்கு, தூசி, முதலியவை சல்லடைத்துவாரத்தின் வழியாய் கீழே விழுந்துவிட, கம்போடியாப் பருத்தி விதைகள் மட்டும் மேலே தங்கிவிடும். அதறகப்பாலும்கலந்திருந்தால், அவைகளை இலேசாய்ப் பொறுக்கி எடுத்துவிடலாம். இந்த சுலபமான முறையைக் கையாடுவதனல், குடியானவன் அசல் விதை சம்பாதித்துக்கொள்வதோடு பருத்தியையும் உயர்ந்த விலைக்கு விற்சக்கூடும்.

இம்மாதிரி சல்லடைக்கட்டில் மரச்சட்டங்களினால் இணைக்கப்பட்டு, பனை மரத்து மட்டைகளின் பின்புறத்து பனை நார்களால் பின்னப்பட்டிருக்கிறது; இம்மாதிரிக்சட்டில் ரூ. 6 அல்லது 7 க்கு எளிதாகச் செய்துகொள்ளலாம். இந்தக் கட்டிவிலுள்ள சல்லடைத் துவாரங்கள் சாதாரண பிரம்பு நாற்காலியிலுள்ள துவாரங்களுக்கு ஒத்திருக்கின்றன. ஒரு மனிதன் தினம் ஒன்றுக்கு 500 பவுன் அதாவது இரண்டு பொதி கொட்டைகளை அரித்து எடுக்கலாம்.

குடியானவன் இன்னும் ஜாக்கிரதையாயிருந்து, பயிர் முளைத்த பிறகு நாட்டுப் பருத்திச் செடிகளை அவற்றின் சிறு இலைகளால் இலேசாய் கண்டுபிடித்துப் பிடுங்கி எறிந்துவிடலாம்.

இம்மாதிரியாக நாட்டுப்பருத்தி கலக்காதபடி கம்போடியாப்பருத்தியைப் பிரித்தெடுக்கத் தகுந்த முயற்சிகள் செய்யாவிட்டால், காரியம் வரவரக்கெட்டு, வியாபாரிகள் இரண்டு பருத்திப்பஞ்சுக்கும் யாதொரு வித்தியாசம் இல்லாதபடி விலையைக் குறைத்து, கம்போடியாப்பஞ்சு விலையை நாட்டுப் பஞ்சு விலைக்குச் சரியாகக் கொண்டுவந்து விடுவார்கள்,

## COMMERCE.
## வியாபாரம்.

### Business Enterprise in India.

இந்தியாவில் வியாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற பிப்ரவரிமாதத்தில் அடியில்கண்ட விவரப்படி 28 கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. அந்த விவரங்களைக்கொண்டு அந்த மாதத்தில் வியாபாரத்தில் ஊக்கம் எவ்வளவு இருந்த தென்பதை அறிந்துகொள்ளலாம் :—

| | | முதல் ரூ. |
|---|---|---|
| 2 | பாங்கிகளும் லேவாதேவி கம்பெனிகளும் | 214,000 |
| 11 | இன்ஷூரென்ஸ் கம்பெனிகள் | 475,000 |
| 1 | நாவிகேஷன் (கப்பல்) கம்பெனி | 50,000 |
| 2 | ரெயில்வே ட்ராம்வே கம்பெனிகள் | 19,56,500 |
| 2 | கோவாப்பரேட்டீவ் சங்கங்கள் | 40,000 |
| 1 | ஏற்றுமதி இறக்குமதி, ஸாமான்களை கிடங்குகளில் போடுதற்கான கம்பெனி | 5,00,000 |
| 4 | வியாபாரக் கம்பெனிகள் (மேற்சொன்னவைகளைத்தவிர) | 5,25,000 |
| 1 | எலும்பு மில் கம்பெனி | 5,00,000 |
| 1 | தேயிலை கம்பெனி | 2,40,000 |
| 2 | விலைக்கரி கம்பெனிகள் | 550,000 |
| 1 | சுரங்கம்வெட்டும் கம்பெனி மேலே சொன்னதை தவிர | 100,000 |
| 28 | ஆக மொத்தம் ரூ. | 51,50,500 |

### Molasses from Java.

ஜாவாவிலிருந்து தேன்பாகு.—கராச்சி துறைமுகத்தில் ஜாவாத் தேன்பாகு கணக்கு வழக்கில்லாமல் இறக்குமதியாய்க் கொண்டிருப்பதாய்த் தெரிகிறது. மிஸ்டர் என். பி. மேடா வென்ற வியாபாரிதான் ஜாவாவிலிருந்து தேன்பாகு தருவிக்க முதல் முதல் ஆரம்பித்தாராம். அவர் இந்நாட்டிலே தேன்பாகின் விலை வெகு கிராக்கியாய்ப் போய்விட்டதைக் கருதி, தாம் கவர்ன்மெண்டுக்கு ஸப்ளை செய்யவேண்டியிருந்த தேன் பாகை ஜாவா நாட்டிலிருந்து ஸகாய விலைக்குத் தருவிக்க ஆரம்பித்தாராம். அவரைப் பார்த்து இப்போது வேறு வியாபாரிகளும் ஜாவாவிலிருந்து தேன்பாகு தருவிக்கிறார்களாம்.

### The Sea-borne Trade of India.

கப்பல்மூலமாய் நடந்த இந்தியாவின் வியாபாரம்.—இந்தியாவின் கப்பல் வியாபாரத்தைப் பற்றிய விவரங்கள் 1911-1912-ம் வருஷத்துக்கு வெளியாயிருக்கின்றன. இந்தியாவில் இறக்குமதியான பொருள்களின் மொத்த விலை மதிப்பு 197-கோடி ரூபாய், 1910-1911-ம் வருஷத்தில் இறக்குமதியின் விலை மதிப்பு 173-கோடி. அதற்கு முந்திய வருஷத்தில் 160-கோடி. 1911-1912-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் விலை மதிப்பு 237-கோடி ரூபாய். 1910-1911-ல் 217-கோடி ரூபாய், அதற்கு முந்திய வருஷத்தில் 194-கோடி ரூபாய். இந்த வருஷம் மார்ச்சு மாதத்தில் மட்டும் இறக்குமதிகள் 100-க்கு 14 குறைவென்றும், ஏற்றுமதிகள் 100-க்கு 8 அதிகமென்றும் தெரிகிறது. இறக்குமதிக் குறைவு துணிகள் நூல்கள், இவ்விரண்டினங்களிலும் ஏற்பட்டனவாம். ஏற்றுமதி அரிசி, வேறு தானியங்கள், பஞ்சு, சணல், இந்த இனங்களில் அதிகப்பட்டது. போன மார்ச் மாதத்தில் இறக்குமதியான வெள்ளி 37 லட்சம் ரூபாய் விலை மதிப்புள்ளது, 1911 மார்ச்சில் 9 லட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள வெள்ளியும் 1910-ல் 21 லட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள வெள்ளியும் இறக்குமதியாயிற்றும்.

### Weights and Measures.

படிக்கல்களும் அளவுகளும்.—மணங்குக்கு நாற்பதுசேர் என்றும், ஒரு சேர் ஒன்றுக்கு 24 தோலாக்களென்றும், பக்காச்சேர் என்பது 80 தோலாக்களென்றும் பட்டணம்படி 120 தோலாக்கள் என்றும் ஸர்க்காரால் விதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விதமான நிபந்தனையை பிரபலப்படுத்துவதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் மேல்சொன்ன நிறைகளுக்கும் அளவுகளுக்கும் தகுந்தபடி படிக்கல்களும், மரக்கால்களும் மாத்திரம் முத்திரை போடும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

கடைக்காரர்களும், வியாபாரிகளும் ஸர்க்காரால் முத்திரை போடப்பட்ட ஷை படிக்கல்களையும் அளவுகளையும் வாங்கிக்கொள்ளும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி கவர்ன்மெண்டார் வேறு சட்டம் ஒன்றும் செய்யப்போவதாகத் தெரியவில்லை.

## INDUSTRY.

## கைத்தொழில்.

**Jaggery Making.**

வெல்லம் செய்தல்.—ஸமீபத்தில் கோயமுத்தூர் விவஸாய ஸங்கம், ஸர்க்கார் விவஸாயப்பண்ணை ஸூபரின்டெண்டண்ட், கோயமுத்தூர் கலெக்டர், தாசில்தார், இவர்களின் முயற்சியின்மேல் அவ்வூர் ஸர்க்கார்ப்பண்ணையில் அந்த ஜில்லாவின் நாலாபக்கங்களிலு மிருந்து வந்து கூடிய விவஸாயிகளுக்கு கரும்பிலிருந்து வெல்லம் எடுக்கும் மாதிரி செய்து காட்டப்பட்டது. வந்த விவஸாயிகளுக்கு சாப்பாடு, படுக்கை, இருக்கை, இம்மூன்று வஸதிகளையும் அந்தப் பண்ணை ஸூப்ரின்டெண்டண்ட் யாதொரு குறைச்சலுமின்றி செய்துகொடுத்தார். அவர் செய்து காட்டிய முறைகளில் விவஸாயிகளுக்கு உண்டான சந்தேகங்களை வெகு ஆதரவுகாட்டி நிவர்த்திசெய்தார். இஷ்டப்படுகிறவர்களை அத்தொழிலுக்குப் பழக்குவதாயும் அவர் சொன்னாராம்.

**The Cawnpore Industrial Conference.**

கான்பூரில் ஒரு தொழிலாலோசனை ஸபை.—கான்பூர் பட்டணமானது ஐக்கிய மாகாணங்களிலுள்ள ஒரு பெரிய வர்த்தக ஸ்தலம். பிரயாக் அல்லது அலகாபாத் அந்த மாகாணங்களுக்கு ராஜஸ்தலமா யிருந்தபோதிலும், கான்பூரே தொழிலிலும் வர்த்தகத்திலும் முக்கியமானது. அங்கே ஆட்டுமயிரால் துணிகள் செய்யும் தொழிற்சாலைகளும், காலுக்கு சப்பாத்துகள் செய்யும் கவர்ன்மெண்ட் தொழிற்சாலையும், வேறு தொழிற்சாலைகளும் இருக்கின்றன. அங்கேயே அலகாபாத் கவர்ன்மெண்ட் ஒரு பெரிய தொழிற் கல்விச்சாலை ஸ்தாபிக்கப் போகிறார்கள். அந்தப் பட்டணத்துத் தொழிலாளிகள் சிலர் சேர்ந்து இந்த மாஸம் ஒரு தொழிலாலோசனைச் சங்கம் நடத்தினார்கள். அந்த ஸபையில் ஆங்கிலேயரே விசேஷமாய் வந்திருந்ததாகத் தெரிகிறது. கான்பூர் உல்லன் மில்லுகளைச் சேர்ந்த மிஸ்டர் ஏ. எச். ஸில்வர் என்பவர் ப்ரஸிடெண்டாயிருந்தார். தீர்மானங்களை ப்ரேரித்தவர்களும் ஆமோதித்தவர்களும் அநேகமாய் ஆங்கிலேயராயிருந்தார்கள். ஆயினும், அவர்களுடைய ஆலோசனையில் வந்த விஷயங்களெல்லாம் இந்தியர் அக்கரைப்படும் விஷயங்களாகவே இருந்தன.

ப்ரஸிடெண்ட் பேசினதில், இந்தியாவிற் செய்யப்படும் துணிகளுக்காகப் போடப்படும் எக்ஸைஸ்வரியை எடுத்துவிடவேண்டு மென்றார். அவர் ஜெயில்களிற் செய்யப்படும் தொழில்களைப் பற்றியும், ரயில் வேக்களின் கூலிவிகிதங்களைப் பற்றியும் பேசினார். கவர்ன்மெண்டுக்கு வேண்டிய ஸாமான்கள் வாங்குவதில், அவைகளை இந்தியாவிலேயே வாங்கித் தொழில்களை முற்படுத்த வேண்டுமென்றும், தொழில்களில் உயர்ந்த படிப்பு கற்பிக்கப் வேண்டுமென்றும், ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், பேசினார். ஆயினும், தொழில்களின் அபிவிர்த்தியைப் பற்றிய முக்கிய பிரச்னையானது ஜனங்கள் எப்படி தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ளலா மென்பது. தொழில் செய்வோர் உண்மையுள்ளவர்களாயிருப்பது அவசியம். அன்னிய தேசங்களுக்கு இந்தியச் சிறுவர்கள் கவர்ன்மெண்டிடத்தில் ஸ்காலர்ஷிப் பெற்றுத் தொழில்கள் கற்றுக்கொள்ளப் போவது இதுவரையில் நிறைவேறவில்லையாகையால், அப்படி அவர்களை யனுப்புதல் அநாவசியம். பிறகு கான்பரென்ஸில் தீர்மானங்கள் செய்யப்பட்டதில், சர்க்கரைத் தொழிலைப்பற்றிக் கவர்ன்மெண்ட் அவசியமானபடி சிப்பந்திகளையும் பணத்தையும் செலவு செய்து அன்னியருடைய போட்டியை எதிர்க்கக்கூடியதாகச் செய்வதில் பின்வாங்கக் கூடாதென்று தீர்மானம் செய்யப்பட்டது. இன்னொரு தீர்மானம் இந்தியாவிலுள்ள தொழிற்சாலைகளில் செய்யப்படும் துணிகளுக்கு வஸூல் செய்யப்படும் வரியை எடுத்துவிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பாங்க் ஸ்தாபிப்பதைப் பற்றியும் தோல் வியாபாரத்தைப் பற்றியும் பேப்பர்கள் எழுதிப் படிக்கப்பட்டன.

**Hat Making.**

தொப்பி செய்தல்.—பிலிப்பைன்ஸ் என்பதாக அமெரிக்காவைச் சேர்ந்த சில தீவுகளிருக்கின்றன. அங்கே யுள்ளவர்களுக்கு தொப்பிகள் ஏராளமாக வேண்டியிருக்கின்றனவாம். இந்தியாவிலுள்ள மூங்கில், இன்னும் இதர புல்லுகள், இவைகளினால் தொப்பிகள் செய்து அங்கே அனுப்பினால் நல்ல வியாபாரமாகுமாம். இப்படிக்கு தொப்பி செய்யக்கூடியவர்கள் யாராவது இருக்கும் பக்ஷத்தில் அவர்கள் கவனிப்பார்களாக.

# ECONOMICS.

## பொருளாதாரம்.

**The Madras Government's Budget.**

மதராஸ் கவர்ன்மெண்டின் வரவு செலவு திட்டம்.—மதராஸ் கவர்ன்மெண்டின் வரவு செலவு திட்டங்கள் பின் வருமாறு:—

1910—1911.

| | |
|---|---|
| அயன் வரவு | ... ரூ. 643,28,000 |
| செலவு | ... „ 620,12,000 |
| மீதி | ... „ 23,16,000 |

1911—1912.

மறு திட்டம்.

| | |
|---|---|
| வரவு | ... ரூ. 704,00,000 |
| செலவு | ... „ 672,48,000 |
| மீதி | ... „ 31,52,000 |

1912—1913.

மதிப்பு திட்டம்.

| | |
|---|---|
| வரவு | ... ரூ. 692,51,000 |
| செலவு | ... „ 757,52,000 |
| குறைவு. | ... „ 65,01,000 |

1912-13-ம் வருஷத்தில் முன் வருஷங்களைப் போல் மிச்சம் ஏற்படாமல் செலவு அதிகமாகத் தோன்றுவதற்குக் காரணம் என்னவென்றால் சென்னை கவர்ன்மெண்டார் வித்யா விஷயத்திற்கும், ஸுகாதாரத்தை விருத்திசெய்வதற்கும், அடிஷனல் ஜில்லா கோர்ட்டு கட்டிடங்களைக் கட்டுவதற்கும் செலவு கொஞ்சம் அதிகமாகச்செய்யவேண்டுமென்ற நோக்க மிருப்பதால் தான்.

ஆனால் அதிகச் செலவை யுத்தேசித்து புதிதான வரிகள் போடமாட்டார்கள். முன் வருஷங்களில் மிகுக்கப்பட்டிருந்த பணத்தைக்கொண்டும் இம்பீரியல் கவர்ன்மெண்டார் அரச விஜயத்திற்காக நன்கொடையாகக் கொடுத்திருக்கும் பணத்தைக் கொண்டும், பொதுஜன நன்மைக்காக அதிகமாய்ச் செலவு செய்யப் போகிறார்கள்.

**Indian Coolies.**

இந்திய கூலிகள்.—டாமார் லாண்டு கவர்ன்மெண்டார் சுரங்கவேலைக்கு இந்தியக் கூலிகளை இறக்குமதி செய்துக்கொள்ளலாமென சுரங்கச் சொந்தக்காரர்களுக்கு உத்தரவு கொடுத்துவிட்டார்கள். இனி இந்தியா முழுவதும் கொடும்பாவிகளான கங்காணியர்கள் இந்தியக் கூலிகளைப் பிடித்தனுப்புவதற்கு வலை வீசித்திரிய ஆரம்பித்துவிடுவார்களென்பது திண்ணம். படிப்பு வாஸனையற்று அந்நியதேசத்திற்குச் சென்றிருக்கும் இந்தியர்களின் அவஸ்தையைச் சற்றுமறியாத இந்தியர்கள் கங்காணிகளின் வலையிற் சிக்கி விடக்கூடும். ஒப்பந்தச் சீட்டின் பேரில் இது வரையில் அனுப்பப்பட்டிருக்கும் இந்தியர்களின் "கதி" என்னவாயிற் றென்பதைப்பற்றி ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும். ஆயிரக்கணக்கான இந்தியர்கள் தென்னாப்பிரிக்கா கவர்ன்மெண்டின் கொடுமையால் ஜெயில் வாஸஞ்செய்தும் இரவும் பகலும் உழைத்துங்கூட வயிற்றுக்குச் சோறு கொடுப்பாரில்லாமல் மாண்டுபோனார்கள். அந்நிய தேசங்களுக்கு கூலி வேலை செய்யச் செல்லும் இந்தியர்கள் திரும்பி வந்து சுயதேசஞ் சேர்வது புனர்ஜன்மம் எடுத்தது போலாகும். பணம் ஸம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அந்நிய தேசங்களுக்கு இந்தியர்கள் போவது அளவற்ற கஷ்டங்களைத் தரும். அந்நிய தேசத்தவர்கள் தெய்வத்திற்குப் பயந்து இந்தியர்களைக்கொடுமை செய்யாதிருந்தாலொழிய நியாயவாதம் செய்து இந்தியர்களின் கஷ்டத்தை நீக்குகிறவர்கள் அங்கு ஒருவரும் கிடையாது. தெய்வத்திற்கும் மனச்சாக்ஷிக்கும் பயந்து நடப்பவர்கள் இருக்கிறார்களென்று நிச்சயித்துக் கூறமுடியவில்லை. இந்திய தேசமானது செல்வத்தில் குறைவுபட்ட தேசமாக இருந்து வரவில்லை. தங்கம் முதலான பஞ்சலோகங்களும் அளவற்றுக்கிடைக்கின்றன. நவதானியங்களும் விளைகின்றன. ஸகல தொழிலும் செய்ய வல்லமையுள்ள 33 கோடி இந்திய சகோதரர்களு மிருக்கிறார்கள். கோடிக்கணக்கான அந்நியர்கள் நம் இந்திய தேசத்தில் கவலையற்றுப் பிழைத்துவருகிறார்கள். அவ்வாறிருக்க இந்தியர்கள் அந்நிய நாடுகளுக்குக் கூலிவேலை செய்து ஸம்பாதிக்கச் செல்லவேண்டுவதில்லை. ஆகையால் இவ்விஷயத்தை கல்வியறிவற்ற ஏழை இந்தியர்களுக் கெடுத்துரைப்பது நம்மவர்களின் கடமையாகும் என்று 'சுதேச பரிபாலினி'ப் பத்திரிகை எழுதுகிறது.

## CO-OPERATION.
## கோவாபரேஷன்.

**Report on Co-operation.**

கோவாபரேஷனைப்பற்றி ரிபோர்ட்டு.—திவான் பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளை போன வருஷம் ஐக்கியநாணயச் சங்கங்களைப்பற்றி கவர்ன் மெண்ட்டுக்கு செய்த ரிட்போர்ட்டின் முக்கிய அம் சங்கள் சுதேசமித்திரனில் எழுதப்பட்டிருக்கின்றன. அதன் ஸாராம்சத்தை இங்கே தருகிறோம். இந்த ராஜதானியில் அர்பன் பாங்கிகளும், ரூரல் பாங்கிக ளும் சேர்ந்து 30 லட்சம் ரூபாய் மூலதனம் பெற் றிருக்கின்றன. இந்தத்தொகை 23,000 பேருக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இந் தக் கடனுக்குக் கொடுத்த வட்டி விகிதம் நூற்றுக்கு $9\frac{1}{2}$ யோ அல்லது அதற்குக் குறைந்தோ இருக்க, மற்ற இடங்களில் கடன் வாங்கி யிருப்பார்களேயா னல் நூற்றுக்குப் பதினைந்து வீதம் வட்டி கொடுத் திருப்பார்கள். இப்படி 30 லட்சம் ரூபாய் கடன் வாங்கினதில் நூற்றுக்கு ஐந்து வட்டி மிகுந்தபடி யால், இந்த மிகுந்த தொகையாகிய $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய், இந்த ஐக்கிய நாணயச்சங்க ஆக்டினல் அதன் 7-வது வருஷத்தில் ஜனங்களுக்குக் கொடுத்த வெகுமதியாகும் இப்படியானல் ஜனங்களுக்கு இவ் வளவு லாபம் தரும்படியான இந்தச் சங்கங்கள் ஏன் இன்னும் அதிகமாக ஸ்தாபிக்கப்படவில்லை யென்று கேட்கக்கூடும்? இதற்கு மிஸ்டர் ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளை கூறும் பதில்,—முதலாவது, எங்கு ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டால் நிறை வேறுமோ அங்கு அவைகள் ஸ்தாபிக்கப்பட்டு வரு கின்றன. இரண்டாவது அநேக கிராமங்களில் வஸி க்கும் விவஸாயிகள் ஸாவ்கார் முதலானவர்களிட மிருந்து அதிக வட்டிக்குக் கடன்வாங்கி முழுகிப் போயிருக்கிறபடியால், அதனின்றும் மீண்டு ஐக்கிய நாணயச் சங்கங்களில் சொற்ப வட்டிக்குக் கடன் வாங்கச் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகை யால் இப்படிப்பட்ட இடங்களில் இச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவில்லை. மேலும் தஞ்சாவூர் போன்ற சில ஜில்லாக்களில் விவஸாயிகள் தங்கள் பூமியின் விளைச்சலால் ஸர்க்கார் கிஸ்தி கொடுக்கவும், தாங் கள் வாங்கியிருக்கும் கடனுக்கு வட்டி கொடுக்கவும் சக்தியுள்ளவர்களாக இருக்கிறபடியால், ஐக்கிய நா ணயச் சங்கங்களை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டு மென்கிற விருப்பம் உண்டாகிறதில்லை. இப்படி அதிக தரித்திரத்தால் வருந்துவோரையும் வளப்பத் தால் சுகப்படுவோரையும் நீக்கிவிட்டு மற்ற இடங் களிலேயே இவ்விதச் சங்கங்கள் ஸ்தாபிப்பது ஸாத் தியமாகிறது.

ஐக்கிய நாணயச் சங்கங்களில் கடன் வாங்குகிற வர்கள், இரண்டு நோக்கங்களுடன் கடன் வாங்கு கிறார்கள். முதலாவது, விவஸாயம் முதலிய பிரதி பலன் கொடுக்கத்தக்க முயற்சிகளுக்காக வாங்குகி றார்கள். இரண்டாவது, விவாகம் முதலிய சடங்கு களின் செலவுகளுக்காக வாங்குகிறார்கள். பின் சொன்ன விஷயங்களுக்காக கடன் வாங்குவது அவ் வளவு உசிதமல்ல. ஆனாலும், அவைகளுக்காகக் கடன் கிடைக்காவிட்டால் ஸாவ்கார் முதலியவர்க ளிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன் வாங்கியே தீருவார்கள். ஆகையால், இப்படிப்பட்ட விஷயங்க ளுக்கு ஐக்கிய நாணயச சங்கங்கள் கடன் கொடுக் காமல் இருத்தல் உசிதமல்ல. மேலும் பிரதிபலன் கொடுக்காத விஷயங்களுக்குக் கடன் கொடுப்பதால் இந்த விஷயங்களை விவஸாயிகள் நிர்வகிப்பதில் இந் தச் சங்கங்கள் செல்வாக்கு உள்ளவைகளாக ஆகின் றன. ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஒரு வரையறைக் குட்பட்டு சொற்பத் தொகைகள் தான் கொடுக்க முடியும். ஆகையால் விவஸாயிகள் கல்யாணச் செ லவு முதலியவைகளிலுங்கூட இச்சங்கங்களின் நிர்ப் பந்தங்களுக்கு உட்படுகிறார்கள். மொத்தத்தில் கிரா மாந்தரங்களில் பலன் கொடுக்கும் விஷயங்களுக்கும் பலன அற்ற வீண் விஷயங்களுக்கும் வித்யாசம் இல் லாமல் கடன் கொடுப்பது அவசியமாகிறது.

மிஸ்டர் ஸ்வாமிக் கண்ணுப்பிள்ளையின் முயற்சி இன் னொருவழியில் பலன்படக்கூடும். நீலகிரியில் படுகர் கள் என்ற அநாகரிகமான ஜாதியாருக்குள்ளும், அவ ர்களைப்போல் மற்ற இடங்களிலுள்ள ஜாதியாருக் குள்ளும், ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபிக்க படாமல் இருக்கின்றன. இந்த ஜாதிகள் கபடமில் லாமல் லகுவாய் ஜீவனம் செய்கிறவர்களாயிருக்க, அவர்களுக்கு லப்பைத் துருக்கர்கள் மோசடியாய்க் கடன் கொடுத்துக் கடனைப் பெருக்கிவிடுகிறார்கள். உதாரணமாக ஒரு படுகன், இந்த லப்பைகளிடத் தில் ஒரு முறை கடன்வாங்க, அது முன்னூறு ரூபாயாகப் பெருகிவிட்டது. இம்மாதிரி பலபடுகர் களும் கோயமுத்தூர் ஜில்லா கிராமங்களில் வஸிப் பவர்களும் மோசம்போகிறார்கள். இவர்களைமீட் பதற்காக இரண்டொரு ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபித்து அவர்களுக்குச் சுலபமாய் கடன் கிடைக் கும்படிசெய்ய ரிஜிஸ்திரார் உத்தேசித்திருக்கிறார்.

## BANKING.

### பாங்கி வியாபாரம்.

**Central Banks.**

**ஸென்ட்ரல் பாங்கிகள்.**—சில வருஷங்களாக சென்னப்பட்டணத்தில் நடந்துவரும் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியை பேருக்குமாத்திரம் கோவாபரேட்டிவ் பாங்கி என்று சொல்லவேண்டும். இப்பொழுது இருக்கிற ஏற்பாட்டின்படி வெளியூர்களிலுள்ள ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியில் கடன் வாங்கி அதற்கு வட்டி கொடுக்கின்றன. ஆனல் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியின் நிர்வாஹத்தில் ஐக்கிய நாணயச் சங்கங்களின் பிரதிநிதிகளில்லை. ஸென்ட்ரல் பாங்கிக்குக் கிடைக்கும் லாபத்தில் ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு பங்கு கிடைப்பதுமில்லை. ஆகையால் ஸென்ட்ரல் பாங்கிகளுக்கும், ஸாதாரணமாய் கடன் கொடுக்கும் ஸாவ்க்கார்களுக்கும் வித்தியாஸத்தைக் காணோம். ஐக்கிய நாணயச் சங்கங்கள் மேற்சொன்ன ஸென்ட்ரல் பாங்கிகளின் கைக்குள் அகப்படாமல் பெடரல் அதாவது ஐக்கியமுள்ள பாங்கிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த பாங்கிகளை நிர்வஹிப்பவர்களில் அவைகளோடு லேவாதேவி செய்யும் ஐக்கிய நாணயச் சங்கங்களின் பிரதிநிதிகளுமிருந்து ஒற்றுழைக்க வேண்டும். பெடரல் பாங்கிகளில் ஷேர்கள் போட்டிருக்கும் ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு அவைகள் போட்டிருக்கும் ஷேர் வீதப்படியோ அல்லது கடன் வாங்கின தொகை வீதப்படியோ பெடரல் பாங்கியின் லாபத்தை பிரித்துக் கொடுக்கவேண்டும். பெடரல் பாங்கியின் மூலமாய்த்தான் கோவாபரேஷன் முறையின் நோக்கங்களும் அனுபோகங்களும் ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு தெரியவரும்.

**The Strength of a Bank.**

**ஒரு பாங்கியின் பலம்.**—முன் காலத்தில் ஒரு பாங்கி பலமான பாங்கிதான், அது கேட்டபொழுது பணத்தைத் திருப்பிக்கொடுக்கும், அது முறியாது, என்பதற்கு அந்த பாங்கி, "உடையவர் வேண்டும் போது கொடுக்கவேண்டும்" என்று கொடுத்திருக்கும் கடன் தொகையை ரொக்கக் கையிருப்பாக எண்ணுவது வழக்கமாயிருந்தது. ஆனல் அனுபோகத்தில் இந்த எண்ணம் மாறிவிட்டது. உடையவர் வேண்டும்போது கொடுக்கவேண்டுமென்று தஸ்தவேஜு ஏற்பட்டிருந்தாலும் அப்படிக் கேட்டவுடனே பணம் வருவதில்லையென்று அனுபோக வித்தமாய் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆகையால் பாங்கியில் பணம் போட்டிருக்கும் டிபாஸிட்டர்கள் திடீரென்று எல்லாரும் பயந்து பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்கும் பக்ஷத்தில் அப்பொழுது பாங்கியின் கையில் உடையவர் வேண்டும் போது பணம் கொடுப்பதாக 50 கோடி ரூபாய்க்கு தஸ்தவேஜுகள் இருந்தபோதிலும் அவைகளெல்லாம் சேர்ந்து 5 கோடி ரூபாய் ரொக்கத்துக்கு ஈடாகாது.

**Banking in Bombay.**

**பம்பாயில் பாங்கி வியாபாரம்.**—பம்பாய் ராஜதானியில் பல இடங்களில் பாங்கி என்று பெயர் வைத்துக்கொண்டு பாங்கி வியாபாரம் மட்டும் பண்ணமல் இதர வியாபாரங்களையும் செய்யும் அநேக பாங்கிகளிருக்கின்றனவாம். சில பஞ்சாலைகளும் இன்னும் சில ஜாயிண்டு ஸ்டாக்கு கம்பெனிகளும் ஜனங்களிடத்திலிருந்து டிபாஸிட்டுகள் வாங்கி அவைகளைக்கொண்டு வியாபாரம் செய்கின்றன. இதனல் பல மோசங்களுக்கு இடமுண்டாகிறது. இந்த விஷயமாக பம்பாய் கவர்ன்மெண்டார் பம்பாய் சேம்பர் ஆப் காமர்ஸை என்ன செய்யலாமென்று அபிப்பிராயம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் சொன்னதாவது, பொது ஜனங்கள் ஏமாருமல் காப்பாற்றுவதற்கு பாங்கிகளினுடையவும் இன்னும் இதர ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளினுடையவும் கணக்குகளை தக்க நிபுணர்களைக்கொண்டு பரிசோதனை செய்யவேண்டும் என்றார்கள். கணக்குகளை ஸரிவர பரிசோதிப்பதாக இருந்தால் பாங்கிகள் நன்ருகவே நடந்துவரும். பாங்கிகள் நன்ருக இருக்கும் பக்ஷத்தில் ஜனங்களும் பணத்தை பாங்கிகளில் போட பிரியப்படுவார்கள். பாங்கியின் விஷயமாய் பம்பாய் கவர்ன்மெண்டாரும் இதர கவர்ன்மெண்டார்களும் சில புதிய ஏற்பாடுகள் செய்யப்போவதாக தெரியவருகிறது.

## INSURANCE.
## இன்ஷியூரென்ஸ்.

**Insurance and Advertisement.**

இன்ஷியூரென்ஸ் வியாபாரமும் விளம்பரம் செய்வதும்.—இன்ஷியூரென்ஸ்கம்பெனிகளில் பல மானவும் பெரியனவாயும் இருக்கும் கம்பெனிகள் விசேஷமாக அவைகளுடைய வியாபாரத்தைப்பற்றி விளம்பரங்கள் பிரசுரிக்கின்றன. அதனல் இன்ஷியூரென்ஸைப்பற்றி பத்திரிகைகள் போடுவதற்கு அனுகூலமாயிருக்கிறது. அந்தப் பத்திரிகைகளால் கம்பெனிகளுக்குவியாபாரம்அதிகமாவதோடு அவைகளின் மானேஜர்களும் ஏஜண்டுகளும் நன்ருய் வேலைசெய்வதற்கு அனுகூலமான விஷயங்கள் தெரிந்துகொள்ள ஹேதுவாகிறது.

**Accident Insurance.**

இசை கேடான ஸம்பவங்களுக்கு இன்ஷியூரென்ஸ்செய்வது.—தற்காலத்தில் நஷ்டம் வரக்கூடிய விஷயங்களிலெல்லாம் நஷ்டம்நேர்ந்தால் ஈடுபெறும்படிஇன்ஷியூர்செய்யும் அநேக கம்பெனிகளிருக்கின்றன. இப்படி தற்செயலாய் நேறும் அபாயங்களுக்கு ஈடு செய்வதற்காகஇங்கிலாந்தில்ஒருபெரிய கம்பெனி இருக்கிறது. அந்த கம்பெனியின் 1911ஹூத்து கணக்கைப்பார்த்தால் மொத்தத்தில் 98,846 பேர்களுக்கு அதாவது தினம் ஒன்றுக்கு 271 பேர்களுக்கு அபாயம் நேர்ந்ததாக ஏற்படுகிறது. மொத்தத்தில் 966 பேர்கள் இறந்தேபோய் விட்டார்கள். இதனல் உலகத்தில் போக்குவரத்துக்கள் அதிகரிக்க அதிகரிக்க ஜனங்களுக்கு அபாயம் நேரிடும் அவகாசங்களும் அதிகரிக்கின்றன. ரெயில் மார்க்கமாயும் கப்பல் மார்க்கமாயும் அதிகமாக போக்கு வரத்து செய்யும் வியாபாரிகளும் இன்னும் ஆபத்துக்கிடமான தொழில்களைச செய்யும் வேலைக்காரர்களும் ஆபத்து நேர்ந்தால் ஈடு பெறும்படியாக இன்ஷியூர் செய்து கொள்வது நலமாகும்.

**Insurance Literature.**

இன்ஷியூரென்ஸைப் பற்றிய பிரசுரங்கள்.—இந்தியாவில் இன்ஷியூரென்ஸ் வியாபாரம் வர வர பலப்படுவதாலும் அதைப்பற்றி செய்த மசோதா வெகுநாள் விவாதத்திலிருந்து அமுலுக்கு வந்து விட்டதாலும் இன்ஷியூரென்ஸைப்பற்றிய புத்தகங்களை அநேகம் பேர்கள் வாங்கி வருகிருர்களாம். இதேமாதிரியாக இங்கிலாந்திலும் ஜனங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்வது நலமென்றறிந்து அதைப்பற்றி பிரசுரங்களை ஏராளமாகவாங்கி வருகிருர்கள். இன்ஷியூரென்ஸ் விஷயமாக தமிழில் "பிழைக்கும் வழி" யில் வெளியாகும் ஸமாச்சாரங்களைத் தவிர வேறு புஸ்தகங்களிலாவது அல்லது பிரசுரங்களிலாவது விவரங்கள் கிடைக்காதது ரொம்பவும் விசனிக்கத்தக்கது. தற்போது இன்ஷியூர் செய்கிறவர்கள் மொத்தத்தில் அதனல் நன்மையுண்டு என்று செய்கிருர்களே யொழிய அதைப்பற்றிய விவரங்கள் முழுமையையும் அறிந்து இன்ஷியூர் செய்கிறவர்கள் படித்தவர்களில்கூட ஸ்வல்பமே. இன்னும் கிராமந்தரங்களிலுள்ள ஜனங்களுக்கு இன்ஷியூரென்ஸ் என்ருல் என்ன வென்ருவது அதனல் என்ன நன்மையுண்டாவ தென்ருவது கொஞ்சங்கூடத் தெரியாது.

**Cattle Insurance.**

கால் நடைகளை இன்ஷியூர் செய்வது.—பர்மாவில் 129 மெம்பர்களடங்கிய 6 கால்நடை இன்ஷியூரென்ஸ் ஸொஸைட்டிகள் இருக்கின்றனவாம். அவைகள் எல்லாம் கோவாபரேஷன் மூலமாய் உண்டானவைகள். பர்மாவில் வருஷாவருஷம் கால் நடைகள் இறப்பதால் நேரிடும் நஷ்டம் வெகு அதிகம் அதனல் பல குடிகள் மூழ்கிப்போகிருர்கள். மேற்சொன்ன இன்ஷியூரென்ஸ்ஸொஸைட்டிகளால் கால் நடைகள் இறப்பதால் விவஸாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஒருவாறு குறைக்கலாம், ஏனென்ருல் செத்துப்போன மாடுகளுக்கு இன்ஷியூரென்ஸ்ஸொஸைட்டிகள் விவஸாயிகளுக்கு ஈடு செய்யும் இன்ஷியூர் செய்யப்பட்டிருக்கும் கால்நடைகள் இறக்கும் பக்ஷத்தில் அப்படி இன்ஷியூர் செய்த ஸொஸைட்டிகளின் ஒவ்வொரு மெம்பருக்கும் நஷ்டமுண்டாகு மாதலால் ஒவ்வொருவனும் கால் நடைகளுக்கு வியாதியே வராமல் தடுக்க முயலுவான்,

# EDUCATION.

## வித்யா விஷயம்.

**Instruction in Botany.**

தாவரசாஸ்திர போதனை.—கவர்ன்மெண்டார் ப்ரைமரி பாடசாலைகளில் வாசிக்கும் பிள்ளைகளுக்குத் தாவர சாஸ்திரத்தைப் பற்றிப் போதிக்க உபாத்தியாயர்களைப் பழக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்குரிய ஏற்பாடுகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

**The Bombay Victoria Technical Institute.**

பம்பாய் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்.—பம்பாய் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டைப் போன்ற தொழிற் பள்ளிக்கூடங்கள் மற்ற மகாணங்களில் இதுவரை நடந்துவரவில்லை. அது பற்றி அந்தப் பள்ளிக்கூடத்துக்கு மற்ற மகாணங்களிலிருந்து சிறுவர்கள் தொழிற் படிப்புப் படித்து வரப் போய்க்கொண்டிருந்தார்கள். ஆனால் இனிமேல் மற்ற மகாணங்களிலிருந்து பிள்ளைகள் அதிகமாய் அந்தப் பள்ளிக்கூடத்தில் போய்ச் சேரவேண்டிய அவசியமிராது. ஏனெனில் மற்ற மகாணங்களிலும் தொழிற்பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. இந்த விஷயத்தை பம்பாய் டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டில் பரிசளிப்பு மகோற்சவம் நடந்தபோது அந்த ஸ்கூல் ட்ரஸ்டிகளின் சேர்மன் எடுத்துச்சொல்லி இந்த இன்ஸ்டிட்யூட்டுக்கு எப்போதும்போல மற்ற மாகாணங்களிலிருந்து பிள்ளைகள் வந்து சேர்வது ஸாத்தியமாகும்படி அதில் சொல்லிக்கொடுக்கப்பட்டு வரும் படிப்பை உயர்ந்த தினுசுப் படிப்பாக்க வேண்டிய தவசியமென்றார்.

**Term Fees.**

டர்ம் சம்பளங்கள்.—ஸ்கூல் பிள்ளைகள் ஒரு ஸ்கூலை விட்டு வேறு ஸ்கூலுக்குப் போகும்போது, அவர்கள் கொடுக்கவேண்டிய சம்பளம் விஷயமாய் மைஸூர் கவர்ன்மெண்டார் பின் வருகிறபடி ஒழுங்கு செய்திருக்கிறார்கள். ஸ்கூல் பிள்ளைகள் ஒரு டர்முக்கு மத்தியில் தகுந்த அனுமதி பெற்றுக்கொண்டு ஒரு கவர்ன்மெண்ட் ஸ்கூலுக்குப்போனால், அப்படிப் போகும் ஸ்கூலில் அந்த டர்மில் பாக்கி காலத்துக்குச் சம்பளம் கொடுக்கவேண்டியதில்லை. ஏனெனில் டர்ம் முழுமைக்கும் முந்தின ஸ்கூலிலேயே சம்பளம் கொடுத்துவிடுகிறான். அப்படியே கவர்ன்மெண்ட் உதவிபெறும் ஸ்கூல்களிலும் அந்த ரூல் ஒவ்வும். ஆனால், முழு டர்முக்கும் சம்பளத்தை வஸூல் செய்யும் ஸ்கூலானது பிள்ளை புதிதாய்ச் சேரும் ஸ்கூலுக்கு அந்தக் காலத்துக்குள்ள பாக்கிச் சம்பளத்தை விகிதப்படி கொடுத்து விடவேண்டும், ஆனால் அட்மிஷன் சம்பளம் மட்டும் எங்கும் கொடுக்கவேண்டியது.

**Chengalvaroya Naicker Technical School.**

செங்கல்வராய நாயக்கர் தொழிற் கல்விச் சாலை.—செங்கல்வராய நாயக்கர் தொழிற் கல்விச் சாலையில் காலஞ்சென்ற செங்கல்வராய நாயக்கரின் தினம் இரண்டாம் தடவையாகச் சில தினங்களுக்கு முன்னே கொண்டாடப்பட்டது. அப்போது மிஸ்டர் ஜஸ்டீஸ் சுந்தர அய்யர் அக்ராஸனம் வகித்திருந்தார். அவர் தமது ஆரம்ப ப்ரஸங்கத்தில் மிஸ்டர் செங்கல்வராய நாயக்கர் கியாதிபெற வேண்டுமென்ற விருப்பமில்லாமல் அடங்கி வாழ்ந்து வந்தாராலும் தொழிற்கல்வியைப்பற்றி யாவரும் நினையாமலும் அதைப்பற்றி ப்ரஸ்தாபியாமலு மிருந்த காலத்தில் அவர் தமது ஸொத்துக்களை ஒரு தொழிற் கல்விச் சாலைக்கு எழுதிவைத்தமட்டில் அவர் பெரிய மதியூகியா யிருந்திருக்க வேண்டுமென்று அவரைப் புகழ்ந்து பேசினார். அவர் பேரை இக்காலத்தாரும் பிற்காலத்தாரும் தலைமுறைக் கணக்காய் நினைத்துக் கொண்டிருப்பார்களென்றும் சொன்னார். கவர்ன்மெண்டார் தொழிற் கல்வியை முற்படுத்தச் சிறுகச் சிறுகத் தங்களாலானதைச் செய்துகொண்டு வருகிறார்களென்றும், அவர்களிடம் அதிகமாய் எதிர் பார்ப்பது ஸரியில்லையென்றும், ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே இம்மாதிரி விஷயத்தில் உதவிசெய்து கொள்ள வேண்டுமென்றும் சொன்னார். அவருக்குப் பிறகு திவான்பகதூர் ராஜரத்தினமுதலியார் அந்தப் பள்ளிக்கூடம் இப்படிபட்ட வேலைசெய்து வருகிறதென்று விஸ்தாரமாய் எடுத்துச்சொன்னார். அச்சமயம் மிஸ்டர் சாட்டர்ட்டனும் சென்னையில் கைத்தொழில் இலாகா சென்ற சில வருஷங்களாய்ச் செய்துகொண்டு வந்திருக்கும் வேலையைக் குறிப்பிட்டார்.

## ECONOMIC PRODUCT.
## விலையுள்ள பொருள்கள்.

**Maize Stalks.**

சோளத் தட்டைகள்.—மக்காச்சோளத்தின் தட்டையை மென்றால் இனிப்பாயிருக்கும். அதில் சர்க்கரை ஸத்து இருக்கிறது. கரும்புக்கு அரைவாசி ஸத்து இந்தத் தட்டையிலிருப்பதாக அமெரிக்காவில் கண்டுபிடித்திருக்கிறார்கள். பச்சைத் தட்டையை ஆலையில் நசுக்கிப் பிழிந்து, எடுத்த ரஸத்தைக் காய்ச்சினால் சர்க்கரைப் பாகு உண்டாகிறது. ஆனால் அதை அதிகமாகக் காய்ச்சினால் கெட்டுப்போகிறதே ஒழிய கட்டிச் சர்க்கரையாகவில்லை. சர்க்கரைக்குப் பதிலாக மக்காச்சோளப் பாகை உபயோகிக்கலாம். இந்தச் சர்க்கரை ஸத்து இருப்பதால் அந்தத் தட்டைகளைக் கதிர் கொய்தவுடன் வெட்டிப் பால் பசுக்களுக்கும் வேலை செய்யும் கால்நடைகளுக்கும் போட்டால் அவைகளுக்கு நல்ல தீவனமாகின்றன. தட்டைகளை வெட்டுக்கத்தி கொண்டு சிறு துண்டுகளாக வெட்டி மற்றத் தீவனங்களுடன் கலந்து போட்டால் கால்நடைகள் நன்றாய்த் தின்னும். தட்டைகள் அதிகமாய்க் காய்ந்து போனால் கால்நடைகளுக்குத் தீவனமாக உபயோகப்படமாட்டா.

**Burma Kerosine.**

பர்மா மண் எண்ணெய்.—1906-ம் வருஷம் பர்மாவிலிருந்து 57,000,000 காலன் எண்ணெய் ஏற்றுமதியாயிற்று. 1911-வது வருஷத்தில் 104,250,000 காலன் எண்ணெய் ஏற்றுமதி யானதுந் தவிர, 5 வருஷத்திற்கு முன்பு ஏற்றுமதியான அவ்வளவு எண்ணெய் இருப்பு இருக்கிறது. 1895-96-ம் வருஷம் 2,000,000 காலன் மாத்திரம் ஏற்றுமதியாகி இருக்கிறது. ஆகவே இந்தத் தொழில் அபிவிர்த்தியடைந்ததுபோல மற்றெந்தக் கைத்தொழிலும் இவ்வளவு சீக்கிரம் முன்னுக்கு வந்ததாகத் தென்படவில்லை. ஆனால் இப்படி ஏராளமாக எண்ணெயை கிரகித்து விடுவதால் நெடுங்காலம் இருந்து வருமா என்பது தான் ஸந்தேகம். நாளடைவில் பார்க்கவேண்டும் என்று பயனியர் பத்திரிகை கூறுகிறது.

**Ginger.**

இஞ்சி.—இது வெகுகாலமாக, இந்தியாவிலே செய்கைபண்ணப்பட்டு, மருந்தாகவும், சுகந்த திரவியமாகவும் பாவிக்கப்பட்டு வருகின்றது. இப்பொழுது, இது சென்னை, கொச்சி முதலாய குளிர் காற்றுள்ள வெப்பமான தேசங்களிலே மிக ஏராளமாயும், வங்காளம், பஞ்சாப் இடங்களிலே சிறிகவும் செய்கை பண்ணப்படுகின்றது. இதில் ஏராளமான பகுதி, சுக்காக ஆக்கப்பட்டு, உலகம் முழுதிலும் வியாபாரச் சரக்காகின்றது. அவற்றிலே அதிகமான பகுதி மலையாளக் கரையோரங்களிலுள்ள கொச்சி, கள்ளிக்கோட்டை முதலிய பல துறைமுகங்களிலிருந்தும் பிறவூர்களுக்கு ஏற்றுமதி பண்ணப்படுகின்றது. அவைகள் உலகத்திலே பல விடங்களிலுமுள்ள சுக்கிற் திறமென மதிக்கப்படும் ஜமேயிக்காச் சுக்கினை நிகரத்ததாக லன்டன் பட்டினத்து வியாபாரிகளால் மதிக்கப்படுகின்றது. அது பம்பாயிலும் கற்குத்தாவிலுமிருந்து வருடந்தோறும் ஏராளமாக ஏற்றுமதி பண்ணப்படுகின்றது. இந்தியாவிலே இஞ்சியைக் கிண்டி எடுத்துக் கதுவிப் பிரப்பங் கூடையைப் போன்ற அழுத்தமில்லாத கூடையிற்போட்டு ஆட்டி அதன் தோலைப் பெருமட்டாய் உரியுமாறுசெய்து பின்னர் வெய்யிலிற் படிமுறையாய்க் காயவைத்து அதனைச் சுக்காக ஆக்குகின்றார்கள். இஞ்சிக்கிழங் கொவ்வொன்றின் தோலையும் நன்றாய்ச்சீவிக் காயவைத்துச் சிலநேரத்தில் வெள்ளையாக்கியுஞ் சுக்காக ஆக்கப்படுகின்றது. இவையே முதற்றரத்துச் சரக்காக வியாபாரிகளால் மதிக்கப்படுகின்றன. சகல ஊர்களிலுமுள்ள சந்தைகளிலெல்லாம் இஞ்சி ஏராளமாய் விலைக்கு வாங்கத்தக்கதா யிருந்தாலும் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் மிக அரிதாக வாங்கத்தக்கதாக இருக்கின்றது. ஆனாற் சுக்கோ எவ்விடங்களிலும் வாங்கிக்கொள்ளத்தக்க ஒன்றாக இருக்கின்றது. இஞ்சி யாழ்ப்பாணத்திலே மேற்கு நாடுகளிலே மாத்திரம் அதிகப்பற்றாய்ப் பலா நிழலிலே சிறுகப்புதைத்துச செய்கைபண்ணி மருந்தாக மாத்திரம் பாவிக்கப்பட்டு வருகின்றது. இலங்கைக்கமச்சங்கத்துக்கு இலிகிதர், திருச்சினப்பள்ளி இஞ்சியிற் சிறுக எடுப்பித்துச் சாதனைச் செய்கைக்காக இலங்கையிலே பல விடங்களுக்கும் அதனை அனுப்பியமையின் அது இப்பொழுது அங்குள்ள சில பாடசாலைத் தோட்டங்களிலே சிறுகச் செய்கைபண்ணப்பட்டு வருகின்றது. அதனை இலங்கை இஞ்சியுடன் ஒத்துப் பார்த்தால் அது சுவையிலும் காரத்திலும் கதித்ததாகக் காணப்படுகிறது—காமத்தொழில் விளக்கம்.

## BUSINESS METHODS.
## வியாபாரமுறைகள்.

**A New Road to Acquire Wealth.**

பொருள் தேடுவதற்கோர் புதிய வழி.—உத்தியோகம், வியாபாரம், கூலிவேலை, போன்ற உத்தம வழிகளிலும், வட்டிக்கு பணம் கொடுத்தல் போன்ற மத்தியவழியிலும், விபசாரம், கொலை, களவு, போன்ற அதம வழிகளிலும் பணம் சம்பாதிக்கிறார்கள். இவை யெல்லாவற்றினும் அன்னிய தேசங்களுக்குச் சென்று அத்தேச வாசிகள் கைத்தொழில் வியாபாரம் போன்ற விஷயங்களில் கையாண்டு வரும் இரகசிய முறைகளை யறிந்து, பொருளீட்டி, தாய் நாட்டின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துதல் ஸர்வ சிலாக்கியமானது. இதற்கேற்ற வஸதிகள் மிகுந்துள்ள இக்காலத்தில், நாம் விசேஷக் கல்வியும் பொருளுமில்லாவிடத்தும் சுலபமாய்ச் செய்யக்கூடியவை பலவுள. உதாரணமாய், வங்காளி வாலிபனொருவன் ஜர்மனி தேசத்தின் தலை நகரான பர்லினில் ஹல்வா, ஜிலேப்பி, லட்டு, போன்ற சிற்றுண்டிகளை விற்று ஏராளமாய்ப் பொருள் சம்பாதிக்கின்றான். இவை ஐரோப்பியர்களுக்கு நூதனமாயும் மெத்த ருசிகரமாயும் இருப்பதால் அவர்கள் ஆவலுடன் வாங்கிப் புசிக்கின்றார்கள். இதைப்போல், லண்டனில் இரஸம் எனப்படும் மிளகு தண்ணீர் கோப்பை யொன்று, ஒரு அணு வீதம் நம்மவர்களால் அபரிமிதமாய் விற்கப்படுகின்றது. நமது நாட்டுக் கிராமக் கூத்தாடிகள் மேனாடுகளுக்குச்சென்று, மாஞ்செடி முளைத்தல், பெட்டியிற் புகுந்த பெண் காணாமற் போதல் போன்ற ஜாலவித்தைகளைக் காட்டி நிரம்பப் பொருள் சம்பாதிக்கலாம். இவர்களுக்கு நம் நாட்டுத் தனிகர் முதன் முதல் கொஞ்சம் பொருளுதவி செய்யவேண்டும் என்று ஒரு பத்திரிகை எழுதுகிறது.

**An Advertising Idea.**

விளம்பரம் செய்வதற்கு ஒரு யுக்தி.—இந்தியாவில் சரக்குகளை விளம்பரப் படுத்துவதற்கு ஒரு பத்திரிகையின் நிருபர் ஒரு யுக்தி சொல்லுகிறார். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், ஸாமான்கள் செய்து வருகிறவர்கள் ஒரு கப்பலை சார்ஜ் பேசி அதில் விற்க வேண்டிய ஸாமான்களைப்போட்டு உலகத்திலுள்ள துறைமுகங்களுக்கு ஒவ்வொன்றாய் போகச்சொல்லி அங்கங்கே ஸாமான்களை விற்றுவருகிறார்கள். அதுபோல் இந்தியாவிலும் ஆறுகள் உள்ள இடங்களிலெல்லாம் சில படகுகளைப்பேசி அவைகளில் இந்தியாவில் செய்யப்படும் துணிவகைகள், மருந்துவகைகள், ஸோப்புகள், வாசனைத் திரவியங்கள் முதலிய சரக்குகளை ஏற்றி பெரிய ஊர்களின் ஆற்றங்கரையில் நிறுத்தி அங்கங்கே ஜனங்களுக்கு ஸாமான்களைக் காண்பித்து விற்று வரலாமென்றார்.

**The Secrets of Business Success.**

வியாபாரத்தில் பணம் ஸம்பாதிப்பதற்கான ரகஸியங்கள்.—பெரிய வியாபாரிகளாவதற்கு பொதுவாய் வியாபாரத்தைப்பற்றிய விஷயங்களைக் கற்று தேர்ச்சி அடைந்திருப்பது அவசியம். அநேக வருஷ அனுபோகத்தாலுண்டாகும் ஞானத்தை தற்போது ஐரோப்பா, அமெரிக்கா இவ்விடங்களில் ஏற்பட்டுள்ள வியாபாரக் கல்விச்சாலைகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். வியாபாரத்திற்குரிய விஷயங்களைப் படிப்ப தென்றால் ஸாமான்கள் விற்பதற்கு வேண்டிய ஸாமர்த்தியம், அவைகளை விளம்பரம் செய்வது, வியாபாரத்தைப் பற்றி கடிதங்கள் எழுதுதல், மனுஷ்யர்களுடைய ரீதிகளை அறிதல் முதலியவைகளைத் தெரிந்து கொள்வதாகும். இவைகளைத் தெரிந்து கொள்ளும் பக்ஷத்தில் வியாபாரம் பெருகி நல்ல லாபமும் கிடைக்கும். விளம்பரம் செய்வதென்றால் விற்க எத்தனிக்கும் ஸாமான் இன்னதென்றும், அதன் குணம் இன்னதென்றும், அதன் உபயோகங்கள் இன்னவை என்றும், எடுத்துக்காட்டுவதாகும். விளம்பரஞ் செய்வதால் அதில் குறிப்பிட்ட ஸாமானைவாங்க வேண்டும் என்ற ஆசையை உண்டாக்கவேண்டும். தற்காலத்தில் போடப்படும் விளம்பரங்களின் நோக்கம் புதிதாக ஜனங்கள் ஸாமான்களை வாங்குவதற்கு வேண்டிய ஆசையைக் கிளப்புவதற்கே. இதற்கு பத்திரிகைகளில் விளம்பரங்கள் போடுவது நல்ல உபாயமாகும். ஏனென்றால் அந்த விளம்பரங்களை பலபேர்கள் படிப்பதால் ஒரு விளம்பரத்தைக்கொண்டு பல பேர்களைப் பிடித்துவிடலாம். வியாபாரத்தில் வெற்றி பெற அதைப்பற்றிய விவரங்களை மட்டும் அறிந்திருப்பது போதாது. அதோடு பிடித்தகாரியத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய தைரியமும் ஊக்கமும் இருக்கவேண்டும்.

## FRAUDS AND FAKES.
## மோசங்களும் பித்தலாட்டங்களும்.

**Adulteration of Butter.**

கலப்படஞ் செய்யப்பட்ட வெண்ணெய்.—வெண்ணெயில் ஜலத்தைச்சேர்க்கும் வழக்கம் இங்கிலாந்தில் அதிகரித்துக் கொண்டுவருகிறது. ஸாதாரணமாக, வெண்ணெயில் 100-க்கு 16 பங்குதான் ஜலமிருக்கலாம். அதற்கதிக மிருந்தால் அது நல்ல வெண்ணெயல்ல. 1910ம் வருஷத்தில் 1,048 வெண்ணெய் டப்பிகளைப் பரிசோதித்ததில் 830 டப்பிகளில் தேங்காய் எண்ணெய்,மாமிசக்கொழுப்பு, முதலிய ஸாமான்கள் கலந்திருந்ததாக வெளிப்பட்டது. இவ்விதம் அன்னியக் கொழுப்புகள் வெண்ணெயுடன் கலந்திருக்கின்றனவென்று கண்டுபிடிக்க வெகு ஸாமர்த்தியம் வேண்டும்.

**An Easy Way of Becoming Rich.**

பணக்காரராக சுருக்கான வழி.—சில கம்பெனிகளுக்குத் தபால் ஸ்டாம்புகளனுப்பிப் பெருத்த லாபத்தை யடையலாமென எவ்வளவுபேர் ஏமாந்து போயிருக்கிறார்கள்? ஸமீபத்தில் ஒரு கம்பெனி நாலணா தபால் ஸ்டாம்புக ளனுப்புவோர்களுக்கு ஏராளமான ஐசுவரியத்தை ஸம்பாதிக்கும் ஓர் முறையைத் தெரிவிப்பதாக விளம்பரம் செய்ததும் அனேகர் சீக்கிரத்தில் தனவந்தர்க ளாகலாமென்று தபால் ஸ்டாம்புகளை யனுப்பினார்கள். கம்பெனியார் ஒருமாஸம் பொறுத்து பிறகு ஒவ்வொருவருக்கும் "இது தான் வழி" என்று அச்சடித்த கார்டுகளை யனுப்பினார்கள். குற்றம் கம்பெனியாரிடத்திலிருக்கிறதோ அல்லது பண ஆசை பிடித்துத் தபால் ஸ்டாம்புகள் அனுப்பிய ஜனங்களிடத்திலிருக்கிறதோ! ஆகையால், விளம்பரங்கள் நம்பக்கூடியவைகளாயென சற்று யோசித்தல் வேண்டும். தக்க பத்திரிகைகளில் உள்ள விளம்பரங்களையே நம்ப வேண்டும்.

**Tricks in the Building Trade.**

கட்டிடங்கள் கட்டுவதில் மோசங்கள்.—கட்டிடங்கள் கட்டுவதை மேன்பார்வை பார்ப்பதற்காக அந்தத் தொழிலில் ஸமர்த்தர்களான சிற்பிகளையும் கிளார்க்குகளையும் நியமிப்பது வழக்கம். இவர்களுக்கு கொத்துவேலை, தச்சுவேலை, எல்லாம் தெரிந்திருக்கலாம். ஆனால் வீடு கட்டுவதில் அடங்கிய எல்லாவிதத் தொழில்களிலும், ஸாமான்களிலும் அவர்களுக்கு ஞான மிருப்பது அரிது. உதாரணமாக மரம், வர்ணம், கல், இவைகளின் குணாகுணங்கள் எல்லாருக்கும் தெரியாது.

ஒரு கோயில் கட்டுவதற்கு மரம் ஒப்புக்கொண்டவன் மரங்களை அனுப்பினான். அவைகளில் சில கணுக்களிருந்தனவாம். அவைகளுக்காக கோயில் வேலையை மேன்பார்வை பார்த்து வந்த சிற்பி மரங்களைத் திருப்பிவிட்டான். மரங்களை அனுப்பிய கண்டிராக்டர் ஒன்றும் பதில் பேசாமல் மரங்களை பட்டரைக்கு எடுத்துக்கொண்டுபோய், அவைகளுக்கு நன்றாய் வர்ணம்பூசி, எங்கே பார்த்தாலும் ஒன்றுபோல் இருக்கும்படியாகச் செய்து, மறுபடியும் கோயில் வேலைக்குக் கொண்டுவந்து உபயோகப்படுத்தினபோது அவைகள் "முன்வந்த மரங்களை விட நல்லமரங்கள்" என்று சிற்பி ஒப்புக்கொண்டானாம். அந்த மரவேலைகளெல்லாம் இன்றைக்கும் அந்தக் கோயிலில் இருக்கின்றனவாம்.

இன்னொரு ஸமயத்தில் ஒரு கட்டிடத்திற்கு "மீமல்" என்பதாக ஒருவித மரம் ஸப்ளை செய்வதாக ஒப்புக்கொண்ட வுன் ஸ்வீடன் தேசத்து மரத்தை ஸப்ளை செய்தான் என்பதாக ஒரு சிற்பி மரங்களைத் திருப்பிவிட்டானாம். கண்டிராக்ட்காரன் மரங்களைத் திருப்பி எடுத்துக்கொண்டுபோய், ஐந்தாறு நாள்களுக்கு வெயிலில் போட்டு நன்றாய்ப் புரட்டி ஊதா நிறமாக்கி, மறுபடியும் வேலைக்குக் கொண்டுவந்த போது சிற்பி பார்த்து சந்தோஷப்பட்டு அவை "மீமல்" மரம்போல் இருக்கின்றனவென்று ஒப்புக் கொண்டானாம்.

இன்னொரு ஸமயத்தில் வர்ணம் பூசுகிற ஒருவனுக்கு 20 மாதிரி வர்ணங்களில் ஒன்றைக் காட்டி அதன்படி பூசச்சொன்னார்கள். வர்ணக்காரன் பூசினபோது என்ன சங்கடப்பட்டும் வர்ணம் காட்டியபடி கூட்டமுடியாமல் கிட்டத்தட்ட அதுபோல்த் தான் இருந்ததாம். ஆனால், இந்த வர்ணத்தை சிற்பி ஒப்புக்கொள்ளமாட்டேன் என்றார். அதற்காக வர்ணக்காரன் ஒரு யுக்தி செய்தான். தனக்கு முதலில் காட்டிய 20 வர்ணங்களும் அடங்கிய காகிதத்தை எடுத்து, அதில் தன்னை எந்த வர்ணத்தை பூசச் சொன்னாரோ அந்த வர்ணத்தின்மேல் தான் கட்டிடத்திற்குப் போட்ட வர்ணத்தை மெல்லியதாகப் பூசி, கட்டிடத்திற்கு எந்த வர்ணம் பூசியிருக்கிறதோ அந்தமாதிரியே மாதிரி வர்ணம் இருக்கிறதென்று காட்டினானாம். இரண்டையும் பார்த்துக்கொண்டு சிற்பி ஸரிதான் என்று ஒப்புக்கொண்டானாம்.

## MACHINERY AND INVENTION.

## யந்திரங்களும் நூதன கற்பிதமும்.

**The Progress of Motor Cars.**

மோட்டார்கார்களின் அபிவிருத்தி.—இந்தியாவில் மோட்டார் வண்டி நாளுக்கு நாள் அபிவிருத்தியாகி வருகிறது என்பது வியாபாரக் கணக்கை பார்த்தால் வியக்தமாகும். 1909-1910ல் இந்தியாவில் வந்து இறங்கின மோட்டார் வண்டிகள், மோட்டார் சைகில்கள், இவைகளின் மதிப்பு $47\frac{1}{2}$ லட்சம் ரூபாய் என்றும், 1910-11-ல் $73\frac{1}{4}$ லட்சம் ரூபாய் என்றும், 1911 12-ல் $100\frac{1}{4}$ லட்சம் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

**Gold in Sea Water.**

கடல்நீரில் தங்கம்—அமெரிக்கா ஐக்கியநாட்டைச்சார்ந்த நியுயார்க் பட்டணத்தில் ஆஸ்கார் மாகல் என்னும் ஒர் ரஸாயன சாஸ்திரி கடல்நீரில் தங்கமிருக்கிற தென்றும், 3,000 பவுன் எடையுள்ள கடல் நீரைக்காய்ச்சினுல் 1 பவுன் தங்கம் எடுக்கலாமென்றும், 48,409 பவுன் செலவு செய்து அதற்கேற்ற யந்திரங்களை அமைத்தால் 2,60,000 பவுன் மதிப்புள்ள தங்கம் அடைலா மென்றும் சொல்லுகிறாராம்.

**Milk Preserving Machine.**

பாலைப் பழுதுபடாது காத்துக்கொள்ளும் யந்திரம்.—இவ்விதயந்திரமொன்று ப்ரான்ஸ்தேசத்திலே புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு அவ்வூரிலே போர்டோ என்னும் நகரத்திலே வைக்கப்பட்ட பொருட்காட்சியிற் காட்டப்பட்டதாம். அந்த யந்திரம் பாத்திரத்திவிடப்பட்டிருக்கும் பாலை அழுத்தி நெருக்கி அதிலுள்ள கொழுப்புப் பதார்த்த கோளங்களை அதிலுள்ள நீரிலிருந்து வேருகவிடாமல் இரண்டும் பூரணமாகக் கலந்திருக்கச் செய்வதனுல் பால் திரைந்து பழுதாகாமல் வேண்டியவளவு நேரத்துச்கு காக்கப்படுகின்றதாம்.

**Aerial Travelling.**

ஆகாயமார்க்கப் பிரயாணம்.—இதற்கு மூன்னும் இப்பொழுதும் தண்டவாளங்கள் கீழும் புகை வண்டி மேலுமாகரெயில் போய்க்கொண்டிருக்கிறது. இனி ரெயில் தண்டவாளம் தந்திக்கம் பியைப்போல கம்பங்கள் மேல்போடப்பட்டு வண்டிகள் கீழே ஊஞ்சல்போல பூமியைத் தொடாமலும் புகையின் உதவி இன்றியும் மின்சாரத்தால் இழுக்கப்படும். மலைகளின் பள்ளத்தாக்குகளில் வண்டி ஏறி இறங்குவதைவிட இவ்விதம் செய்வது மிகவும் ஸௌகரியமே. தவறி விழுமேயானுல் அன்னப்பக்ஷிகளின் உதவியால் ஆகாயத்தில் பிரயாணம் செய்த ஆமை கீழேவிழுந்து சில் சில்லாகப் போயின கதியாகும். இவ்விதமாக ஐரோப்பாவில் இரண்டு மூன்றிடங்களில் பரிக்ஷைசெய்து வருகிறார்கள்.

**Wood Out of Paper.**

காகிதத்தால் மரம் செய்தல்.—காகிதத்தினுல் அநேகர் அநேகவிதமான ஸாமான்களைச் செய்கிறார்கள். ஆனுல் மரத்துக்குப் பதிலாய்க் காகிதத்தை உபயோகிக்கலாம் என்பதை இதுவரையில் எவரும் கண்டுபிடிக்கவில்லை. மரம் எப்படி கெட்டியாக இருக்கிறதோ அப்படியே காகிதத்தையும் செய்யலாமென்றும், பார்வைக்கு மரத்தைப்போலவே காணும்படி அதைச் செய்யலாமென்றும், மரங்கள் உபயோகிக்கப்படும் பல காரியங்களுக்கு மரங்களைப்போல் செய்யப்பட்ட இக்காகிதங்களை உபயோகிக்கலாமென்றும் ஒருவர் இப்போது நூதனமாய்க் கண்டுபிடித்திருக்கிறார். இயற்கை மரத்தைவிட இச்செயற்கை மரம் விலையில் குறைவாயும் பலனில் அதிகமாயும் இருக்கிறதென்று அவர் சொல்லுகிறார்.

**The Copyist is gone.**

வந்தது காப்பியிஸ்ட்டுக்கு ஆபத்து.—மனுஷ்யனைப்போலும், மிருகத்தைப்போலும் மற்றுமெந்த ஸாமானைப்போலும் புகைப்படவுருவ மெடுக்கிறார்களல்லவா? அதற்கே போடோகிராப் என்று பெயரிடப்பட்டிருக்கின்றது. அனேகர் தத்தம் குடும்பத்தவரோடும், தாம் மட்டும் தனியாகவேனும், தம்மிடம் வேலை செய்யும் வேலையாளரோடும் புகைப்படவுருவமெடுத்துக்கொள்வதைப் பார்த்திருக்கிறோம். அப்படியிருக்க தற்போது நவீனமாக தஸ்தாவேஜுகளையும் புகைப்பட வுருவத்திலெடுத்து பத்திரப்படுத்தும் விதமும் ஏற்பட்டிருக்கிறதாம். அமெரிக்காவிலுள்ள ஸர்க்கார் கோர்ட்டுகளில் இம்முறையைக் கடந்த ஆறுமாதங்களாய்ப் பரிசிலனை செய்த பின்பு இப்போது காபியிஸ்டு என்கிற குமாஸ்தாக்களை வைத்துத் தஸ்தாவேஜுகளைக் காபி செய்ய வைக்காமல் இந்த போடோகிராப்களை வைத்தே வேலை நடத்தி வருகிறார்களாம். இதனுலே கடந்த ஆறுமாத காலத்தில் ஸர்க்காருக்கு லாபகரமா யிருப்பது 2312 பவுனும்.

## LAW.
## சட்டம்.

**Water Rate.**

தண்ணீர்த் தீர்வை.—மாமூலாக ஸாகுபடி செய்யப்படும் நஞ்சை நிலத்திற்கு அதிகமான நஞ்சை நிலம் ஸாகுபடி செய்யப்பட்டிருக்கிறதென்று கவர்ன்மெண்டார் ருஜுப்படுத்தக் கூடுமானல், அவர்கள் ஜமீன்தாரிடமிருந்து தண்ணீர்த் தீர்வை வசூல் செய்யக்கூடும். ஷை தண்ணீர்த்தீர்வைச்கு ஜமீன்தார் குடியைப் பாத்தியப்படுத்த வேண்டுமானல், மாமூலாய் நஞ்சையாயில்லாத நிலத்தை குடி ஸாகுபடி செய்திருக்கிறான் என்று ருஜுப்படுத்தவேண்டும்.

**Widow's Savings.**

விதவையின் மிகுதிப் பணங்கள்.—ஒரு விதவை ஒரு ஏஜண்டை நியமித்து தன் ஸொத்துகளைப் பார்க்கும்படி ஏற்படுத்தியிருந்தாள். அந்த ஏஜண்டு பணங்களை வசூல்செய்து விதவையின் ஆயுள் காலத்துக்குள் அவளிடத்தில் கொடுக்காவிட்டால் அந்தத் தொகைக்கு அநந்தர வார்ஸுகளுக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். விதவை செலவிடாமல் மீத்து வைத்திருக்கும் ஸொத்தெல்லாம் அவளுடைய ஸ்ரீதனம் ஆகாது. அவைகள் எல்லாம் அவள் அனுபவித்து வந்த எஸ்டேட்டைச் சேர்ந்ததாகும்.

**Right of Property Upwards.**

பூமியின்மேலிருக்கும் ஆகாயத்திற்கு உரிமை.—ப்ரான்ஸ் தேசத்திலுள்ள பக் என்னுமிடத்தில் அனேக குடியானவர்கள் மாரிஸ் பார்மன் என்னும் பெரிய வானக் கப்பலோட்டியின்மேல் ஒரு பிரியாது கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த மாரிஸ் பார்மென் என்பவர் தமது ஏரோப்ளேன் என்கிற ஆகாயக்கப்பலில் ஏறிக்கொண்டு அடிக்கடி தம் நிலங்களுக்கு மேலாகப்பறந்து செல்லுகிறாராம். அவ்விதம் செய்வதனல் இந்தக் குடியானவர்களுடைய நில ஸாகுபடிக்குக் கஷ்டமுண்டாகிறதாம். தமக்கும் எங்கு அபாயம் நேரிடுமோவென்னும் பீதியும் எற்படுகிறதாம். இத்தியாதி காரணங்களுக்காகத் தம்முடைய நிலங்களுக்கு மேலாக மாரிஸ் பார்மென் போகக்கூடாதென்றும், அப்படி மீறிப்போகும் பக்ஷத்தில், தம் நிலத்திற்கு மேலிருக்கும் ஆகாயம் தமக்கு ஸொந்தமாதலால், தம் உரிமையில் ஆக்கிரமித்த குற்றத்திற்கு அவர் உள்ளாகவேண்டி வருமென்றும், நோட்டீஸ் கொடுத்துப் பிரியாதுங்கொண்டு வந்திருக்கிறார்களாம். இந்த நவீனமான பிரயாதைக் கண்ட ஆகாய கமன்ஸ்தர் பலர் இதை யிவ்விதமே விட்டுவிட்டால் தமக்கும் கஷ்டம் வந்து சேருமென்று கருதி மாரிஸ் பார்மேனுக்கு உதவியாகவே சேர்ந்து குடியானவர்களோடு எதிர் வியாஜ்யம் செய்தார்கள்.

**Forcible Removal of a Railway Passenger.**

ஒரு ரெயில்வே பிரயாணியை பலவந்தமாய் இறக்குதல்.—வடமேற்கு ரெயில்வே கம்பெனியார் ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் தனித்தனியே கம்பார்ட்டுமெண்டு ஏற்படுத்தி வைத்திருந்தார்கள். வாதியானவன் காராச்சியிலிருந்து ஐத்ராபாத்துக்கு இரண்டாவது கிளாஸில் பிரயாணம் சென்றுபோனன். போகும்பொழுது ஐரோப்பியருக்கு என்ற லேபிள் போட்டிருந்த கம்பார்ட்டுமெண்டில் ஏறிக்கொண்டதால் ஒரு ஸ்டேஷன் மாஸ்டர் அவரை பலவந்தமாய் கம்பார்ட்டுமெண்டிலிருந்து இறக்கிவிட்டார். கம்பார்ட்டுமெண்டுகளை இன்னர் இன்னருக்கென்று பிரத்தியேகமாக வைப்பது ஸரியல்லவென்றும், தன்னை பலவந்தமாக கீழே இறக்கினதால் தனக்கு தொந்திரவு ஏற்பட்டதென்றும், அதற்காக தனக்கு டாமேஜ் கிடைக்கவேண்டுமென்றும், இந்தியா மந்திரியின் பேரில் வியாஜ்யம் போட்டான். கோர்ட்டார் பின்வருமாறு தீர்மானஞ் செய்தார்கள். ரெயில்வே அதிகாரிகள் ஐரோப்பியர்களுக்கென்றும் இந்தியர்களுக்கென்றும் இடம் குறித்து வைப்பதில் ஞாயவிரோதம் ஒன்றுமில்லை. அப்படி செய்வதை சட்டமும் தடுக்கவில்லை. ஆகையால் அவர்கள் செய்தது தவருகமாட்டாது. வாதி ஐரோப்பிய கம்பார்ட்டுமெண்டில் பிரவேசித்தது துராக்கிரமே ஆனலும் அவரை ரெயில்வே சிப்பந்திகள் பலவந்தப்படுத்தி இறக்க அதிகாரமில்லை. ரெயில்வே ஆக்டில் இன்னின்ன ஸந்தர்ப்பங்களில் பிரயாணிகளை பலவந்தமாய் இறக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னொருவனுக்கு ஏற்பட்டிருக்கும் கம்பார்ட்டுமெண்டில் பிரவேசிப்பவனை பிராஸிக்யூஷன் செய்யலாமென்று சொல்லியிருக்கிறது. அதனல் பலவந்தமாக இறக்கக்கூடாதென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் ரெயில்வே அதிகாரிகள் செய்ததானது அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அதிகாரத்தை மீறி நடத்திய செய்கையாகும். அதற்கு முதலாளியாகிய இந்திய மந்திரி கட்டுப்பட்டவர் அல்ல.—5 இந்து லா ரிபோர்ட் 141.

## MEDICINE.

## வைத்தியம்

**Stammering.**

தெற்றுவாய்.—தினந்தோறும் அரை மணிநேரம் ஈசலடித்துக்கொண்டிருந்தால் தெற்றுதல் நின்று விடுமாம். இதை யாவரும் பிரயோகித்துப்பார்க்கலாம்.

**Medical Women for India.**

இந்தியாவுக்கு ஸ்திரீ வைத்தியர்கள்.—இந்தியாவுக்கு ஸ்திரீ வைத்தியர்கள் அவசியமென்று லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:—இந்திய ஸ்திரீகள் படுதா ஸ்திரீகள் ஆனபடியாலும், புருஷரிடத்தில் அவர்கள் வைத்தியம் பார்த்துக்கொள்வதில்லை யாகையாலும், வைத்தியம் கற்ற ஸ்திரீகளைக் கவர்ன்மெண்டே தயார் செய்து அவர்களுக்குச் சம்பளம் பென்ஷன் முதலியவைகள் புருஷ வைத்தியர்களுக்கு உள்ளபடி இருக்க வேண்டுமென்றும், இந்திய ஸ்திரீகளை வைத்தியத்தில் தயார் செய்வது அவசிய மென்றும், எழுதப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்யாத வரையில் இந்திய ஸ்திரீகளுள் மரணங்கள் அதிகமாய் நேரிட்டுக்கொண்டிருக்கும். பிரிட்டிஷ் நாகரிகத்துக்கே அது ஒரு பெரும் வசையாயிருக்கும். கவர்ன்மெண்ட் அப்படிச் செய்தால் அது அவர்கள் நல்லெண்ணத்தைக் குறிப்பதாக இந்தியர் கருதுவார்கள். அதனாலுண்டாகும் செலவு பெரிதல்ல. காலாந்தரத்தில் இந்தச் செலவு வரும்படியால் சரிக்கட்டிப்போனாலும், ஆரம்பத்தில் கவர்ன்மெண்ட் முயற்சி அவசியம். சக்ரவர்த்தி இந்தியாவுக்குப்போய் வந்ததின் அறிகுறியாக இந்தத் திருத்தம் மிகவும் பொருந்தும். இப்படி இந்தப் பத்திரிகை எழுதுகின்றது. இந்திய ஸ்திரீகள் நல்ல வைத்தியர்களில்லாமல் மாண்டுபோகிறார்க ளென்பதில் சந்தேகமில்லை. நாட்டு வைத்தியர்கள் பயிற்சியில்லாமல் பிரயோஜனமற்றிருக்கிறார்கள். நாட்டு வைத்தியர்களை நமது பூர்வீக சாஸ்திரங்களின்படியும் வழக்கத்தின்படியும் தயார்செய்து அவர்களைக்கொண்டு ஸ்திரீகளுக்கு வைத்தியம்செய்வித்தால் அது ஏழைகளுக்குப் பிரயோஜனப்படும். மேல்நாடுகளது வைத்தியமுறை அதிகச் செலவுபிடிக்கும். அந்த வைத்திய முறையில் தயாரான வைத்தியர்கள் செல்வமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஸ்திரீகளுக்குப் பிரயோஜனப்படுவார்கள். மேலும் அவர்களை தேசத்துக்கு வேண்டிய அளவு தயார்செய்வதும் கஷ்டம். ஆகையால் இந்திய ஸ்திரீகள் நல்ல வைத்திய மில்லாமல் ரோகங்களால் வருந்துவதையும் இறந்துபோவதையும் கண்டு, கவர்ன்மெண்டாரும் ஜனங்களும், 'டைம்ஸ்' கிருபர் சொல்லுவதுபோல, மேல்நாட்டு முறைப்படி வைத்தியர்களைத் தயார் செய்வதுமன்றி, ஆயுர்வேத யூனானி முறைகளின்படியும் ஸ்திரீ வைத்தியர்கள் தயார் செய்வது அவசியம் என்று சுதேசமித்திரன் சொல்லுகிறது. ஏற்கெனவே ஏற்பட்டிருக்கும் டபரின் பண்டைப் பலப்படுத்தி இன்னும் அதிகமான மருத்துவச்சிகளையும் வைத்தியர்களையும் தயார் செய்யவேண்டும்.

**The Use of Maize.**

சோளத்தின் பிரயோஜனம்.—மகம்மதிய வைத்தியர்கள் மக்காச்சோள மாவை அதிக ஸத்துள்ள போஜனம் என்றும், க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்ட ஜனங்களுக்கு அது தகுந்த ஆகாரமென்றும், அதிஸார பேதியால் அவஸ்தைப்படுகிறவர்கள் அதைச் சாப்பிட்டுவந்தால் வியாதி குணமாய் விடுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். கிரேக்க தேசத்திலும் அமெரிக்காவிலும் மக்காச்சோளக் கதிரில் தொங்கும் பட்டுநூல் குஞ்சம் போன்ற வஸ்துவைக் கஷாயம் வைத்துக் கொடுத்தால் நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, முதலான வியாதிகள் குணமாவதாகச் சொல்லுகிறார்கள். மக்காச்சோளக் கதிரில் உள்ள தானியத்தை உதிர்த்த பின்னுள்ள கத்தையை எரித்த சாம்பலுடன் ஸாதாராண உப்புக் கலந்து கொடுத்தால் நெஞ்சுச் சளியும், அதனாலுண்டான கக்குவான் என்னும் இருமலும் குணமாகிறதாம்.

**Rice Mills.**

அரிசி மில்.—உமி போட்டு எரிக்கும் அரிசி மில்லுகளுக்கு ஸமீபத்தில் குடியிருக்கும் பார்மியர்களின் கண்களில் தூசு பலமாகப் படிவதால் கண் எரிச்சல் கண்டு, இரண்டு மூன்று நாள் வரையில் கண் இருட்டிக்கொண்டு உபாதைப்படுவதாக முறையிடுகிறார்கள். கிலக்கரியையாவது கட்டையையாவது போட்டு எரித்தபோது இவ்வித உபத்ரவம் இருந்ததில்லையாம்.

**Remedy for Scorpion Sting.**

தேள் கொட்டுக்கு பரிகாரம்.—தேள் கொட்டியவுடன் கொட்டியவிடத்தில் சிறிது புளியையும் அதே யளவு சுண்ணாம்பையுங் கலந்து வெண்ணெய்போலாக்கித் தடவினால், 5-நிமிஷத்திற்குள் விஷம் இறங்கிவிடும்.

## FUN AND ANECDOTE.

### வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

**An Old Friend.**

ஒரு பழைய சினேகிதன்.—பெரிய உத்தியோகத்தில் இருக்கும் தன் பால்ய சினேகிதனை ஒருவன் பார்க்கப்போனபொழுது "நீ யார்? இங்கு எதற்காக வந்தாய்?" என்று அவர் கேட்டார். பார்க்கப்போன சினேகிதன் "நீ என்னை யறியாயா? நான் உனது பால்ய சினேகிதன். உனக்குக் கண்திருஷ்டி குறைந்ததென்று கேட்டு உன்னைப் பார்க்கவந்தேன்" என்று பதில் சொன்னான்.

**Pungent Sauce.**

உறைப்பான பச்சடி.—சிதம்பரம்செட்டி சத்திரத்தில் இரண்டு சிநேகிதர்கள் போஜனம் செய்துக்கொண்டிருக்கையில், அவர்களில் ஒருவன் தனதுஇலையில் பரிமாரியிருக்கும் பச்சைமிளகாய்ப் பச்சடியை நாக்கில் வைத்துக்சொள்ள அது இவ்வளவுவென்று சொல்லமுடியாத காரமாய் இருந்தபடியால் பொறுக்க முடியாமல் கண்ணீர் சொரிய ஆரம்பித்தான். அதைக் கண்ட அவன் சிநேகிதன் "சாஸ்திரி! என் அப்படி அழுகிறாய்?" என்று கேட்க, "ஒன்றுமில்லை ஐயா, போனவருஷத்தில் பீப்ள்ஸ் பார்க்குத் தீயில் மாண்டு போன என் மனைவி சேஷம்மாளை நினைத்துக் கொள்ள அழுகை வந்தது" என்று அவன் பதில் சொன்னான். கொஞ்சநேரத்திற்குப்பிறகு குப்பண்ணா கூட அப்பச்சடியை ருசிபார்த்துப் பொறுக்க முடியாமல் கண்ணீர் சொரிய ஆரம்பித்தான். அப்பொழுது சாஸ்திரி "நீ என் அழுகிறாய்" என்று கேட்க, "என்னத்திற்கா? உன் மனைவி மாண்டுபோன பொழுது, நீகூடப்போகவில்லையே என்று அழுதேன்" என்று குப்பண்ணா சொன்னாராம்.

**The Story of Mr Sinha's Resignation.**

ஸின்ஹா ராஜிநாமாக் கொடுத்ததைப் பற்றிய கதை.—சில வருஷங்களுக்கு முன் ஸமாசாரப் பத்திரிகைகளை அடக்குவதற்காக பாஸ்செய்த சட்டத்தை அங்கீகரிக்க முடியாமல் இந்தியா கவர்ன்மெண்டு நிர்வாக ஸபையில் மெம்பராயிருந்த எஸ். பி. ஸின்ஹா தம் வேலையை ராஜிநாமாக்கொடுத்து மறுபடி அதை ரத்து செய்துகொண்டார். இதைப்பற்றிய ரகஸ்யத்தை ஸமீபத்தில் லார்டு மின்டோ வெளியிட்டிருக்கிறார். அவர் சொன்னதாவது.

"மிஸ்டர் ஸின்ஹா என்னுடன் நம்பிக்கையாய் ஒத்து உழைத்த மாதிரி எவருமே உழைத்திருக்க மாட்டார் என்று உறுதியாகச் சொல்லுவேன். இவரைப்பற்றி நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லுகிறேன். ஒருநாள் நான் பாரக்பூரிலிருந்து கவர்ன்மெண்ட் ஹவுஸுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தேன். நான் என் ஜாகைக்கு வந்துக்கொண்டிருக்கையில் எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதைத்திறந்து பார்ப்பதற்கு முந்தி, என் ப்ரைவேட் ஸெக்ரிடேரி என் அறைக்குள் வந்து, கவர்ன்மெண்ட் ஹவுஸுக்குப் பக்கத்தில் இப்பொழுதுதான் ஒரு மணி நேரத்திற்கு முந்தி பேர்பெற்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை கொலை செய்துவிட்டார்களென்ற சமாசாரத்தை என்னிடம் சொன்னார். அப்பொழுது எனக்கு என்ன கவலை இருந்திருக்கும் என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். எனக்குக் கிடைத்த காகிதத்தைத் திறந்து பார்த்தவுடனே என் கவலை இரண்டு மடங்கு அதிகரித்தது. அக்கடிதம் மிஸ்டர் ஸின்ஹாவினிடமிருந்து வந்தது. இந்தியா கவர்ன்மெண்டாரால் கொண்டுவரப்பட்ட ப்ரெஸ்பில்லில் கண்ட சில நிபந்தனைகள் தமக்கு ஸம்மதமில்லையாகையாலும், அதைத் தாங்கிப் பேசத் தம்மால் முடியாதாகையாலும் வைஸ்ராய் நிர்வாகஸபையில் இனி மெம்பராக இருக்க முடியாது. ஆகையால் தாம் கொடுத்தனுப்பிய ராஜிநாமாவை அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இக்கடிதம் என் மனதை மிகவும் உருகச் செய்தது. அன்று இரவு கவர்ன்மெண்ட் ஹவுவில் பெரிய விருந்து ஒன்று நடக்கவேண்டியிருந்தது. இன்னது செய்வதென்று எனக்குத் தோன்றவில்லை. இரண்டு மணிநேரம் கழித்து, மிஸ்டர் ஸின்ஹாவினிடமிருந்து இன்னொரு கடிதம் வந்தது. முதல் கடிதம் எனக்கு எழுதி யனுப்பியபொழுது போலீஸ் இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டார் என்ற ஸங்கதி அவருக்குத் தெரியாது. தெறிந்தபிறகு, தாம் எழுதியனுப்பிய ராஜிநாமா கடிதத்தை வாபஸ் செய்யும்படி கேட்டுக் கொண்டார். இந்த அஸந்தர்ப்பங்களை அறிந்து அவர் தம் முதல் எண்ணத்தை மாற்றிவிட்டார். என்னை இந்த ஸமயத்தில் கைவிடுவதற்கு அவருக்கு மனம் இல்லை. அவர் ப்ரெஸ்பில்லை ஆதரித்துப் பேசுவதாகச் சொன்னார். அந்த பில்லைப்பற்றி விவாதம் நடந்தபொழுது, எவ்வளவு அழகாய் அதை ஆதரித்துப் பேசினாரென்பதை உங்களில் சிலர் மறந்திருக்க மாட்டீர்கள். அதைத்தான் நான் தேசாபிமானம் என்பேன். அதுதான் உத்தமமான தேசாபிமானம்".

## CURIOSITIES.
## விநோதங்கள்.

**4 Children.**

4 பிள்ளைகள்.—இங்கிலாந்தில் ஒரு பிரஸவத்தில் 3 பெண்ணும் 1 ஆணும் பிறந்ததாக ஒரு ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது.

**Elephant's Milk.**

யானைப் பால்.—இப்பால் பால்களெல்லாவற் றுள்ளும் மேம்பாடுடையதாம்; இதிலிருக்கும் நீர் மிக அற்பமாம்; வெண்ணெயும் சீனியும் மற்றப் பால்களி லும் மிகுதியாக உள்ளனவாம். இது நறுமணமும் நற்சுவையு முடையதாம்.

**A Big Cave.**

ஒரு பெருங் குகை.—அமேரிக்காவின் ஐக்கிய மாகாணத்திலுள்ள ஒரு மலையில் 64-மைல் தூர முடைய குகை யொன்றிருக்கிறதாம்; இதுவே உல கத்துள்ள குகைகளில் பெரியதாம்.

**Letters.**

தபாற்கடிதங்கள்:—உலகம் முற்றும் ஒரு வரு ஷத்தில் ஏறக்குறைய 1,200 கோடி கடிதங்கள் எழு தப்படுகின்றனவாம். தினந்தோறும் எழுதப்படுங் கடி தங்களின் தொகை 3-கோடியே 30-லட்சமாம்.

**Fourteen Thousand Nights.**

பதினாலாயிரம் இரவு.—போல்ஷல் என்ற ஊரில் மிஸ் ஹாரியட் ஏக்லிக் என்னுமொரு பெண், தான் இறக்கும்வரையில் ஒரு இரவாவது தான் பிறந்த வீட் டுப் படுக்கை அறையை விட்டு வேறெங்கும் போய் உறங்கினதில்லையாம். அவள் 62 வது வயதில் மரண மாயினள். ஆகவே 14 ஆயிரம் இரவு ஒரே யிடத்தில் உறங்கினதாய்க் கணக்கெடுக்கப்படுகிறது.

**Animal Students.**

மிருகமாணக்கர்கள்.—கான்ஸாஸ் யூனிவர்ஸிட்டி யில் 3 நாய்க்குட்டிகள் மாணக்கர்களாகச் சேர்க்கப்ப ட்டிருக்கின்றனவாம். இவைகளுக்குத் தோழர்களாக மால்டா தேசத்துப் பூனையொன்றும், புல்டாக் ஒன்றும், ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ப்ரொபஸர். பி.வி டாகரே என்பவர் இந்த மாணக்கர்களுக்கு உபாத்தி யாயராக இருந்துவருகிறார். இவர், கீழ்த்தரமிருகங் களான மேற்படி மாணக்கர்களுக்கு, விஷயங்களைக் கற்றுக்கொள்ளவும் கற்றதை நினைப்பதற்கும் சக்தியு ண்டா வென்பதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு முயற்சித்து வருகிறார்.

**A Military Dog.**

ஒரு ராணுவ நாய்—பிரான்சு தேசத்தின் தென் பாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் 22-வது கலோ னியல் ரெஜிமெண்டில் "பத்தாயோன்" என்ற ஒரு நாய் ஸார்ஜெண்ட் பதவிக்கு உயர்த்தப்பட்டு மொ ராக்கோ சண்டை மெடலும் பெற்றிருக்கிறது. அந்த நாயும் "பெர்ம்போன்" என்ற வேறோர் நாயும் ஷை பட்டாளம் துலோன் பட்டணத்தில் கப்பல் ஏறு கையில் அதனுடன் கூடப்போய் கஸாபிளான்காவில் கரையிறங்கின. அங்கிருந்து ரெஜிமெண்டு சண்டை க்குப் போனபோது ஒவ்வொரு போரிலும் இரு நாய்க ளும் தவறாமல் இருந்து போர்ச்சேவகர்களுக்கு உதவி செய்துகொண்டிருந்தன. கடைசியாய் ஒருநாள் "பெர்ம்போன்" என்ற நாய் சண்டைமுனையில் குண்டுக்கு இரையாயிற்று. அதற்கு மிலிட்டெரி அடக்கம் மிகச் சிறப்பாய் நிறைவேற்றப்பட் டது. "பத்தாயோன்" நாயோவெனில் அதிக அதிஷ்டசாலி யானபடியால் அச்சண்டையிற் தப் பித்துக்கொண்டது. சண்டை முடிந்தபின் அதை ஸார்ஜெண்ட் பதவிக்கு உயர்த்தி அந்தப் பதவிக்கு அடையாளமான சரிகைக் கோடுகளையும் மொ ரோக்கோ சண்டை மெடலையும் அதன் கழுத்தில் கட்டி யிருக்கிறார்கள்.

**A Dishonest Gentleman.**

நாணயமற்ற ஒரு துரைமகன்.—பார்க்ஷைர் மாகா ணத்தில் ஒரு துரைமகன் செலவுபண்ணுகிறதற்குக் கையிற்போதுமான பணம் இல்லாவிட்டாலும் ஒரு குதிரைவாங்கவேண்டுமென்று ஆசித்துக்கொண்டிருந் தான். கடைசியாய் ஒரு குடியானவனிடத்தில் தான் அபேட்சித்த பிரகாரம் ஒரு குதிரையிருக்கக்கண்டு அவனிடத்திற்போய் 25 பவுனுக்கு விலைதீர்த்துக் கொண்டு 'இதோ பதினைந்துபவுன், இப்போது இதை வாங்கிக்கொள், மீதிபத்துப்பவுனுக்கு என்மேல் கடனாயிருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு குதிரை யைத் தன் வீட்டுக்குக் கொண்டுவந்துவிட்டான். சில மாதங்கள் சென்றபின் குடியானவன் துரைமகன் வீட்டுக்குப்போய்ப் பாக்கிப் பணத்தைத் தரும்படி யாய்க் கேட்டுக்கொண்டான். அதற்குத் துரைமகன் "நான் பணங் கொடுத்தபோது என்னசொல்லிவிட்டு வந்தேன்? பத்துப்பவுன் என்மேற் கடனாயிருக்கட்டு மென்றல்லவா? நான் அப்பணத்தைச் செலுத்திப்போ டுவேனானல் நான் எப்படி உனக்குக் கடன்காரனா யிருக்கக்கூடும்?" என்றான்.

## HINTS AND RECIPES.

### யுக்திகளும் முறைகளும்.

**Remedy for Scorpion Sting.**

தேள் கொட்டுக்கு மருந்து.—தேள் கொட்டியவுடன் கொட்டிய இடத்தில் சிறிது புளியையும் அதேயளவு சுண்ணாம்பையுங் கலந்து வெண்ணெய் போலாக்கித் தடவினால், விஷம் 5 நிமிஷத்திற்குள் இறங்கிவிடுமாம்.

**Remedy for White Ants.**

கறையான் தொலைக்க மருந்து.—நன்றாய்க் கொதிக்கும் வெந்நீரிலே சிணுக்காரத்தைக் கரைத்துப் பொந்திலூற்றிவிடக் கறையான் நாசமாகுமாம். பொட்டுப்பூச்சி வலைநெய்யு மிடங்களில் இதை யூற்றிவிட்டடாலும் அது பயந்து ஓடிவிடுமாம்.

**Cleaning Playing Cards.**

சீட்டுகளைச் சுத்திசெய்தல்.—ஓர் துண்டு துணியைச் சிம்மணி எண்ணெயில் நனைத்து சீட்டின்மேல் ஜாக்கிரதையாகத் துடைக்சவும். பிறகு, சீட்டின் மேல் கொஞ்சம் டால்க் பவுடரைத் தூவிச் சிம்மணியெண்ணெய் ஆவியாகப் போகும்வரையில் அதைக் காற்றோட்டத்தில் வைக்கவும். கடைசியில் சீட்டுகளை யெடுத்துப்பார்த்தால் புதிதாக இருக்கும்.

**Remedy for Guinea Worm.**

நரப்புச் சிலந்திக்கோர் சிகிச்சை.—நன்றாக வெந்த கற்சுண்ணாம்புக் கட்டிகளை வாய்சிறுத்த ஓர் கலசத்துக்குட்போட்டு, அவை மூழ்குமளவு தண்ணீர் விட்டால் ஆவி புறப்படும். அந்த வாயில் நரம்புவரும் புண்வாயைப் பொருத்தி ஒராளைக்கொண்டு நன்றாய் அணைத்துப் பிடித்துக்கொள்ளவேண்டியது. வெகுநாள் படும் கஷ்டம் அந்த ஆவி அடங்கினவுடன் நின்றுபோகும். அதனோடு அந்நோயின் வேகங் குறைந்து அறுப்புண்ட சுரைக்கொடிபோல உண்டாய்விடுகிறது. இப்படிச் செய்து கண்ட ஒருவர் ஒரு பத்திரிகையி லெழுதுகிறார்.

**How to Prepare Guava Jelly.**

கொய்யாப்பழப்பாகு பாகம் பண்ணும் விதம்.—கொய்யாப்பழங்களிற் சிலவற்றை அழுக்கில்லாமல் நீரில் கழுவி, ஒரு ஜாடியிலிட்டு பழங்களைத்தாழ்த்தி ஒரு அங்குல உயரம் வரையில் நிற்கத் தக்க அளவு நீரூற்றி நெருப்பில் இட்டுக் கரையும் வரையும் அவித்துக், கரைந்தபின்பு அரிகண்ணுள்ள சீலையிலிட்டு வடித்துத்,தோலையுங் கொட்டையையும் நீக்கி, மிகுந்திருக்கும் நீரை அளந்து ஆறுபங்கானால் $6\frac{1}{2}$-பங்கு சீனி சேர்த்து, சிறுநெருப்பிலிட்டு சிறிது எலுமிச்சம்புளியும் அளவாகச் சேர்த்துக் கொதிப்பிக்க ருசியான பாகாகின்றது.

**To Stop the Creaking of Doors.**

கதவுச் சத்தத்தை நிறுத்த.—கதவைச் சாத்தும் பொழுதும் திறக்கும்பொழுதும் உண்டாகும் சத்தத்தை நிறுத்த கீல்களில் கொஞ்சம் எண்ணெயைத் தடவவும், அல்லது கதவு முனைகளில் ஸோப்பைத் தேய்க்கவும். பீரோ ட்ராயர்கள் ஸரியாக இழுக்கவும் சாத்தவும் முடியாதபக்ஷத்தில் அவைகளின் முனைகளில் ஸோப்பைத்தேய்க்கவேண்டும். சக்கரம்போட்ட நாற்காலி, மேஜைபோன்றவைகளிருந்தால் கொஞ்சம் எண்ணெயைச் சுழலும் சக்கரங்களிற் தடவினால் அவைகள் லகுவாய்ச் சுழலும். சக்கரங்கள்சுழலுமிடத்தில் எண்ணெயைத் தடவவேண்டுமே தவிர வெளிப் பக்கங்களில் தடவக்கூடாது.

**Aloe-Vera Plant.**

ஆளிவிதை.—நமக்கு ஜுரம் அதிகரித்து விட்டால் நலிது மண்டையில் பனிக்கட்டியைக் கட்டி வைத்து உஷ்ணத்தை தணிக்கவேண்டி வருகிறது. அப்படிப் பனிக்கட்டி அகப்படாவிட்டால் அதற்குப் பதிலாக ஆளிவிதைச் செடியை உபயோகிக்கலாம். இதற்கு ஓர் உதாரணம் கூறுவதென்னவெனில் "உன்னுடைய மகளுக்கு ஜுரம் அதிகமாயிருந்தபோது பனிக்கட்டிக்காக அனேக இடங்களில் தேடியும் அகப்படவில்லை. இந்து ஆளிவிதைச் செடியை வைத்துப் பார்த்ததில் கொஞ்சநேரத்திற்கெல்லாம் உஷ்ணம் 104 டிகிரி யிலிருந்து 102 டிகிரிக்கு ஒரே தரியாய் இறங்கிவிட்டது. குழந்தையும் சௌக்கியமாக விருக்கிறது." இத்தகையான செடியை உபயோகிக்கும் விதம் யாதெனில் "முதலில் ஆளிவிரையின் தோலை உரித்து விட்டால் உள்ளிருக்கும் தசை பனிக்கட்டி போலவே யிருக்கும். பிறகு அதை யெடுத்து காலையில் தலையில் கட்டிவிட்டு விசிரிக்கொண்டே யிருந்தால் சாயந்திரம் குளுமையாகவே யிருக்கும். பிறகு அதைவிட்டு புதிதாக இரவில் கட்டினால் அடுத்த நாள் காலைவரையில் சீதளமாகவே யிருக்கும். இவ்விதச்செடி எங்குமகப்படும்,

# ECONOMIC LITERATURE.
## பொருளாதார ஸம்பந்தமான பிரசுரங்கள்.

### GREEN LEAF MANURE AND GREEN MANURING.

BY
RAO BAHADUR J. DHARMA RANGA RAJU.

**பச்சிலை எருவும் பசுந்தாள் பயிரும்.**

(தேவாரமெட்டு.)

1. தழையெருவின் தன்மையைநீர்
தயவுடனே கேட்டறிவீர் ;
மழைவெயில்போல் வான்பயிர்க்கு
மாநிலத்தில் மாக்ஷிதரும்.

2. பிராணிகட்கும் பயிர்களுக்கும்
பெயர்ந்தோடி நடப்பதெனுந்
த்ராணிதனில் பேதமின்றித்
தெரியமரு பேதமிலை.

3. பலஜீவ ராசிகள்போல்
பயிர்ச்செடிகள் உணவருந்தி,
சிலகாலம் வளர்ந்து, பலன்
சேர்தந்து, சிதைவடையும்.

4. பயிர்வகைகள் வளர் தரவே
பயிருணவே காரணமாம் ;
வயிறுவாய் எயிறின்றி
வேவழியே உணவருந்தும்.

5. ஒருசெடியை அறஉலர்த்தி,
ஒட்டின்மேல் எரித்திட்டால்,
பெரும்பாகம் எரிந்தொழியும் ;
பிடிசாம்பல் பின்னிற்கும்.

6. எரிந்ததுதான் இந்திரியப்
பொருளென்பர் ; எரிந்ததன்பின்
இருந்ததநிந் த்ரியப்பொருளென்
றியம்பிடுவர் இயல்பறிந்தோர்.

7. புகைந்தொழியும் பொருள்களைத்தான்
புகல்கின்றேன், கரிமூலம்
வகைப்ராண, ஜல, உப்பு,
வாயுவுங்க்ளோ ரைன் ஆகும்.

8. படிக்கார மூலமுடன்
பாஸ்கரம், சாம் பற்காரம்,
படிகத்தின் மூலம்அயம்,
பகரும்கார் தப்போலி.

9. கந்தகமும், உவர்க்காரம்,
காந்திதரும் மகனீஸ்யம்,
இந்தவகை ஒன்பதுமே
இயம்புமதிந் த்ரியமாமே.

10. இந்திரியப் பொருள்கடமை
இலைவழியும் வேர்வழியும்
அந்தரமாம் ஆகாய
மண்டலனின் றவையருந்தும்.

11. அனிந்த்ரியப் பொருள்களெலாம்
அவைவளரும் நிலத்தினிலே,
கனிந்துவரும் ; தண்ணீரில்
கரைந்துருக வேர்அருந்தும்.

12. இப்பொருள்கள் இயல்பினிலே
இருக்க நிலம் வளமுளதாம் ;
தப்பியிரண் டொன்று குறைந்தால்
பயிர்கள் தழைக்காவாம்.

13. பலவருஷம் பயிர் செய்தால்
பயிருணவு குறைவடையும் ;
நிலவளத்தின் குறையையெரு
வால்நிறைத்தல் நேர்மையதாம்.

14. ஒருநிலத்தில் பயிருணவு
ஒருகோடி இருப்பினுமே,
சரியாகச் சமைந்தன்றி
தருபயிர்க்குப் பயனிலவாம்.

15. தானியங்கள் தீயுலையில்
வெந்துணவாய்ச் சமைவதுபோல்,
மர்னிலத்தில் பயிருணவு
மாறிநிதம் பக்குவமாம்.

16. வெயில், காற்று, மழை, யுழவு,
வேர்மணிகள், வெம்புழுவால்,
பயிருணவும் பன்னாளில்
பக்குவயாய்ச் சமைந்துவரும்.

17. பக்குவமாம் பயிருணவு
பன்னிலத்தில் பகுமட்டாம் ;
இக்குறைவை இயன்றளவில்
எருவகையால் ஈடிழைப்பர்.

18. எருக்குலங்கள் பயிருணவாம் ;
இயல்பாகும் இலைஎருவே
தருக்குலங்கள் தழைப்பதற்குத்
தக்கதெனத் தாமறிவீர்.

19. புற்பூண்டே யுணும்புல்வா
யைக்கொல்லும் புலிபலம்போல் ;
கற்பாறைத் தூளினுமேல்
கனதழையின் பயன்பயிர்க்கே.

20. பயிர்ச்செடியின் உணவுகளில்
பத்திலொரு பாகந்தான
வயலிலிருந் தருந்துவது ;
மற்றையதை வான்தருமே.

21. தாவரங்கள் சரியமிலம்
தம்மிலையால் தாமருந்தித்
தீவிரமாய்த் திகழொளியில்
தனிப்பொருளாய்த் தாம்பிரிக்கும்.

22. பிரித்ததொரு பிராணனெனும்
வாயுவைத்தான் பின்போக்கி,
கருத்தநிறக் கரிமூலம்
காத்துத்தாம் கனம்வளரும்.

23. ஜலம் ப்ராண வாயுஜல
வாயுகலப் பானபொருள்,
ஜலங் கொடுக்கும் பல பயிர்க்கும்
ஜலப்ராண வாயுவையே.

24. பயிருணவுப் பொருள்களிலே
பாஸ்கரம்சாம் பற்காரம்

உயிராகும் நைட்ரோஜன்
உபயோம் மிகப்பெரிதாம்.

25. தாவரங்கள் நைட்ரோஜன்
தனிவாயுத் தாமருந்தா,
ஆவியுறும் அம்மோன்யா
அலதுவெடி யுப்பருந்தும்.

26. உப்பினங்கள் உண்டாக
உழுநிலத்தில் உபகரணம்
வெப்பமுடன் அப்புமிகு
குப்பையும்வேர் சிற்றுயிர்கள்.

27. களிக்காலில் தழைமிதித்தால்
கனங்குறைந்து ம்ருதுவடையும்
எளிதிலதை உழக்காட்டும்
இயல்பினிலே நீர்வடியும்.

28. மணற்பாங்கில் தழைசேர்க்கில்
மண்ணிறுகிக் கறுப்பாகும்
கணக்குடனே மண்ணீரம்
காத்துமிக வளமடையும்.

29. களர்நிலத்தில் தழைகலத்தல்
கண்ணுக்கே தெரியாத
அளவில்லா நீர்க்குழல்கள்
அவணெரிந்தே அழிவடையும்.

30. அதனாலே அழல்நீர்பின்
அந்நிலத்தில் பொங்காமல்
பதமுடனே உள்தங்கி
பாரின்கீழ் படிந்தோடும்.

31. மழைக்காலம் நெல்நாற்று
மாண்வயலில் நடும்போது
தழை மிதித்தால் இலையழுகித்
தாங்கும்சூ டுண்டாக்கும்.

32. தழைப்பயிரை ஓர்நிலத்தில்
தகைமையுடன் பயிரிட்டால்
செழுமைதரும் நைட்ரோஜன்
சிறுமணிகள் வேர்நிரம்பும்.

33. இம்மணிகள் தன்மைகளும்
இவற்றினுள சிற்றுயிரும்
செம்மணி லேவியாபித்துச்
செய்பண்பும் சிலர்அறிவார்.

34. குலக்கொடியை இழக்கினும்தன்
கொள்காலை இழப்பதற்கு
அலக்கணுறும் எனுமொழியும்
அறையக் கேட்டறந்திலீரோ.

35. காய்ப்பயிரின் தாளடியில்
கதிர்ப்பயிர்கள் செழிப்புறுதல்
தாய்ப்பால்போல் வளமூட்டும்
தழையொடுவேர் மணியாலும்.

36. தக்கைப்பூண் டெனும்செட்டி
தான் விதைக்கில் களர்நிலத்தில்
மிக்கவுநன் றாய்வளர்ந்து
மேற்பொங்குங் களர்போக்கும்.

37. வயல்களறுப் பாகுமுன்னர்
வாய்ப்பாகும் ஈரத்தில்
பயறுவிதைப் பதுபோலப்
பசுந்தழையைப் பயிரிடுமின்.—கிருஷிகன்.

## TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

**Good Advice.**

நல்ல வார்த்தை.

அக்கறையில்லான் அலுவலுக்குதவான்
ஆத்திரவேலை அனர்த்தமாய் முடியும்
இல்லிற் சண்டைக் கிடங்கொடுக்காதே
ஈரமில்லாத இருதயம் கல்லாம். 1

உழைப்புள்ளோர்க்குப் பிழைப்பு நலமாம்
ஊர்ப்பகை விளைத்தல் உள்ளங் கலக்கும்
எளியோரைக் கண்டு ஏளனஞ் செய்யேல்
ஏக்கத்தைக் காட்டிலும் தோர்ப்பது நலமாம் 2

ஐக்கியநடத்தை சௌக்கியம் விளைக்கும்
ஒற்றுக்கேட்பது முற்றும் பிசகு
ஒய்வொழிவின்றி உழைப்பது கெடுதி
ஔவை வசனம் அனுசரி நித்தம் 3

கடன்படு வழக்கங் கண்ணியங்குறைக்கும்
காடினியம்நீக்கி காருண்யம் வைப்பாய்
கிரமமுறைவழுவு குறைவுண்டு பண்ணும்
கீலகஞ்செய்வது கீழோர்க்குரித்து. 4

குடிப்பவன் வம்சம் கெடுமோர் நொடியில்
கூத்திலிச்சை கொடுத்திடும் பிச்சை
கெடுதிநினைப்பவன் சடுதியிற்கெடுவான்
கேவலச்சொல்லை கேட்பதிற்பழகேல். 5

கைதூக்கி விடுவாய் கஷ்டமுள்ளோரை
கொடுப்பதைத் தடுத்தல் கொடியபாவம்
கோடிப்பணமும் ஓடிப்போம் க்ஷணத்தில்
கௌவைச்சொல்லைக் கனவிலும் நினையேல். 6

சபையின்சாரம் சாஸ்திரவிசாரம்
சாடிச்சொல்லைச் சற்றும்கேளேல்
சிறியனும் பெரியன் நன்னடையுடையான்
சீரியர்சிநேகம் சிறப்பைக் கொடுக்கும். 7

சுருக்கியெழுதிப் பெருக்கிப்போதி
சூரனாவான் குரூரனாகான்
செய்கைநலத்தால் ஜன்மம்சிறக்கும்
சேர்க்கைசெய்முன் தீர்க்கமாய்சோதி. 8

சொத்தைக்காட்டிலும் வித்தைவிசேஷம்
சோதனைபலத்தால் நீதிவிளங்கும்
சௌந்தரியத்திலுஞ் சாந்தமே சிலாக்கியம்
ஞானவழியை ஞாபகத்தில்வை. 9

இரஞ்சித போதினியில் டி. கே. ஆர்.

## MISCELLANEOUS NEWS.

### நா நா ஸங்க தி·

**Tiruppur Cattle Show.**

திருப்பூர் கால்நடைக் காட்சி.—இம் மேமாதம் 31உ முதல் 4 நாள் பரியந்தம் திருப்பூரில் கோயம் பத்தூர் டிஸ்டிரிக்ட் வியவஸாய சங்கத்தார் ஆதரவி ஞல் கால்நடைக்காட்சி யொன்று நடைபெறும்.

**Agricultural Education.**

விவஸாயக் கல்வி.—இலங்கையிலிருந்து அனுப் பும் நாலுபேரைக் கோயம்புத்தூரிலுள்ள விவஸாய கலாசாலேயிலே வைத்துக் கல்வி கற்பிக்க சென்னை கவர்ன்மெண்டாராலே இயலாமையால் அவர்கள் பூனுவிலேயுள்ள கலாசாலேயிலே கல்விபெற ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

**Late Pandithorai Thevar's Estate.**

காலஞ்சென்ற ஸ்ரீமான் பொ. பாண்டித்துரை சாமித் தேவரவர்களின் எஸ்டேட்.—4 லட்ச ரூபாய் வரையில் கடன் இருப்பதால் கோர்ட் ஆப் வார்ட்ஸ் அதை மேற்பார்க்க முடியாதென்று மறுத்து விட்டது. ஆதலால் சிலரைக் கமிட்டியாக ஏற்படுத்தி அவர்களுடைய மானேஜ் மெண்டில் இந்த எஸ் டேட், தேவரவர்களின் ஸ்வீகார புத்திரர் மேஜரா கும் வரையில், நிர்வகிக்கப்படு மென்று அறிகிறோம்.

**The Bombay Pronvincial Conference.**

பம்பாய் மாகாண கான்பரென்ஸ்.—பம்பாய் மாகாண கான்பரென்ஸ் அடுத்த ஸெப்டம்பர் மாதத் தில் நடக்குமென்று காண்கிறது. பம்பாய் ப்ரெஸி டென்ஸி அஸோஸியேஷனைச் சேர்ந்த நிருவாக ஸபையார் ஸர் பி. மேடாவின் ஆபீஸில் சில தினங் களுக்கு முன்னே மீட்டிங்குகூடி பம்பாய் மாகாண கான்பரென்ஸை அடுத்த ஸெப்டம்பர் மாதத்தில் நட த்த வேண்டுமென்று தீர்மானித்து அதை நடத்துவ தற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஒரு பலத்த கமிட்டியையும் ஏற்பாடு செய்தார்கள்.

**The Srigeri Swami.**

சிருங்கேரி ஸ்வாமி.—இப்போது விதேக முக்தி யடைந்த சிருங்கேரி மடத்து ஆசாரிய ஸ்வாமிகளின் ஞாபகார்த்தமாக அவரை ஸமாதி செய்தவிடத்தில் 50,000 ரூபாய் செலவுசெய்து கோயிலொன்று கட்ட உத்தேசித்திருக்கிறார்கள். அதற்காக இப்போது பலர் பொருளுதவி செய்து வருகின்றனர். ஷை மடத் தில் இப்போது ஆசாரிய ஸ்வாமியாக நியமிக்கப்பட் டிருக்கிறவருக்கு சந்திரசேகர பாரதி ஸ்வாமிக ளென்று பெயரிடப்பட்டிருக்கிறது. இவ்வாருக இவர்க்கிட வேண்டுமென்பது இதற்கு முன்னிருந்த ஸ்வாமிகளது அபிப்பிராயமாம்.

**Memorial to Mr. J. N. Tata.**

மிஸ்டர் டாடாவின் ஞாபகச் சின்னம்.—காலஞ் சென்றுவிட்ட மிஸ்டர் ஜே. என். டாடா பங்களூரில் சாஸ்திர ஆராய்ச்சிச் சாலேயொன்றை ஸ்தாபித்து அழியாப்புகழ் படைத்திருப்பது நேயர்கள் அறிந்த விஷயம். அவருடைய ஞாபகச்சின்ன உருவச்சிலே பம்பாய் போரி பந்த. ல் ஸமீபத்தில் ஸர். பி. மேடா வேண்டிக்கொண்டபடி பம்பாய் கவர்னர் ஸர் ஜார்ஜ் க்ளார்க்கால் திறந்து வைக்கப்பட்டது. அச்சமயம் பம்பாய்க் கனவான்களில் அநேகர் ஆஜராயிருந்தார் கள். முதலில் ஸர் பி. மேடாவும் அப்புறம் ஸர் ஜார்ஜ் க்ளார்க்கும் மிஸ்டர் டாடாவின் அருமை பெருமை களை யெடுத்துச் சொன்னார்கள்.

**Persons Drowned with the 'Titanic.'**

'டிடானிக்' கப்பலில் மூழ்கினவர்கள்.—இந்த மாஸத்தில் டிடானிக் என்னும்ஒரு பெரிய புதுக் கப்பல் முதல் யாத்திரையிலேயே மூழ்கிப் போய் விட்டது. 'டிடானிக்' கப்பலில் மூழ்கிப்போனவர்கள் இத்தனை பேரென்றும் தப்பிப்பிழைத்தவர்கள் இத் தனைபேரென்றும் ப்ரிட்டிஷ் காமன்ஸ் ஸபையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, மிஸ்டர் பக்ஸ்டன் பினவருமாறு சொன்னார்.

| பிரயாணம் பண்ணின வர்கள் | | தப்பிப் பிழைத்தவர்கள். |
|---|---|---|
| முதல் வகுப்பில் | | |
| 173 | புருஷர்கள் | 58 |
| 144 | ஸ்திரீகள் | 139 |
| 5 | குழந்தைகள் | 5 |
| இரண்டாம் வகுப்பில் | | |
| 160 | புருஷர்கள் | 13 |
| 93 | ஸ்திரீகள் | 78 |
| 24 | குழந்தைகள் | 24 |
| மூன்ரும் வகுப்பில் | | |
| 454 | புருஷர்கள் | 55 |
| 179 | ஸ்திரீகள் | 98 |
| 76 | குழந்தைகள் | 23 |
| வேலேக்காரர்கள் | | |
| 785 | புருஷர்கள் | 189 |
| 23 | ஸ்திரீகள் | 21 |
| 2206 | மொத்தம் | 703 |

ஆகவே 1503 பேர் மூழ்கிப்போனார்கள். டைடானிக் கப்பல் மூழ்கியவிடத்தில் கடலின் ஆழம் இரண்டு மைலாம். அட்லாண்டிக் கடலில் ஐந்துமைலாழமும், பஸிபிக் மஹாஸமுத்திரத்தில் ஆறுமைல்ஆழமும் சில விடங்களிலிருக்கின்றனவாம். இவ்வாருய் ஆழமுள்ள விடங்களெல்லாம் பூமியின் அருகேயேயிருக்கின்றனவாம்.

**Cotton Cultivation in the U. P.**

ஐக்கியமாகாணங்களில் பருத்தி ஸாகுபடி.—ஐக்கியமாகாணங்களில் பருத்திப் பயிர் ஸாகுபடியை விருத்தி செய்வதைக்கருதி அந்த மாகாண கவர்ன்மெண்டார் ஸமீபத்தில் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிருர்கள். அந்த உத்தரவில் சென்ற 10 வருஷகாலமாய் பருத்திப்பயிர் ஸாகுபடி அந்த மாகாணங்களில் விருத்திமுகம் காட்டி வந்திருக்கிறதென்றும், ஆனல் பண்டல் கண்டில் மட்டும் அப்பயிரின் ஸாகுபடி குறைந்துபோயிருக்கிறதென்றும், அந்த மாகாண விவஸாய இலாகா அதிகாரிகள் பரித்திச்செடிகள் நீண்ட தண்டுகளோடு கூடி வளர்வதற்கு என்ன உபாயம் செய்யலாமென்று யோஜித்துக்கொண் டிருக்கிருர்களென்றும், எகனமிக் பாடனிஸ்ட் என்ற உத்தியோகஸ்தர் சோதனைகள் செய்து பார்த்து வருகிருரென்றும், அச்சோதனை வேலை இடையே விட்டுப்போகாதிருக்கும்படி செய்ய இந்தியா மந்திரி அஸிஸ்டெண்ட் எகனமிக் பாடனிஸ்ட் ஒருவரை அவருக்கு உதவியாய் நியமித்திருக்கிருரென்றும், அலிகர் ஜில்லாவில் சோதனை செய்துபார்க்க புதிய பண்ணையொன்று ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதென்றும், கான்பூரில் ஒரு பண்ணை நல்ல விதைகள் விவஸாயிகளுக்குக் கொடுப்பதற்காகவே ஸ்தாபிக்கப்பட்டு வருகிறதென்றும், இவ்விரு பண்ணைகளையும் தவிர பாண்டாவிலும் ஒரு புதுப் பண்ணை ஸ்தாபிக்கப்பட்டு வருகிறதென்றும், நல்ல விதைகள் வேண்டுமென்று வந்து கேட்கும் விவஸாயிகளுக்கு முதல்தரமான விதைகளைக் கொடுப்பதற்காகப் பருத்தி ஸாகுபடி செய்யப்படும் ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் விதைப் பண்ணைகள் ஸ்தாபிக்கப்படுமென்றும், ஒரு பெரிய பண்ணையால் விதைகள் ஸப்ளைசெய்ய முடியவில்லை யென்று தெரியவருவதால் வேறிடங்களில் சிறு பண்ணைகள் ஸ்தாபிக்கப்படுமென்றும் சொல்லியிருக்கிருர்கள்.

**The Charity of Two Hindu Widows.**

இரண்டு ஹிந்து விதவைகளின் தர்மம்.—குஜரத் நாட்டிலுள்ள ஸூரத் பட்டணத்துக்கு அருகில் ஒருகிராமத்தில் வஸித்த இரண்டு ஹிந்து விதவைகள் தங்கள் வாழ்நாளை எந்த நல்ல வழியில் கழிக்கலாமென்று வெகுகாலம் சிந்தைசெய்துகொண்டிருந்தார்கள். பரம ஏழைகளாயிருந்தாலும் உபவாஸம், விரதம், புராண சிரவணம், ஸ்வாமி தரிசனம் முதலிய நல்ல காரியங்களில் காலத்தைப் போக்கலாம். இப்படி ஏழைகளாயிராமல் கொஞ்சம் ஸொத்திருந்தால் அதைத் தானதர்மங்களில் செலவு செய்து புண்ணியம் பெறலாம். ஸ்ரீ காசி முதலிய திவ்விய க்ஷேத்திரங்களுக்குப்போய் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தும் தங்கள் ஆயுளைப் போக்கலாம். இவைகளெல்லாம் ஹிந்துக்களில் வைதவ்யம் வந்த ஸ்திரீகள் பாரமார்த்திகமாய் தங்கள் கதிக்கு உற்றபடி செலவு செய்யும் வழிகள். ஆனல் இந்த ஸூரத் ஸ்திரீகள் இந்த வழியில் தங்கள் காலத்தைச் செலவு செய்வதைவிட தேசத்து நன்மையைக் கோரி ஹிந்து ஸ்திரீகளுக்கு அனுபோகத்தில் நன்மை யுண்டாகும்படியான வழியில் தங்கள் ஆயுளையும் தங்களிடமிருந்த சொற்ப ஸொத்தையும் செலவு செய்வதே நலமென்று கருதி சிறு பெண்களுக்கு என்று ஒரு ஸ்கூலை ஸ்தாபித்தார்கள். இந்தப் பெண்களுக்கு இந்த ஸ்கூலில் வீட்டு வேலைகள்செய்யவும், குழந்தைகளை வளர்க்கவும், பிற்காலத்தில் தங்களைப் போன்ற ஸ்திரீகளுக்கு நன்மை செய்து உழைக்கவும் கற்றுக்கொடுக்கிருர்கள். இவர்கள் பாஷையில் விற்பன்னர்களாக வேண்டுமென்ற நோக்கமில்லை. அனுபோகத்துக்கு வேண்டிய மட்டும் குஜராத்தி, ஸம்ஸ்கிருதம், ஆகிய பாஷைகளைக் கற்று தங்கள் தொழிலுக்கு வேண்டிய ஸுலபமான சாஸ்திர ஞானத்தைப் பெறுகிருர்கள். இந்த ஸ்கூலில் போதகாசிரியர் பெரும்பாலும் ஸ்திரீகளா யிருந்தபோதிலும் ஸ்திரீ போதகர்கள் கிடைப்பது கஷ்டமாயிருப்பதால் வயதுசென்ற புருஷரும் போதகர்களாய் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். இந்த ஸ்கூலை ஸ்தாபித்த இரண்டு விதவைகளும் அந்த கட்டிடத்திலேயே வஸித்து ஸ்கூலை நடத்தி அந்த ஸ்கூலில் சேரும் பெண்களுக்கு நல்ல குணங்களையும் தர்ம சிந்தையையும் பிரயோஜனமுள்ள தொழிலைச் செய்யசக்தியையும் உண்டாக்கி, அவர்கள் இல்லறம் நடத்தி, தேசஸ்திரீகளுக்கு நன்மை செய்துவரும்படி பயிற்றுவித்து வருகிருர்கள்.

## OPENINGS FOR BUSINESS.

## வியாபாரம் நடக்கக்கூடிய இடங்கள்.

[அடியில்கண்ட வியாபாரங்களில் அக்கரையுள்ளவர்கள் "பிழைக்கும் வழி" யையும் அந்தந்தநம்பரையும் குறிப்பிட்டு வேண்டிய விவரங்களுக்கு கல்கத்தாவில் டைரெக்டர் ஜெனரல் ஆப் கம்மர்ஷியல் இன்டெலிஜென்ஸ் என்னும் அதிகாரிக்கு எழுதவும்.]

**Mechanical Ploughs and Reapers.**

உழுவதற்கும் அறுப்பதற்குமான யந்திரங்கள்.—பர்மாவில் ஒருவருக்கு தானியங்கள், முக்கியமாய் நெல், சாகுபடி செய்வதில் உழுவதற்கும் அறுப்பதற்கும் உபயோகமான இஞ்சின்களையும் யந்திரங்களையும் ஸப்ளை செய்யக்கூடியவர்களுடைய விலாஸங்கள் தேவையாம், கேடலாக்கு வேண்டுமாம். (1351)

**Match-boxes.**

நெருப்புப்பெட்டிகள்.—ஸ்வீடன் தேசத்து வியாபாரிகளுக்கு காலியான நெருப்புப் பெட்டிகளை வாங்குபவர்களின் விலாஸங்கள் தேவையாம். (1356)

**Safety Matches.**

நெருப்புப் பெட்டிகள்.—ஸ்வீடன் தேசத்துவியாபாரிகளுக்கு ஸேப்டி தீக்குச்சிகள் வாங்குகிறவர்களின் விலாஸங்கள் தேவையாம். (1357)

**Oil Seeds.**

எண்ணெய் வித்துக்கள்.—ஆஸ்திரியாவில் டிரீஸ்ட்துறைமுகத்தில் ஒருவருக்கு அந்த தேசத்தில் எண்ணெய் வித்துக்கள் விற்க ஆசைப்படுகிறவர்கள் விலாஸம் தேவையாம். (1352)

**Household Goods of Aluminium and Copper**

அலுமினியம், தாம்ரம் இவைகளால் செய்யப்பட்ட வீட்டு ஸாமான்கள்.—ஸ்வீடன் தேசத்து ஸ்டாக்ஹோம் பட்டிணத்தில் ஒரு வியாபாரிக்கு அலுமினியம், தாம்ரம் இவைகளால் செய்யப்பட்ட வீட்டு ஸாமான்கள் விற்கிறவர் விலாஸம் தேவையாம்.

**Fish Oil and Guano.**

மீன் எண்ணெயும் எச்சமும்.—கொச்சியில் மீன் எண்ணெயும் மீன் எச்சமும் தயாரிக்கும் ஒரு வியாபாரிக்கு அவைகளை வாங்கக் கூடியவர்களுடைய விலாஸங் தேவையாம். (1359)

**Kapok.**

இலவம் பஞ்சு.—லண்டனிலுள்ள ஒரு வியாபாரிக்கு இலவம்பஞ்சு எற்றுமதி செய்பவர்களுடைய விலாஸங் தேவையாம். (1360)

**Sporting Goods**

விளையாட்டு ஸாமான்கள்.—தேகப்பயிற்சிக்காக விளையாட்டு ஸாமான்கள் செய்யும் ஒரு லண்டன் வியாபாரிக்கு அவைகளை வாங்குபவர்களுடைய விலாஸங் தேவையாம். (1361)

**Essential Oils and Mica.**

எண்ணெய்களும் அம்பரகமும்.—லண்டனிலுள்ள ஒரு கமிஷன் வியாபாரிக்கு எண்ணெய்களிலும் அப்ரகத்திலும் வியாபாரஞ் செய்பவர்களுடைய விலாஸங் தேவையாம். (1362)

**Rice, Tea, Yarns and Bag.**

அரிசி, டீ, நூல், சாக்குகள்.—துருக்கி தேசத்து முக்கிய நகராகிய கான்ஸ்டாண்டிநோபிளிலுள்ள ஒரு வியாபாரிக்கு அரிசி, டீ, நூல், சாக்குகள் இவைகளை எற்றுமதி செய்பவர்களுடைய விலாஸங்தேவையாம். (1363)

**Shooks for Boxes.**

பெட்டிகளுக்கு சட்டங்கள்.—லண்டனிலுள்ள ஒரு வியாபாரிக்கு பெட்டிகள் செய்வதற்கு உபயோகமான சட்டங்கள் வாங்குகிறவர்களுடைய விலாஸங் தேவை. (1365)

**Hardware.**

இரும்பு ஸாமான்கள்.—ஷெப்பீல்டு நகரத்தில் ரம்பங்கள், அரங்கள், யந்திரங்களுக்கு வேண்டிய கத்திகள் முதலியவைகளை விற்பதற்கு ஏஜெண்டுகள் தேவையாம். (1368)

**Bees wax and Dried suts.**

தேன் மெழுகும், காயப்போட்ட குடல்களும்.—ட்ரீஸ்ட் நகரிலுள்ள ஒரு வியாபாரிக்கு தேன் மெழுகும் காயப்போட்ட ஆட்டுக்குடல்களும் எற்றுமதி செய்பவர்ளுடைய விலாஸங் தேவையாம். (1372)

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் எப்ரல்மாஸம் 10-ம் வ ரிப்போர்ட்டுப்படி

**Produce Market**.--விளைபொருள்கள்

| | | |
|---|---|---|
| | | ரூ. |
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | ... | 17 முதல் 24 |
| கொன்னைப்பட்டை ஷை | | 14 முதல் 16 |
| கடப்பை கடுக்காய் ஷை | ... | 8 முதல் 9 |
| சேலம் ஷை ஷை | ... | 18 முதல் 19 |
| நல்லெண்ணெய் ஷை | ... | 100 முதல் 110 |
| புங்கம் எண்ணெய் ஷை | ... | 70 முதல் 90 |
| எட்டிக்கொட்டை ஷை | ... | 16 முதல் 18 |
| விளக்கெண்ணெய் ஷை | ... | 76-79 |
| கொட்டை முத்து 164 ராத்தல் | | 10-10¼ |
| | | ரூ. அ. பை. |
| பந்தர் பச்சை அரிசி 44 படி | ... | 8 முதல் 9½ |
| நெல்லூர் அரிசி 31 படி | ... | 7½ 7 10 |
| கோதுமை 4 படி | ... | |
| கொள்ளு 195 ராத்தல் | ... | |
| வெங்காயம் (தாட்பத்திரி) பாரம் | ... | |
| ஷை (பல்லாரி) ஷை | ... | |
| பங்களூர் உருளைக்கிழங்கு | ... | |

**Metals.**—உலோகங்கள்.

பித்தளைத் தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷுமம்

| | | | |
|---|---|---|---|
| | | | ரூ. |
| பாரம் | | ... | 233-234 |
| செப்புத் தகடுகள் பாரம் | | ... | 280 |
| செப்புக்கட்டி | ஷை | ... | 240 |
| நாகம் | ஷை | ... | 80 |
| ஷை (உள்ளூர்) | ஷை | ... | 87 |
| ஈயம் | ஷை | ... | 60 |
| காரீயம் | ஷை | ... | 67 |
| வெள்ளீயம் | ஷை | ... | 199 முதல் 200 வராகன் |

**Iron.**—இரும்பு.

| | | |
|---|---|---|
| மருக்கி சட்டம் 2 செ. பாரம் | ரூ. | 23 முதல் 24 |
| சீமை | | 39 முதல் 40 |
| மருக்கி தகடு 6--9, 12—13, | | 24—40 |
| பீப்பாய்க் கட்டு | ... | 27—28 |
| 8 பட்டை எஃகு | ... | 22 |
| எஃகு வில் கட்டு | ... | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 செ, | ... | 22—25 |
| சீமை | ... | 40—46—49 |

## SEASON.

## காலஸ்திதி.

**Rainfall.**

மழை.—1912ஹூ எப்ரல்மீ 1உயிலிருந்து 1912ஹூ எப்ரல்மீ 30உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம்,ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 1·05 | 0·69 |
| வால்டேர் | 0·13 | 0·59 |
| காக்கினடா | ... | 0·35 |
| மசூலிப்பட்டணம் | ... | 0·47 |
| நெல்லூர் | ... | 0·40 |
| மதராஸ் | ... | 0·40 |
| கூடலூர் | ... | 0·83 |
| நாகப்பட்டணம் | 0·03 | 0·56 |
| பாம்பன் | 1·11 | 2·40 |
| கொழும்பு | 9·89 | 12·03 |
| திருவநந்தபுரம் | 3·02 | 4·74 |
| கொச்சி | 4·28 | 5·20 |
| கள்ளிக்கோட்டை | 1·81 | 4·38 |
| மங்களூர் | 0·12 | 1·65 |
| மெர்க்காரா | 3·06 | 2·67 |
| ஐதராபாத் | 1·79 | 0·67 |
| ரெய்ச்சூர் | ... | |
| பல்லாரி | 0·75 | 0·74 |
| கர்நூல் | 0·11 | 0·94 |
| கடப்பை | ... | 0·54 |
| ஹாஸ்ஸான் | ... | |
| பெங்களூர் | 0·05 | 1·26 |
| கொடைக்கானல் | 10·05 | 4·28 |
| உதகமண்டலம் | 2·32 | ... |
| கோயம்புத்தூர் | 0·21 | 1.69 |
| வேலூர் | ... | ... |
| சேலம் | 0·07 | 1·84 |
| திருச்சினப்பள்ளி | 4·91 | 2·06 |
| புதுக்கோட்டை | 0·14 | ... |
| மதுரை | 0·75 | 2·25 |
| திருநெல்வேலி | ... | ... |